# சக்தி

638

323



OFFICE OF L



# உள்ளம் கொள்ளை கொள்ள வெள்ளித்திரையில் விரைவில் வருகிறது!

இந்து தேசத்தில்
இணையற்ற காதல்
நாடகம்

ராஜபுத்திர வீரனின்
தேசீய சரித்திரம்

★

டைரக்ஷன் :

B. சம்பத் குமார்

★

# பிருதிவிராஜன்

★

நடிகர்கள்

| | | |
|---|---|---|
| M.R. சந்தானலக்ஷ்மி | P. U. சின்னப்பா | T. K. சம்பங்கி |
| A. சகுந்தலா | T. S. பாலையா | G. M. பஷீர் |
| P. S. ஞானம் | S. D. சுப்பையா | காளி N. ரத்னம் |
| T. M. ராமசாமி பிள்ளை | T. R. B. ராவ் | & பார்டி |

N. S. கிருஷ்ணன், T. A. மதுரம் முதலியோர்

மதுரை, திருச்சி, தஞ்சாவூர், ராமநாதபுரம்
திருநெல்வேலி, பர்மா, ஆந்திரா & வட
இந்தியா உரிமைகள்

V. S. M. கோபால கிருஷ்ண ஐயர்
புரோப்ரைட்டர்

## ஹரன் டாக்கீஸ்

181, கீழவாசல், மதுரை

புக்கிங்குகளுக்குத் தயார்!

| | | |
|---|---|---|
| வீர ஜகதீஷ் | V. S. M. ராஜாராமையர், K. அரங்கநாயகி, S. S. ராஜாமணி முதலியோர் நடித்தது | பூரண உரிமை |
| மாணிக்கவாசகர் | M. M. தண்டபாணி தேசிகர், N. S. கிருஷ்னன், T. A. மதுரம் முதலியோர் நடித்தது | மதுரை ஜில்லாவுக்கு |
| மீனாக்ஷி கல்யாணம் | M. R. கிருஷ்ணமூர்த்தி, T. பிரேமாவதி, காளி N. ரத்னம் முதலியோர் நடித்தது | தஞ்சாவூர், காரைக்கால் ராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி முதலிய இடங்களுக்கு |

13 MAR 1942
MADRAS





சேலைகளுக்கு
— சிறந்த இடம் —
**N. C. B.**
—கார்னர் ஷாப்—
N. C. பாலுசாமி ஐயர் & சன்
84, நயினியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ்.



CHROMECO AGENCY
NEXT TO GOKHALE HALL






பக்கத்திலிருக்கும் துண்டுப்படத்தில் காண்பதுபோலுள்ள தனது சாதாரணமான தோற்றம் மாறி, இந்த நண்பர் குதூகலித்துச் சம்பாஷிப்பதேன்?

ஒவ்வொரு வேளையும்தான் வெற்றிலை போட்டுக் கொள்ளுகிறார் — ஏன்? .... ஒவ்வொரு நிமிஷமுங் கூடப் போட்டுக் கொள்ளுகிறார்! பின் ஏன் இந்த இரண்டு முகங்களுக்கும் இவ்வித வித்தியாசம்?

REGD. No 1506 அசோகா MILD SCENTED ASOKA ரிஜிஸ்டர்.நெ.1506

ஆஹா! பாக்கின் மாறுதல் உள்ளத்தின் உணர்ச்சியை எவ்வளவு நன்றாக ருசுப்படுத்துகிறது! அகத்தின் மகிழ்ச்சியைப் பிரத்யக்ஷமாய்க் காட்டும் அசோகா முகமெங்கே — போலிப் பாக்கைக் குதப்பும் இதர முகமெங்கே!

**அகத்தின் அழகு முகத்தில் தெரியும்**




## அமிர்தாஞ்சனம் லிமிடெட்

தற்சமயமிருக்கும் யுத்தகால தகரக் கட்டுப்பாட்டின் காரணமாக 'கார்ட் போர்டி'னால் இப்பொழுது அமிர்தாஞ்சன மருந்து பெட்டி தயாராக வேண்டியிருக்கிறதென்பதையும், ஆனால் உள்ளிருக்கும் மருந்தின் தன்மையில் கொஞ்சங்கூட மாறுதல் இல்லை என்பதையும் எண்ணிக்கையற்ற அமிர்தாஞ்சன் அன்பர்களுக்கு அறிவித்துக் கொள்வதுடன், வலிகளைக் குணப்படுத்தும் அமிர்தாஞ்சனுக்கு தொடர்ந்து இனியும் ஆதரவு அளிக்க வேண்டுமென்று கோருகிறார்கள்.



மார்ச் மாதம்
முதல் வாரம்
வருகிருள்
ஸரஸ்வதி ஸினி பிலிம்
லெப்ரெட்ரீ லிமிடெட்
தயாரித்த
K. சாரங்கபாணி
K. மகாதேவன் in
என் மனைவி
with K.R. செல்லம்
M.K. மீனலோசனி
டைரக்ஷன் :-
சுந்தர ராவ் நட்கர்னி
ஸ்டூடியோ: ப்ரகதி மதராஸ்
a FAMOUS TALKIE RELEASE

# சக்தி



## பொருள் அடக்கம்


| | பக்கம் |
|---|---|
| சிங்கப்பூர்ப் படிப்பினை | 42 |
| தியாகம் (பாட்டு,—சுவாமி சுத்தானந்த பாரதியார் | 44 |
| ராஜாஜி பதவி பெற்ருல்—படம் | 45 |
| சுவாமி சுத்தானந்தர்—'ஜேயார்' | 46 |
| பறித்த பூக்கள் | 51 |
| எங்கப்பாவா யிருந்தால்?—'ராம்ஜி' | 52 |
| ஜமீந்தாரிணி (தொடர் கதை) | 54 |
| கார்ட்டூன் கதம்பம் | 57 |
| ஆண்மை தரும் கல்வி—சுவாமி விவேகானந்தர் | 58 |
| இயற்கையின் யுத்த விமானம்—வ. சு. மணி | 60 |
| மலேயாவில் ஜப்பான் நோட்டு (படம்) | 61 |
| காலி வீடு (கதை)—லா. ச. ராமாமிருதம் | 62 |
| சங்கராந்தி—டி. கே. சிதம்பரநாத முதலியார் | 68 |
| முல்லையும் சோகமும்—மு. அருணசலம் | 69 |
| உலகம் கெட்டுப் போச்சு—'வல்லிக்கண்ணன்' | 71 |
| ஆண்டவனும் சாத்தானும்—க. நா. சுப்பிரமணியன் | 73 |
| புத்தக உலகம் | 75 |
| நாகரிகப் பெண்—(பாலர் கதை)—'நீலா' | 77 |
| கடல் (பாலர் பாட்டு)—'உமா' | 78 |
| ஒலியும் ஒளியும் | 79 |



**சந்தா விகிதம்**

உள் நாடு

| | | | |
|---|---|---|---|
| வருடச் சந்தா | 3 | 0 | 0 |
| 6 மாதம் | 2 | 0 | 0 |
| தனிப்பிரதி | 0 | 4 | 0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.




மலர் ௬
இதழ் ௨

விஷு
மாசி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

# சிங்கப்பூர்ப் படிப்பினை

சிங்கப்பூர் விழுந்து விட்டது. சர்ச்சில் அணை கோலிவிட்டார். எதற்கு? தமது சர்க்கார் விழாதிருக்க. "எல்லாம் போச்சு. என் மேல் நம்பிக்கை வை" என்கிறார் அவர். எதற்கு? நிஜம் சொல்லுகிறா ரல்லவா? அதற்காகப் போலிருக்கிறது. மேலும் அவர் கூறுகிறார் "பாருங்கள், ஜான்புல் ஸர்க்கஸை. மென்னியிலே ஜெர்மனி; வயிற்றிலே இத்தாலி—இரண்டும் அமுக்கும் போது, ஜப்பான்கார முட்டாள் வந்து தாக்கினால் என்ன செய்வது? ஒண்டிக்கொண்டி வந்து பார்த்திருந்தால் தெரியும்" என்ற கருத்தில். மீண்டும் மீண்டும் அவர் சொல்வதன் பொருள் இதுதான்: இங்கிலாந்து எந்த நிமிஷமும் ஆபத்தி லிருப்பதால், தாங்கள் பூரண பலத்தோடு வெளியே சென்று, மலாயாவைக் காப்பாற்ற முடியவில்லை என்பதே அது. இதன் உட்கருத்து என்ன? ஏகாதிபத்தியத்தின் ஜீவரட்சகன் பிரிட்டன் ஒன்றுதானா? அங்கங்கே உள்ள மக்கள் தங்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளச் சக்தி யளிப்பது, ஏகாதிபத்திய முத்தண்ணாவின் கடமை யில்லையா? ஏகாதிபத்திய பாஷையிலேயே சர்ச்சில் இன்னும் பேசிக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏன் நேரிட்டது? அது புத்தி சாலித்தனந்தான் ஆகுமா?

### துப்பாக்கியா, விளக்குமாறா?

சிங்கப்பூர் விழுந்ததனால், ஆஸ்திரேலியா சல சலக்கிறது. யுத்த ஆரம்பத்திலே, கிரீட்டுக்கும் கிரீஸுக்கும் அதன் படைகள் சென்று வீரமாய்ப் போராடின; பிரிட்டனுக்கும் சென்றன. இன்னொரு சத்ரு தன் கதவடியில் வந்து இப்படி நிற்பான் என்று அது அன்று எண்ணவில்லை. நிலைமை அடியோடு மாறிவிட்டது. ஆஸ்திரேலியா பழங்கணக்குப் பார்க்கிறது. ஆஸ்திரேலிய யுத்த தளவாட மந்திரி மிஸ்டர் மாக்கின் சொல்லும் ஒரு விஷயம் அவர்களுடைய மனோபாவத்தைக் காட்டுகிறது. ஊரிலே புதிய தொண்டர் படைகளும் சேனாவீரரும் தயாரானார்கள். அவர்களுக்குப் பயிற்சி யளிக்கத் துப்பாக்கிகள் வேண்டாமா? அவைதான் இல்லையாம். மிச்சம் மீதி இருப்பிருந்த துப்பாக்கிகளெல்லாம் பிரிட்டனுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டனவாம். ஆகையால், துப்பாக்கிகளுக்குப் பதில் விளக்குமாற்றுக் கட்டைகளை வைத்துக் கொண்டு, ஆஸ்திரேலிய சிப்பாய்கள் பயிற்சி செய்தார்கள் என்கிறார் மாக்கின். விஷயம் தமாஷாய்த் தான் இருக்கிறது! ஆனால், இந்த மாதிரி பயிற்சி பெற்றவர்கள், ஜப்பானிய அசுரர்கள் வரும் போது என்ன செய்வது?




### 'லங்காதகன' யுக்தி

தோற்றுப் பின் வாங்குவோர், 'லங்காதகனம்'—ஊரைச் சுட்டெரித்தல்—நடத்திவிட்டுச் செல்வது, நவீனப் போர்முறைகளில் ஒன்று. நம்முடைய பொருளோ, ஆளோ எதிரி கையில் சிக்கி, அவர்களுக்கு உதவலாகாது. இவ்விஷயத்தில் ருஷ்யா தலை சிறந்து விளங்குகிறது. தான் பிடித்த விஸ்தாரமான ருஷ்யப் பிரதேசங்களில், ஐந்தாம் படை ஆள்களையும் குவிஸ்லிங்குகளையும் ஹிட்லர் தேடித் தேடித் துருவித் துருவிப் பார்த்தாராம். ஒருவர்கூட அகப்படவில்லை யென்று சர்ச்சில் புகழ்கிறார். வேறிடங்களிலோ, குவிஸ்லிங்குகள் அகப்பட்டு விட்டார்கள். இந்த வேற்றுமைக்குக் காரண மென்ன? ருஷிய மக்கள் இது தங்கள் யுத்தம், ராஜ்யம் தங்கள் ராஜ்யம் என்ற உணர்ச்சி கொண்டிருக்கிறார்கள். மற்ற இடங்களிலோ, 'ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன?' என்ற மனோபாவம் ஜனங்களுக்கு. இதை மாற்ற வேண்டாமா? தாங்கள் சுதந்திரர் என்ற உணர்ச்சி மக்கள் அத்தனை பேருக்கும் உண்டாகச் செய்ய வேண்டாமா? இந்திய மக்களுக்கு இவ் வுணர்ச்சி உண்டாக்க, பிரிட்டன் என்ன செய்திருக்

கிறது? ராஜாஜி திரும்பத் திரும்ப இதை இடித்துக்காட்டி வருகிறாரே; சர்ச்சிலின் மனம் துளியாவது மசிந்திருப்பதாய்க் காணோமே; ஏன்?

### லண்டன் கருமி

சிங்கப்பூர் விழுந்தது பற்றி, கல்கத்தா ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகையான 'ஸ்டேட்ஸ் மென்' சொல்லுகிறது: "லண்டனிலே ஓர் அற்பபுத்தி உட்கார்ந்து கொண்டான்; குண்டு துப்பாக்கிகளைக் குவித்து வைத்துக் கொண்டான்; பொன்னை யெல்லாம் கருமியைப் போல் எண்ணிப் பார்க்கலானான்—இந்தக் கருமித்தனம், ஒரு மகத்தான ஏகாதிபத்தியத்துக்குச் சிறிதும் தகாது" என்கிறது அது. படையும் பொருளும் இல்லாமலே சிங்கப்பூர் விழுந்தது என்றே, அது இவ்வாறு கண்டிருக்கிறது. படையும் பொருளும் ஏன் இல்லாமல் போயிற்று? அங்கங்கே உள்ள ஜனங்களை நிராயுதபாணிகளாக்கி, அங்கங்கேயுள்ள வசதிகளைச் சுரண்டி ஏகாதிபத்தியம் வாழ்ந்து வந்தது. தனக்குள்ளடங்கிய நாடுகள் அனைத்தையும் சழத்துவப் பங்காளிகளாகச் செய்துவைத்திருந்தால், ஏகாதிபத்திய முத்தண்ணாவாகிய பிரிட்டன் இன்று இந்தத் துயரை அடையுமா? அந்தத் திக்கற்ற நாடுகள்தான் இப்படித் தவிக்குமா?

### வள்ளலை இழந்தோம்

ஸேத் யமுனாலால் பஜாஜ் காலமானது தேசத்தின் பெரு நஷ்டமாகும். பஜாஜ் ஒரு தர்மப் பிரபு. செல்வர்கள், பொது மக்களின் தர்ம கர்த்தாக்களைப் போல் தங்கள் செல்வத்தை நிர்வகிக்க வேண்டுமென்பார் காந்திஜி. பஜாஜே இதற்குத் தமது உதாரணம் என்று மகாத்மா கூறுகிறார். பஜாஜ், அ. இ. கா. காரியக் கமிட்டி அங்கத்தினர்; பொக்கிஷதார். அவர் எட்டுமுறை, தேசத்துக்காகச் சிறை சென்றார். பல லட்ச ரூபாய்களை, காங்கிரஸின் பல்வேறு நிர்மாண வேலைகளுக்கும் நன்கொடையளித்தார். இத்தகைய வள்ளலை நாம் இன்று இழந்து விட்டோம். அவர் மனைவி ஜானகி பாய், தன்னுடைய இரண்டரை லட்ச ரூபாய் பெறுமான சொந்த சொத்தையெல்லாம் தியாகம் செய்துவிட்டு, தன் கணவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஸேவை செய்யத் தீர்மானங் கொண்டிருப்பது போற்றத்தக்கது. ஜானகிபாய்க்கு நமது உள்ளங் கனிந்த அனுதாபம் உரியதாகும்; அவளுடைய தியாகத்துக்கு நமது வாழ்த்தும் உரியதாகும்.




### சீனத் தலைவர் விஜயம்

சீனரின் இணையற்ற தலைவன் சியாங்-கே-ஷேக். அவருடைய மனைவி ஸ்ரீமதி சியாங், ஒரு வீரப் பெண்மணி. சீன ராணுவமும் இந்திய ராணுவமும் ஒற்றுமையுடன் போர் நடத்துவதெப்படி என்று ஆராயவே, சியாங் முக்கியமாய் இங்கே வந்தார். அடுத்தபடியாக, பிரபல இந்தியத் தலைவர்களைச் சந்திக்கவும் அவர் விரும்பினார். ஜவஹர்லால் நேரு, சியாங் தம்பதிகளின் நெருங்கிய நண்பர். ஆகையால், வந்தவுடனே, நேருவை, சியாங் நேரே அழைத்து விட்டார். மகாத்மாவுக்கு இரண்டு அழைப்புக்கள். ஒன்று நேருவின் மூலம்; மற்றது வைஸிராயின் மூலம். ஜனாப் ஜின்னாவுக்கு வைஸிராய் மூலம் ஓரழைப்பு. சம்பாஷணைகளும் நடந்தன. சியாங் ஒரு தேச சர்க்காரின் தலைவன். இந்திய சர்க்காரின் விருந்தினராய் வந்திருந்தார். அப்படியிருந்தும், "இந்திய ஜனங்களுக்குச் சகல அரசியல் அதிகாரத்தையும், பிரிட்டன் அளித்துவிடுவது அவசியம்" என்று பகிரங்கமாய் அவர் அறிவித்து விட்டார். சர்வ தேச சம்பிரதாயங்களை யெல்லாம் மீறி, ஒரு தேச சர்க்காரின் தலைவன் மற்றொரு தேச சர்க்காருக்கு இப்படிப் புத்திமதி கூறுவது ஓர் ஆச்சர்யந்தான். உலகம் மாறி வருகிறது. அதைத் தீரன் சியாங் அறிவார்; சர்ச்சில் அறியவில்லையே!

### ஞானியார் பிரிவு

சுமார் ஐம்பது ஆண்டுகளாக, தமிழுக்கும், சிறப்பாகச் சைவத்துக்கும் பெருந்தொண்டாற்றி வந்த திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் திடீரெனக் காலமான செய்தி கேட்டுத் திடுக்குற்றோம். அடிகள், தமிழும் தெலுங்கும் ஆங்கிலமும் நன்கு கற்ற அறிஞர். ஏழை மாணவர் கல்வி பெற்று வளர்வதற்காக, அவர் ஆதரவில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டது. அவரது ஆராய்ச்சி மிக்க சொற்பொழிவுகள் சைவர்களுக்கு மட்டுமன்றி, தமிழ் மாணக்கர்களுக்கும் நல்விருந்தாகும். ஞானியார் பிரிவு, தமிழகத்துக்கும் சைவ உலகத்திற்கும் அளவிடற்கரிய நஷ்டமாகும். அடிகளின் மடத்தார்க்கும் சிஷ்யகோடிகளுக்கும் நமது மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

பிரிட்டனில் குண்டு முதலிய ஆயுதங்கள் செய்யும் தொழிற்சாலைகளில், கிராமபோன் பிளேட்டுகளை வைத்து, ஒலிபரப்பி மூலம் தொழிலாளர்களுக்கெல்லாம் சதா சங்கீத மழை பொழியப்படுகிறதாம். அதனால், தொழிலாளிகளுக்கு உற்சாக முண்டாகி, ஒன்றுக்குப் பல மடங்கு வேலை நடக்கிறதாம்; லாபம் பிரமாதமாயிருக்கிறதாம்.

---

# தியாகம்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

[தியாகமே வாழ்க்கை. தியாகமில்லாவிட்டால் உலகமே இல்லை. பெற்றோர் தம்மைத் தியாகம் செய்தே மக்களை வளர்க்கிறார்கள். மேகம் தன்னைப் பொழிந்தே உயிர்களை வளர்க்கிறது. பூ தனது மணத்தை காற்றிற்கும், மதுவை வண்டிற்கும் அளித்துப் புன்னகைக்கிறது. தனது நெய்யுந்திரியும் சுருங்கினாலும் விளக்கு வெளிச்சம் தருகிறது. தன்னை வெட்டித் துண்டு செய்யும் மனிதருக்கும் மரம் மலரும் கனியும் நிழலும் அளிக்கிறது. இந்த மாதிரி மனிதர் தியாக புத்தியுடன் தம்மை அருட்பணிக்கே பலிதானமாக்க வேண்டும். இதுவே பாட்டின் கருத்து.]




மண்வளமை செழிக்கத்—தன்னை
வாரி வழங்குகின்ற
தண்முகில் வானத்தைப் போல்—தியாக
சாதனம் செய்திடுவோம்...

ஊட்டிப் பயிர் நிலத்தை—வாழும்
உயிர்களுக் குதவிப்
பாட்டுடன் ஓடுகின்ற—நதியெனப்
பாரில் உலாவிடுவோம்...

மதுவை வண்டருந்தத்—தன்
மணத்தைக் காற்றருந்தப்
புதுநகை புரியும்—காலைப்
பூவினைப் போலிருப்போம்...

நீண்ட திரி குறைந்தும்—தனது
நெய்வளமை குறைந்தும்
தூண்டு சுடரினைப்போல்—அருள்
தொண்டினில் இன்புறுவோம்...

வெட்டும் மனிதருக்கும்—கனி
விருந்துந் தண்ணிழலும்
தட்டின்றித் தந்துதவும்—மரம்போல்
தருமஞ் செய்திடுவோம்...

காரிருட்டினிலே—வழி
காட்டி மினுக்கியபின்
சூரியனுள் மறையும்—நட்சத்ரச்
சுடரெனப் பொலிவோம்...

இன்னல் அளித்தாலும்—தான்
ஈன்ற குழந்தையினை
அன்னை வளர்ப்பதுபோல்—நாம்
அன்பை வளர்த்திடுவோம்...



OFFICE OF ... 13 MAR 1942 MADRAS

இந்த மாதிரி சர்க்கார் பதவி
மறுபடி நமது தலைவர் கைக்கு ஏறி....

தற்சமயமுள்ள அரசியல் பொறுப்பும்
அவர் தலையில் அமருமானால்............

போட்டோ: நாகராஜன்



மகாபாரதத்தை வியாச பகவான் என்ற ஒரே ஆசாமி எழுதியிருக்க முடியாது என்று ஒரு கட்சி. ஏன் முடியாதென்றால், எத்தனை கதைகள், எத்தனை வர்ணனைகள், எத்தனை கருத்துக்கள்—இந்த அளவிடற்கரிய பெருங் கற்பனைக் கடலை ஒரே மனிதன் எப்படிச் சிருஷ்டித்திருக்க முடியும் என்று அவர்கள் சொல்வார்கள். அவர்களை மடக்க ஓர் எதிர் வாதம் வேண்டுமானால், சுவாமி சுத்தானந்தரைத்தான் நான் உதாரணங் குறிப்பிடுவேன்.

சுவாமிக்கு 50-வயதுக்கு மேல் இராது. இது வரையில், சுமார் 500 நூல்கள் வரை எழுதி யிருக்கிறார்; 20 ஆயிரம் கவிகள் புனைந்திருக்கிறார். அவருடைய நூல்களில் ஆங்கிலத்தில் இருப்பவை ஏறக்குறைய 30 இருக்கும். பிரஞ்சு பாஷையில் பல கவிதைகள் செய்திருக்கிறார்; இரண்டு வசன நூல்கள் வரைந்திருக்கிறார். இந்தியில் இரண்டு மூன்று புத்தகங்கள் எழுதியிருக்கிறார். தெலுங்கில் இரண்டு மொழிபெயர்ப்பு நூல்கள் ஆக்கியிருக்கிறார். பற்பல பத்திரிகைகளுக்கு நூற்றுக்கணக்கான கட்டுரைகள், கவிகள் வழங்கி யிருக்கிறார். இன்னும் கவி யெழுதுகிறார்.

தாய்மொழியான தமிழையன்றி, ஆங்கிலம், பிரஞ்சு, இந்தி, தெலுங்கு இந்தப் பாஷைகளும் அவருக்கு நன்றாக வரும். வங்கம், மலையாளம், கன்னடம், லத்தீன் இவைகளைப் புரிந்து கொள்ளுவார். உருது

விசேஷ பேட்டி

# சுவாமி சுத்தானந்தர்

'ஜெயார்'

பயின்று கொண்டிருக்கிறார். தாந்தேயைப் படிக்க, இதாலி மொழியையும் அவர் சிறிது எட்டிப் பார்த்ததுண்டு.

"எவ்வளவு பாஷைகளைக் கற்றாலுமென்ன? தாய்மொழிதான் சமயத்துக்கு உதவும்; மற்றவை மறந்து போகும். அடுத்தபடியாக, தாய்ப்பாலுடன் ஊட்டிய ஆங்கிலமும் கொஞ்சம் உதவும். எனது பாஷை நாக்கின் பாஷை யல்ல. அது ஹ்ருதய பாஷை" என்று அவர் சொல்லுகிறார்.

இப்படிச் சரக்கொன்றை போல், புத்தக மலர்களை ஓயாமல் உதிர்த்து நம்மைப் பிரமிக்கச் செய்யும் சுவாமி சுத்தானந்தர் வீர மறவர் விளங்கும் சிவகங்கையில் பிறந்தார். மதுரையிலும் சிவகங்கையிலும் வளர்ந்தார். பெற்றோர் சிவகங்கை ஜமீனில் ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தந்தை ஜடாதரர்; தாய் காமாட்சியம்மை.

சுத்தானந்தரின் பாலியப் பருவம், கதைகளிலே வளர்ந்தது என்று சொல்லலாம். பாகவதம் முதலிய புராணக் கதைகளையும் கர்ணபரம்பரைக் கதைகளையும் இவருடைய பாட்டியும் தாயாரும் இவருக்குச் சொல்லுவார்கள். வேதாந்தப் பாடல்களையும் பாடுவார்கள். சுத்தானந்தரின் மனம் அவைகளிலே லயித்தது. கடவுளன்பு, தமிழன்பு, நாட்டன்பு இம் மூன்றும் சிறு வயதிலேயே அவருக்கு மிகுந்தன.

வயது ஆறிருக்கும். இவருடைய தாயின் சகோதரரான மாமன் ஒரு லட்சாதிபதி. புத்திர பாக்கியமில்லாதவர். சுத்தானந்தரைத் தத்து எடுக்க, அவர் விரும்பினார். தமது செல்வ அறைக்கு, குழந்தையை இரகசியமாய் அழைத்துச் சென்றார். மோகராக்கள், செடிப் பவுன்கள், பொன் மணி நகைகள், பை பையாகப் பணம்—இந்தக் குவியலைச் சிறுவன் முன் பரப்பினார்.

"செல்லம்!" என்று, அன்போடு சிறுவனை மாமன் அழைத்தார். (செல்லம் என்பதுதான் சுத்தானந்தரின் வீட்டுப் பெயர்.) "இதெல்லாம் உனக்குத்தான்" என்று சிறுவனுக்கு ஆசை காட்டினார்.

**சிறுவன்:** "எனக்கெதற்கு?"



**மாமன்:** "எனக்குப் பிள்ளையாயிரு. இத்தனையும் உன்னையே சேரும். ஐ. ஸி. எஸ். வரையில் உன்னைப் படிக்க வைக்கிறேன்."

சிறுவனுக்கு இது மிக வெறுப்பாயிருந்தது. மாமாவின் விபரீத யோசனைக்குக் காரண மென்ன? பணத்திமிர்தானே? சிறுவன் ஒரு யுக்தி செய்தான். இந்தப் பணத்தை யெல்லாம் வாரியெடுத்துத் தெருவிலே கொண்டுபோய்ப் பிச்சைக்காரர்களுக்கு இறைத்துவிட்டால், மாமா நல்ல புத்தி யடைவார் என்று அவனுக்குத் தோன்றியது.

"மாமா! நான் உன் பிள்ளையாக மாட்டேன். என் அம்மா அதோ கோயிலி லிருக்கிறாள். அவள் லோகநாயகி. அவளுடைய குழந்தைகள் வாசலிலே, பசி, குளிர் என்று அலறுகின்றனவே. நீயேன் இதை யெல்லாம் இப்படிப் பூட்டி வைத்திருக்கிறாய்? இவற்றை அவர்களுக்குப் போடுவோம், வா" என்று சொல்லிய சிறுவன், பவுன்களை அள்ளத் தொடங்கினான்.

மாமா திடுக்கிட்டு, சிறுவனை வெளியே தள்ளி, கதவைச் சாத்திக் கெட்டியாகப் பூட்டி விட்டார்.

சுத்தானந்தருக்குப் பூணூல் போட்டார்கள். மந்திரங்களுக்கு என்ன அர்த்தம் என்று புரோகிதரைச் சிறுவன் கேட்டான். "போடா அதிகப்பிரசங்கி! அர்த்தமெல்லாம் சொல்லக் கூடாது" என்று அவர் மறுத்துவிட்டார்.

சிறுவனுக்குத் திருப்தி யில்லை. ஒரு பெரியவரிடம் சென்று அர்த்தங் கேட்டுக் கொண்டான். அத்தனை சந்தியா வந்தன மந்திரங்களையும் தமிழ்ப் பாட்டுக்களாக மொழிபெயர்த்தான். வடமொழியை விட்டு, தமிழிலேயே சந்தியா வந்தனங்களைத் தான் செய்ததுமன்றி, பிற சிறுவர்களையும் தயார் செய்து விட்டான்! அந்தக் காலத்திலேயே சுத்தானந்தருக்குத் தமிழிலே அவ்வளவு பற்றுதல்!

பள்ளிச் சிறுவனா யிருக்கையிலேயே, சுத்தானந்தருக்குத் தேச வெறியும் பிடித்து விட்டது. நடுவகுப்பில் 'வந்தேமாதர' கோஷம் செய்வார். பள்ளிச் சுவர்களி லெல்லாம் 'வந்தே மாதரம்' என்றெழுதி விடுவார். உபாத்தியாயர் அடித்தால், "வந்தே மாதரம்" "வந்தே மாதரம்" என்று கத்திக்கொண்டே, அடிகளைத் தாங்கிக்கொள்ளுவார். ராஜீயக் கூட்டங்களுக்கு நோட்டீஸ் கொடுக்கச் சென்று விடுவார். சரித்திரப் பரீட்சையில் சிப்பாய்க் கலகத்தைப்பற்றி வந்த கேள்விக்குப் பதில் அளிக்கையில், "சுதந்திர யுத்தம்" என்று இவர் அதை வர்ணித்து விட்டார்.

காட்டுப் புத்தூர் ஹைஸ்கூலில், சுத்தானந்தர் ஆங்கிலம், பூகோளம், சாரணம், ஸயன்ஸ் முதலியன சொல்லிக்கொடுத்தார். ஒரு நாள் மாணவருக்குத் தீக்குச்சி செய்துகாட்ட மருந்து அரைத்தார். பாஸ்பரஸும் பொட்டிலுப்பும் சேர்த்து அரைக்கும்போது, டபார் என்று வெடித்து கல்வம் கையை இடித்துக் கீழே விழுந்தது. தப்பியது தெய்வச் செயல். கையில் காயம் பட்டது. அந்தச் சம்பவம் இவர் வாழ்வை உள்ளே திருப்பி விட்டது. சர்க்கார் உத்தியோகத்தில் தாம் இருக்கும் நினைப்பே யில்லாமல், கரூர், திருச்சி முதலான இடங்களில் இவர் தேச சேவை செய்து வந்தார். புகார் கிளம்பியது; ஒற்றரும் ஏற்பட்டார்கள். 1920-ஆம் ஆண்டு ஒத்துழையாமை, கிலாபத் இயக்கங்களில் சேர்ந்தார். உபாத்தியாயர் வேலையையும் விட்டுவிட்டார். அப்போதே ஏறக் குறையத் துறவு மார்க்கத்தைக் கடைப் பிடித்து விட்டார்.

உத்தியோகத்தை விட்டதும், இவர் சில காலம் தேவகோட்டையில் ஒரு தேசியக் கலாசாலையில் 50 ரூ. சம்பளத்தில் வேலை பார்த்தார். பிறகு கிராம சேவை புரிந்தார். பழம், காய், கடலை, பால் முதலியவற்றையே உண்டு இயற்கை வாழ்வு வாழ்ந்தார். '**இயற்கை**' என்னுமொரு பத்திரிகையும் நடத்தினர்.

ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் சேரமாதேவி குருகுலம் ஆரம்பித்ததும், சுத்தானந்தர் அங்கே போய்ச் சேர்ந்தார். ஐயரின் '**பாலபாரதி**' பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பில் பெரும் பகுதியையும் சுவாமி சுத்தானந்தரே மேற்கொண்டார். ஐயருக்குச் சுத்தானந்தரிடம் பெரும் மதிப்பும் பற்றுதலுமிருந்து வந்தன. ஐயருக்குப் பிறகு இவரே பாலபாரதியை நடத்தினர்.

ஐயர் காலமானதும், தஞ்சை '**சமரஸ போதினி**'யிலிருந்து, சுத்தானந்தருக்கு அழைப்பு வந்தது. '**சமரஸ போதினி**' வார மிருமுறையின் ஆசிரியப் பொறுப்பைச் சுத்தானந்தர் ஏற்ருர். சுத்தானந்தர் வருமுன் ஒரு மாத காலம் நானே அதன் ஆசிரியப் பொறுப்பை வகித்திருந்தேன். சுத்தானந்தர் வந்து ஆசிரியப் பொறுப் பேற்றதும், அவருக்குத் துணை நின்று நானும் அதில் சேவை புரிந்தேன். அப்போதுதான் சுத்தானந்தரின் நெருங்கிய பழக்கம் எனக்கு ஏற்பட்டது. அவருடைய வாழ்க்கை முறைகள், நடவடிக்கைகள் எல்லாம் அப்போதே மிக விசித்திரமாய்த் தான் இருந்தன. சுமார் பதினைந்து, பதினறு வருஷங்களுக்குப் பின் இப்போது அவரைப் புதுவையில் கண்டபோது, அன்று போலவே இன்றும் அவர் இருக்கக் கண்டேன்.

உபாத்தியாயர் வேலை பார்த்த காலத்தில் மிகச் செட்டாக வாழ்ந்து, சுமார் 5000 ரூபாய் வரையில் சுத்தானந்தர் சேர்த்திருந்தார். அதில் மிஞ்சிய சகல பணத்தையும் புதுவை அரவிந்த நிலயத்திலே சேர்த்து, தாமும் அதில் சேர்ந்து; யோகத்தில் ஆழ்ந்து விட்டார்.

அரவிந்த நிலயத்தில் உள்ள ஸாதகர் ஒருவரை—முக்கியமாய்ச் சுத்தானந்தர் போன்ற ஒருவரை—போய்க் கண்டு வருவதென்ருல், சுலபமான காரியமன்று. உத்திரவின்றி அரவிந்த நிலயத்துக்குள் அந்நியர் எவரும் பிரவேசிக்க முடியாது.

அரவிந்த நிலயத்துக்குள் முதன் முதலில் என்னை ஒரு ஸாதகர் விசாரிக்கலானர்.

"தங்களுக்கு என்ன வேண்டும்?"

"நிலயத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும்."

"சுற்றிப் பார்க்க இங்கே ஒன்றும் கிடையாது. நிலயத்தைப் பற்றி என்ன தகவல்கள் வேண்டுமோ, கேளுங்கள். சொல்லுகிறேன்."

"கேள்விகள் ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை. நீங்களாக என்ன தகவல்களைக் கூறினலும் சந்தோஷமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்."

"திட்டமான கேள்விகள் கேட்டால்தான் பதில் சொல்லுவேன். நானக ஒரு தகவலும் சொல்ல முடியாது."

இந்த விவாதத்தை இதற்கு மேல் வளர்த்த, எனக்கு இஷ்டமில்லை. "நிலயத்தின் லட்சியமென்ன? அது, இது" என்று, சிரமப்பட்டுச் சில கேள்விகள் கேட்டேன்.

தெய்விகத்தை அடைவதே நிலய லட்சியமாம். அரவிந்தரே நிலய லட்சியத்தை உபதேசிக்கும் மகா குரு. நிலயத்தின் சகல நிர்வாகங்களும் அன்னையாலேயே நடத்தப் படுகின்றன. அரவிந்தர் மாடியறை ஒன்றில் ஏகாந்தமாய் வசிக்கிருர். வருஷத்தில் மூன்று நாள்தான் அவர் தரிசனமளிக்கிருர். ஆசிரம ஸாதகர்களும் கூட அவரை மற்ற நாட்களில் பார்க்க முடியாது. அவருடன் இவர்கள் கடிதப் போக்குவரத்து மாத்திரம் நடத்தலாம்.

ஆசிரமத்தில் சுமார் 250 ஸாதகர்கள் இருக்கிருர்கள். ஸாதகர்களுக்குச் சொந்த சொத்து எதுவும் கிடையாது. தங்கள் சொத்தையெல்லாம் நிலயத்துக்குச் சமர்ப்பித்துவிட்டு, நிலயத்திலே எல்லாரும் ஒரே பக்த சங்கமாக வாழ்கிருர்கள்.

இந்தத் தகவல்களை எனக்குச் சொல்லியபின், ஸாதகர் என்னை அழைத்துக்கொண்டு, நிலயத்தைச் சுற்றிக் காட்டினர். நிலயவாசிகள் அனைவரும் நல்ல கல்விமான்கள். நிலயம் மிகச் சுத்தமாயிருக்கிறது. உள்ளே பல செடிகொடிகள், பூக்கள் மலர்ந்து ரம்யமாயிருக்கின்றன. சந்தடியே கிடையாது. தேனீக்களைப்போல், நிலயவாசிகள் சுறுசுறுப்புடன் வேலை செய்துகொண் டிருக்கிருர்கள். ஒரு பக்கத்தில், நிலய சம்பந்தமான கொல்லு, தச்சு வேலைகள் நடக்கின்றன; இன்னெரு புறம், வீணாய்ப்போன காகிதம், துணித் துண்டுகளை உபயோக முள்ள சாமான்களாகச் செய்கிருர்கள்; மற்ருெரு புறம் புத்தகசாலை; வேருேரிடத்தில் நிதிச் சாலை; இன்னெரு திசையில் பண்டசாலை—அது அதை அவரவர் மிகப் பொறுப்புடன் கவனிக்கிருர்கள். பூச்செடிகளை வளர்ப்பவரும் சமையல் செய்பவரும் ஸாதகர்கள்தானம். சாப்பாடு பொதுச் சாப்பாடு. வாழ்வு, தனக்கென்ற கவலை யில்லாத வாழ்வு. இதுதான் அரவிந்த நிலயம். இந்த அரவிந்த நிலயத்தில் ஒரு தவயோகியாக வாழ்கிருர் சுவாமி சுத்தானந்தர்.

மாலை எட்டு மணிக்கு, நிலயத்தில் பிரார்த்தனை. உள் ஸாதகர்கள், வெளி ஸாதகர்கள் அனைவரும் அச்சமயம் ஆசிரமத்தில் கூடுகிருர்கள். தியானம் முடிந்தபின், சுவாமி சுத்தானந்தரைக் காண உள்ளே சென்றேன். தனியறையில், ஓர் உயர்ந்த பீடத்தில் மான் தோல் ஆசனமிட்டு, சுவாமி அமர்ந்திருந்தார். எதிரே ஒரு திண்டில் நான் உட்கார்ந்தேன். சுவாமி மௌன விரதம் அனுஷ்டிப்பதால், கடிதத்திலேயே என் கேள்விகளும் அவர் பதில்களும் நிகழ்ந்தன.

சுவாமிகள் பற்பல பத்திரிகைகளில் சேவை புரிந்திருக்கிருர். 'பாலபாரதி', 'இயற்கை', 'சமரஸபோதினி', 'சுயராஜ்யா' 'தொழிற்கல்வி' என்ற தமிழ்ப் பத்திரிகைகளிலும், 'பிரம்மசரியம்' என்ற ஆங்கிலப் பத்திரிகையிலும் அவர் சேவை புரிந்திருக்கிருர்.

தமது பத்திரிகைப் பணி சம்பந்தமாகக் குறிப்பிடுகையில், "பேனவைக் கொண்டு பிழைக்க முடியாத காலம் அது. எனக்குப் பணக்கவலையில்லாததால்தான் பிழைத்தேன்" என்று சுவாமி குறிப்பிடுகிருர். "இப்போதுள்ள பத்திரிகைகளில் சுதேசமித்திரன், ஆனந்தவிகடன்,

## யுத்தம் நமது வாசலுக்கே
## - - வந்துவிட்டது !

விமானத் தாக்குதலால் எவ்வளவு எதிர்பாராத உயிர்ச் சேதங்கள் !!

யுத்தத்தில் நேராகச் சம்பந்தப் படாத பொது ஜனங்களுக்குப் பழைய ரேட்டுகளின் படியே

# லக்ஷ்மி

## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், லாகூர்

ஜீவியப் பாதுகாப்பு அளிக்கிறது.

இந்தக் குழப்பம் மிகுந்த காலத்தில், எந்த நேரத்தில் யார் தலையில் என்ன விழுமோ என்ற கவலை சூழ்ந்த இந்த நாட்களில்தான் யாவருக்கும் இன்றி யமையாதது

**இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பு.**

இந்தப் பாதுகாப்பை உங்களுக்கு அளிக்க லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி தயாராக இருக்கிறது.

விவரங்களுக்கு ——

பிராஞ்சு மானேஜர்,

**லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,**

334, தம்பு செட்டித் தெரு, ஜி. டி., மதராஸ்.






Your EASTERN BUSINESS

is safe with us. We transact every description of Banking & Exchange business. We offer Special facilities for Collection on Malaya. Promptness & Service are our watchwords.

INDIAN OVERSEAS BANK LTD.

ஹெட் ஆபீஸ் :

மதராஸ்

பிராஞ்சுகள் :

| | |
|---|---|
| கன்னனூர் | சிங்கப்பூர் |
| கோயம்புத்தூர் | புதுக்கோட்டை |
| தேவகோட்டை | ரங்கூன் |
| காரைக்குடி | சிவகங்கா |
| குலாலம்பூர் | மேட்டூர் டாம் |
| பினங்கு | தலைச்சேரி (சப் ஆபீஸ்) |

மேல்நாட்டு ஏஜண்டுகள்

**தி சேஸ் நேஷனல் பாங்க் ஆப் தி ஸிடி ஆப் நியூயார்க் லண்டன் & நியூயார்க்**

உங்கள் விலை யுயர்ந்த சாமான்களை Safe Deposit Vault-இல் பத்திரப் படுத்துங்கள்

## இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு
லிமிடெட்

எஸ்ப்ளனேட் : : மதராஸ்



பூவிதழ்வதனிகளின் வசீகர எழிலே எழில் !
ஆடை யாபரணாதிகள் அவ்வனப்பிற்கு
- ஓர் பூஷணம் மட்டுமாகும். -

# சௌந்தர்யத்திற்கு முதன்மையாக வேண்டுவது

ஊர்வசி, ரம்பையர்களைப்போன்று சாமுத்திரிகா லக்ஷணங்களொத்து வனப்பு வாய்ந்த நங்கையர்கள் சௌபாக்கியவதிகளே, கூறவும்வேண்டுமா! ஆனால் செதுக்கின பதுமை உருவத்தைவிட மாசற்ற மிருதுவான வதனம் மெல்லியருக்கு எத்தனையோ அதிக முக்கியமானதாகும். எழில் என்பது பற்பல மனோஹரங்களான அம்சங்கள் ஒன்று கூடினது. ஆனாலும், அவையொன்றுமே சரியான முக பராமரிப்பைப்போல் வனப்பிற்கு அவ்வளவு அவசியமென்று சொல்வதற்கில்லை. முகத்தை ஜாக்கிரதையாக பராமரித்து வருவதே சௌந்தர்யத்திற்கு முதன்மையாக வேண்டுவது! இதோ இந்த சுலபமான பாதுகாப்பினால் உங்கள் முகம் வசீகரத்தோற்றம் கட்டாயம் வாய்க்கும். முதலில் மயிர்க் கண்களில் பிரதி தினம் படியும் எண்ணெய் அழுக்குகளை நீக்கம் செய்யவேண்டும். அதற்கு முகத்தை ஸோப்பு தேய்த்து கழுவினால் மட்டும் போதாது.

பிரதி இரவிலும் காலையிலும் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் கொஞ்சம் முகத்திலும் கழுத்திலும் தேய்த்திறக்கவும், சொற்ப நேரங்கழித்து —அது மயிர்க் கண்களினுள் இறங்கட்டும்— துடைத்துக் களையவும்.

இரண்டாவது, பகலில் உங்கள் சருமத்தை வெயிலினின்றும் பாதுகாக்க பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள். அது முகத்தின் மீதும் கழுத்திலும் கண்ணுக்குப் புலப்படாமல் மெல்லிசாகப் பரவி கடும் வெயிலும் வரண்ட காற்றும் சருமத்திற் தட்டாதபடி பாதுகாக்கிறது.




உடன்தானே பாண்ட்ஸ் க்ரீம்கள் உபயோகிக்கத் தொடங்குங்கள், சொற்ப வாரங்களுள் உங்கள் முகம் ரோஜா இதழ் போன்று மிருதுவாக இருக்கும்.

## ★ பாண்ட்ஸ் க்ரீம் ★

கலைமகள், ஹிந்துஸ்தான், சக்தி, ஹநுமான், கல்கி — இவை மிகவும் கவர்ச்சியா யிருக்கின்றன. சக்தி பல அம்சங்களுடன்கூடி ரஸமா யிருக்கிறது. தற்போதைக்குத் தமிழ் நாட்டு 'மாடேர்ன் ரிவ்யூ' எனத் தக்கது 'சக்தி' ஒன்றுதான்" என்று அவர் சொல்லுகிறார்.

சுவாமிகள் துறவு பூண்டு பெற்ற ஆத்மானுபவத்தையும் புதுச்சேரி சேர்ந்த வரலாற்றையும் பற்றி விசாரித்தேன்.

"ஸ்ரீ அரவிந்தர் என்றால், எனக்குக் கிருஷ்ண பரமாத்மா தான்" என்கிறார் சுவாமிகள். யோக சித்திக்காக, பல இடங்களில் சுவாமிகள் சாதனம் செய்திருக்கிறார். பல பெரியார்களிடம் யோக ரகசியம் கற்றார். ஞான சாதனம் செய்யும் நாட்களில், பகவான் ரமண மஹரிஷிகளின் திருவுருவம் சுவாமிகளை வசீகரித்ததாம். திருவண்ணாமலை சென்று விருபாட்சிக் குகையில் சமாதி கூடியிருக்கும்போது, சுவாமிகள் சுத்தாத்ம சித்தி பெற்றார். இதில் அவருக்குத் திருப்தியில்லை; இதற்குமேலும் ஒரு படியிருப்பதாக உணர்ந்தார். துறவும் வாழ்வும், யோகமும் போகமும் ஒன்று சேர்ந்து பூரணம் பெற விரும்பினர். இச்சமயம் அரவிந்தரின் நூலான 'அன்னை' இவரை வசீகரித்தது. அரவிந்த தரிசனம் வேண்டி விண்ணப்பித்தார். "வரலாம்" என்று பதில் கிடைத்தது. அப்படியே நிலயத்தில் போய்ச் சேர்ந்து விட்டார்.

சுவாமிகள் 'சமரஸபோதினி' யில் இருந்த காலத்தில், பரங்கிப் பழம், கடலைக் கொட்டை முதலிய பச்சைப் பொருள்களை உண்டு இயற்கை வாழ்வு வாழ்ந்தார். இப்போது அவ்விஷயம் எப்படி என்றறிய, நான் விரும்பினேன். இப்போதும், பால், பழமே முக்கிய உணவாம். கடலைக் கொட்டையும் கொஞ்சம் சேர்ப்பதுண்டாம். அரவிந்தருக்குத் தயாரிக்கும் உணவில் பிரசாதம் வரும். அதுவே அமுதம். பசுங் காய்கறி, தேங்காய், கனிகள் சேர்ந்து தயாரிக்கப்படுவதே அரவிந்தருக்கு இவர் தயாரிக்கும் உணவு.

"தமிழ் இலக்கிய வளர்ச்சி சம்பந்தமாக, தங்கள் அபிப்பிராயம் என்ன? திசைச் சொற்களை அடியோடு ஒழிக்கலாமா? எதையும் எளிய தமிழிலேயே எழுத வேண்டுமென்று எண்ணுகிறீர்களா?" என்று நான் கேட்டேன்.

சுவாமியின் பதில்: "இப்போது நீங்களெல்லாம் எழுதிவரும் தமிழ் நல்ல தமிழே. எளிது வலிது என்பதன்று: எலிஜபெத் காலத்துக்கு, சாஸரும் ஷேக்ஸ்பியரும் எளிது; ஜார்ஜ் காலத்தில் ஷாவும் எலியட்டும் எளிதாகும். காலத்துக்கேற்றபடி இயல்பாக ஊறிவரும் நடையே நல்ல நடை. இனி நாம் சங்ககாலத் தமிழே பேசிக்கொண்டிருக்க முடியாது. தமிழில் இன்னும் எவ்வளவோ புதிய சொற்களும், மலை மலையாகப் புதிய எண்ணங்களும் வரவேண்டும். சரஸமான எளிய நடையே இப்போது பயனாகும். பொருள் நிரம்பிய சொற்களை எந்தப் பாஷையிலிருந்தாலும் எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக 'ஸயன்ஸ்' என்ற பதத்தை, நான் அப்படியே வழங்குகிறேன். அதற்கு விஞ்ஞானம், கலை, இயற் கலை என்பது பொருந்தாது. பழக்கத்தில் வந்த பிற சொற்களை நம்மதாக்கிவிட வேண்டும். காலத்துக் கேற்றபடி எளியநடை வேண்டும். ஆனால், எளியநடை யென்றால் இலக்கணப் பிழை யுள்ளதன்று. உதாரணமாக, பி. ஆர். ராஜமையரின் எழுத்துக்கள், இராமதீர்த்தரின் வாக்குகள், விவேகானந்தர் வாக்குகள், அருட்பா, தாயுமானவர், பாரதியார் பாடல்கள் இவை யெல்லாம் மிகமிக எளிய நடையிலே தாம் உள்ளன. எளிய நடைக்கு உதாரணம் இவையே. ஸ்ரீ வ. ரா., கல்கி, தி. ஜ. ர., கு. ப. ரா., திருஞானம், சங்கு, நவயுகம், த. நா. குமாரசாமி முதலியோர் எழுதுவது மிகவும் நன்றாகவே யிருக்கிறது. தமிழில் நிரம்பக் கருத்துக்களைச் சேருங்கள்; சொல் தன்னால் வரும். இதிகாச சங்க - காலங்களைவிட உலகம் எவ்வளவோ முன் சென்று விட்டது. எத்தனையோ புதிய கருத்துக்கள் மனித வாழ்வுடன் பின்னிக் கிடக்கின்றன. இப்போது பழைய நூல்களையே சார்ந்திருக்க முடியாது. ஏராளமான புதிய நூல்களை சிருஷ்டிக்க வேண்டும்."

"இந்திய அரசியலில் தங்களுக்குச் சிரத்தை யுண்டா? 'சுயராஜ்யத்துக்கு அஹிம்சை, தற்காப்புக்குப் பலாத்காரம்' என்று ஒரு கட்சி காங்கிரஸிலே வலுத்திருக்கிறதே; இதுபற்றி உங்கள் கருத்தென்ன?" என்று வினவினேன்.

பதில்: "பாரத பூமிதான் என் உயிர். அதற்கே வாழ்வு, தவம், நினைவு—உண்பதும் என் அன்னைக்கே. அவள் உயிர்த் துடிப்பு, எனது உயிர்த் துடிப்பு—அவள் விடுதலை, உலக விடுதலை. பாரத பூமி உலகின் இன்ப நிலயம், சக்தி நிலயம். அதன் வருங் காலம் மகத்தானது. உலகில் நித்தியானந்த ஜோதியை, சத்ய தர்ம யுகத்தை நாட்டவே, பாரத சக்தி முயல்கிறது. அதற்காக மஹான்கள் தவம் புரிகிறார்கள். மேடை, அச்சுத் தொண்டுகளைவிட, மஹான்களின் தபோபலத்தினால் அற்புதமான பலன்கள் ஏற்பட்டுள்ளன. இப்போது நடக்கும் போர் அசுர பலங்களின் போர். இந்தப்போர் மேகம் நமது நாட்டில் தற்காலம் படர்ந்தாலும், அக்கறை யில்லை. நமது தேசத்தில் உள்ள பரயாத்ம சக்தி உலகைவிடப் பெரியது. அது அவதரித்திருக்கிறது. அதன் வெற்றி நிச்சயம். நமது தேசம் விடுதலையாவது மட்டும் போதாது. அது உலகில் தர்மஸ்தாபனம் செய்ய வேண்டும். அதற்கு ஒரு பெரிய தெய்வ சக்தி எழுந்து விளங்கும். நம்புங்கள். அந்தக் காலத்திற்காகவே நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம். பாரத சக்தியின் சேவை தெய்வ சேவை. அதன் பலம் தெய்வ பலம். குண்டு, பீரங்கிப் பலங்களெல்லாம் ஒரு நாள் அதை வணங்கியே தீரவேண்டும். பாரத தேசத்தை மறந்து தபமில்லை, வாழ்வில்லை. மேடைப் பேச்சே தேச சேவையன்று. மௌனமாக ஆத்ம பலத்தால் செய்யும் சேவை மிகப் பெரிது. (1) ஜாதிமதப் போர்கள் ஒழிந்து எல்லாரும் ஒற்றுமையாக வேண்டும்; (2) வறுமை ஒழியத் தொழில் ஓங்கவேண்டும்; (3) மடமை தீரக் கல்வி பரவ வேண்டும்; (4) க்ஷத்திரிய பலத்துடன் பிரம்மதேஜஸ் வேண்டும்; (5) ஆத்ம ஞானம் பெருகி ஆத்ம சக்தி வளரவேண்டும்; (6) அச்சம் ஒழிய வேண்டும்; (7) அவரவர் வேலைகளை யோகமாகச் செய்ய வேண்டும்; (8) காலத்துக் கேற்ற தலைவனைப் பணிய வேண்டும். (9) பழம் பழக்கங்களையே உடும்புப் பிடியாகக் கொள்ளாமல் புதுமை புதுமை என்று முன் சென்று காலத்தை வெல்ல வேண்டும்; (10) பாரத சமுதாயம் வீரதீரர் சங்க

மாக வேண்டும். இவையே நாம் முன்னேறும் வழிகளாம்."

"சர்வமத சமரஸத்தையே தாங்கள் ஆதரிப்பீர்களென்று எண்ணுகிறேன். அப்படியானால், கலாசாலைகளில் அவரவர்களின் மதக் கல்வி போதிக்கப் படுவது சரியா, தவறா? தவறானால், மதக் கல்வியே கூடாதா, அல்லது பொது மதக் கல்வி வேண்டுமா? கலாசாலை மதக் கல்வியால் ஆன்மீக சாதகம் ஏதாவது கிட்டுமா?" என்று அடுத்த கேள்வி கேட்டேன்.

**பதில்:** "சாதிமத எண்ணமே ஒழிய வேண்டும். முதலில் மனிதனை மனிதனாகப் பாவித்து மதிக்க வேண்டும். மதம் என்பது படிப்பல்ல, போதனையல்ல; சாதனம், அனுஷ்டானம். எல்லாரும் கூடி மௌனமாக உட்குவிந்து தியானம் செய்தல் — மற்றப்படி அவரவர் கடமைகளைப் பிறர் நோகாமல் செய்தல் — சத்தியம், அன்பு, தருமம், இரக்கம், வீரம், பொதுநலம், முதலிய நற்குணங்களை வாழ்த்தல்—இவற்றாலேயே சன்மார்க்கம் உயரும். சன்மார்க்கம் என்பது மதமல்ல. மதம் மனித சிருஷ்டி. கிறிஸ்துவும் புத்தரும் வருமுன்பே, வேதமும் கீதையும் உதிக்கு முன்பே, சன்மார்க்கம் இருந்தது. அது ஆத்மாவுடன்பிறந்தது. சத்=உண்மை, உள்ள பொருள் = சுத்தான்மா; மார்க்கம்=வழி. உண்மைப் பொருளை அடையும் வழியே சன்மார்க்கம். அது என்றுமுள்ளது. பள்ளிக் கூடங்களில் எல்லாருக்கும் பொதுவான நன்னெறிகளைப் பயில, சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதே சிறந்த போதனை. மதம் என்ற பேச்சே குழந்தைகளின் நினைப்பில் வரக்கூடாது. ஆனால் எந்த மதத்தையும் வெறுக்கக்கூடாது — அததன் சாரத்தைக் கிரகித்துச் சக்கையைத் தள்ளிவிடவேண்டும். விருப்பு வெறுப்பற்ற சமநிலையே ஸன்மார்க்கம். ஒருவன், தான் நம்பும் சமயத்தைப் பிற மத வெறுப்பில்லாது அனுஷ்டித்தால் அது நல்லதே."

**கேள்வி:** "ஹிந்துக்கள் சம்பந்தப்பட்ட மட்டில், எவை மிக முக்கியமான சமூகச் சீர்திருத்தங்கள் என்று தாங்கள் கருதுகிறீர்கள்? ஏன்?"

**பதில்:** "ஹிந்து சமுதாயம் பல சிக்கல்களால் வருந்துகிறது; அது உருவாகவே யில்லை. அது உருவாகித் தலை நிமிர வேண்டுமானால், (1) கீதை, குறள் இரண்டையும் பைபிள் மாதிரி பரப்பவேண்டும்; ஒவ்வொருவரும் இந்நூல்களைப் பாராயணம் செய்து அனுஷ்டிக்க வேண்டும்; (2) 'நீ யார்'? என்றால், 'பிராமணன், நாயுடு' என்னாமல், ஒவ்வொருவனும் 'நான் பாரத புத்ரன், தமிழன். சன்மார்க்கி' என்னல் வேண்டும். பெயர்களுக்குப் பின் உள்ள வால்களெல்லாம் இனிக் கூடாது. இங்கே புதுவையில் அதை நீக்கிவிட்டார்கள்; (3) தீண்டாமை அடியோடு ஒழிய வேண்டும். பட்டணத்தில் எல்லாரும் கலந்து வசிப்பதுபோல, எல்லா ஊர்களிலும், சங்கரசாஸ்திரி முதல் சாம்பான்வரையில், கலந்து வசிக்க வேண்டும். திருக்குலத்தாரை உயர்த்த, அவர்களை உயர்ந்த முறையில் வாழச் செய்யவேண்டும். ஆலயப் பிரவேசம் மட்டும் போதாது. இக்காலம் கோயிலுக்குப் போகிறவர்களே அரிது. கோயில்களே எவ்வளவோ திருந்த வேண்டும். திருக்குலத்தார் ஏனைய சமூகத்தாருடன் தாராளமாகப் பழக இடந்தர வேண்டும்; (4) நாடெங்கும் மடமையிருள் படர்ந்திருக்கிறது; அது ஒழியக் கல்வி பரவவேண்டும். ஆண் பெண் இருவரும் நிறைவாகக் கற்கவேண்டும். தெருவுக்கு ஒரு பள்ளிக்கூடம் வேண்டும். வீடுகளெல்லாம் பெண் கல்விச் சாலைகளாக வேண்டும். மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டால், நமது நாட்டில் கற்றவர் நிலை கூடப் பரிதாபமாயிருக்கிறது. உதாரணமாக, பிரான்ஸில் 12 வயதுப் பையன் தாய்மொழி இலக்கணம் நன்றாயறிவான்; மோலியர், ராஸீன் நாடகங்களை நன்றாக ரஸிப்பான். 16 வயதுப் பையன், பௌதிக ரசாயன சாத்திரங்களில் நிபுணனாகிறான். இங்கே நடக்கும் கல்வி சுத்த மோசம். நம்மவருக்கு ஆத்மீகக் கலையுமில்லாமல், மேனாட்டு லௌகிகக் கலையும் இல்லாமல், கல்வி இரண்டு கெட்டானாயிருக்கிறது; கலை நூல்கள் நிரம்ப வெளிவர வேண்டும். கல்வி சூறாவளிபோல் பரவவேண்டும். (5) வீடுதோறும் கைத்தொழில்கள் பரவவேண்டும்; வறுமையை ஓட்ட வேண்டும். வேலைக்குச் சோம்பக் கூடாது. (6) பெண்களுக்குத் தாராளமான சமவுரிமை வேண்டும். அவர்கள் ஆண்களின் கண்காணிப்பில் இருக்க வேண்டியதில்லை. ஆண்களைப் போலவே உடற் பயிற்சி, உலாவுதல், கற்றல், கேட்டல், பொது நலம்புரிதல் இவை பெண்களுக்கும் வேண்டும். (7) எல்லாரும் ஒரு குலம் போல அன்புடன் பழக வேண்டும். வீண் வாதமும் கிண்டலும் காலக் கொலையும் இல்லாமல் சுறு சுறுப்பாக அவரவர்களுக்கு இயல்பான கடமையைச் செய்ய வேண்டும்.

"இந்த யுத்த முடிவில் உலக சமுதாயம் எந்நிலையடையுமென்று தங்களுக்கு ஏதாவது தரிசனம் (vision) உண்டா? ஆமென்றால், ஏதேனும் சில குறிப்புக்கள் தர இயலுமா? கோடி காட்ட முடியுமா?" என்பது என்னுடைய கடைசிக் கேள்வி.

**சுவாமியின் பதிலாவது:** "இந்த யுத்தம் ஹிட்லர் யுத்தமன்று, மிகாடோ யுத்தமுமன்று. உலகில் அசுரப் படைகள் மண்டிப் போயின. தர்ம பலம் மங்கிப்போனது. இப்போது போரில் புகுந்திருக்கும் அனைவரும் கொலையால் வயிறு வளர்ப்பவர்கள்; ஆடு மாடுகளை ஹதம் செய்து வயிறு வளர்ப்பவர்கள்; எளிய நாடுகளை நசுக்கிப் பிழிந்து இரத்தத்தை உறிஞ்சிக் கொழுப்பவர்கள்; பாப ஜன்மங்கள்-மஹா பாப ஜன்மங்கள்; கீதை சொல்லும் ஆததாயிகள், கிரேக்கக் கதையில் 'காலகோடி ஸர்ப்பப் பற்களை' (Dragon's Teeth) நட்டு வந்த அரக்கர், தம்முள்ளேயே பொருதி மடிந்தனர். அது போல் அசுர பலங்கள் தம்முள் போராடி மடிகின்றன. அசுர ஆயுதங்கள் அவர்களையே வேட்டையாடுகின்றன. இது களை பிடுங்குவது போன்றது. இந்தப் போர் முடிந்த பிறகுதான், உலகம் புதுமை பெறும். இப்போதிருக்கும் கசுமாலங்களெல்லாம் கழிந்து, புதுயுகம், புதுவாழ்வு, புதிய சமரஸம் பிறக்கும். இந்தப் போரால் பயப்படாதீர்கள். பாரத தேசத்துக்கு ஒரு கேடும் வராது. அதர்மம் அழிகிறது; தர்மம் இனி நிமிரும். விஷ்ணுவின் காரியத்துக்கு ருத்ரன் வழி துலக்குகிறான்; மஹாலக்ஷ்மி வாசத்திற்கு ஊழிக்காளி காடு வெட்டி, தர்மபூமி தயாரிக்கிறாள். 'லயன் க்ளீயர்' (line clear) ஆகிறது."

வெகுநேரமாகிவிட்டது. ஆசிரம சௌகர்யம் எப்படியோ; சுவாமிகளின் நித்ய ஸாதனத்துக்கு என்னால் எவ்வளவு குந்தகமோ? எனவே, இத்துடன், நான் விடை பெற்றுக்கொண்டேன்.

—

134193



# பறித்த பூக்கள்

**கணவன் ஹாஸ்யம்:** ஒரு நாள் வித்வான் தியாகராச செட்டியாரும் அவர் மனைவியாரும் ஒரு வண்டியில் எங்கேயோ போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது யாரோ ஒருவர் வழியில் இவரைப் பார்த்து அஞ்சலி செய்தார். இவர் உடனே வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கி அவரோடு பேசினார். இருவருக்கும் நடந்த ரஸமான சம்பாஷணையை, 'கலைமக'ளில் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதியுள்ளார்.

வந்தவர் செட்டியாரிடம் படித்தவர்; நல்ல உத்தியோகத்தில் இருந்தவர். பேசியபிறகு, அவரை வண்டிக்கருகில் செட்டியார் அழைத்து வந்தார். தம் மனைவியாருக்கு அவரைக் காட்டி, "இங்கே பார்; இவர் என்னிடம் படித்தவர். இன்னும் என்னை மறவாமல் இருக்கிறார். இவரைச் சாமான்யமானவர் என்று எண்ணாதே. என் ஆயுள் முழுவதும் என்னைக் காப்பாற்றும் சக்தியுடையவர்" என்று சொல்லிவிட்டு, அவரை நோக்கி, "என்ன? நான் பென்ஷன் பெற்ற பிறகு உம்மிடம் வந்து ஆறு மாசம் இருந்தால் ஆதரிப்பீரா, மாட்டீரா?" என்று கேட்டார்.

அவர், "அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்கவேண்டுமே; காத்திருக்கிறேன்" என்றார்.

மீண்டும் செட்டியார் தம் மனைவியாரைப் பார்த்து, "உன் கையிலே நான் அகப்பட்டிருக்கிறேனென்று நினைத்துவிடாதே; இப்படி ஆயிரம் பேர் இருக்கிறார்கள்" என்று சொல்லிச் சிரித்தார்.

*　*

**காலத்தின் குட்டிக்கரணம்:** "நான் ஒரு பெரிய கம்பெனியில் ஒரு 'காண்ட்ராக்ட்' செய்து கொண்டிருக்கிறேன். அவர்கள் கூட என் மாதிரி தொழில் செய்பவர்கள்தான். அவர்கள் பெரிய மசி வியாபாரிகள்! எழுதும் மை இருக்கிறதே, அதுதான்! கடுக்காய் மசி! தேனிலிருந்து அவர்கள் மை செய்கிறார்கள்" என்றான் நண்பன்.



"நாசமாய்ப் போச்சு, போ! இதை என்னை நம்பச் சொல்லுகிறாயா, என்ன?" என்று கேட்டார் இதை 'ஆனந்த விகட'னில் எழுதும் தேவன்.

> **மரணபயம்**
>
> மரணத்தைக் கண்டு அஞ்சுகிறவன் எதைக் கண்டு அஞ்சுகிறான்? உயிரும் உணர்ச்சியும் இல்லாமல் போய்விடுவதைக் கண்டா? அல்லது புதிய உயிரும் புதிய உணர்ச்சிகளும் வரும் என்ற பயமா? உணர்ச்சியற்றுப் போவதானால், எந்த விதமான துக்கமும் இல்லாமல் இருக்கலாமே? புதிய உயிரும் புதிய உணர்ச்சிகளும் வருமாயின், நீ ஒரு புதியவனாவாய் அல்லவா? மரணம் ஏது?
>
> —மார்க்கஸ் ஔரேலியஸ்.

"பின், பொய்யா சொல்லுகிறேன்?"

"அவ்வளவு தேனுக்கு அவர்கள் எங்கேயடா போவார்கள்! அது கட்டுமா?"

"அதற்குத்தான் அவர்களுக்கு என் உதவி வேண்டியிருக்கிறது!"

"உன் உதவியா?"

"நான் தான் அப்பா, அவர்களுக்கு வாரத்துக்கு இரண்டு அண்டா தேன் 'ஸப்ளை' செய்கிறேன்."

"உனக்கு அவ்வளவு தேன் ஏது?"

"நான் கடுக்காய் மசியிலிருந்து தேன் உற்பத்தி செய்கிறேன். அதுதான் இப்போது என் தொழில்!" என்றான்.

யுத்த காலம், ஸார்! இப்போது காலம் தலைகீழாக இருப்பது மட்டும் அல்ல; குட்டிக்கரணமும் கூடப் போடுகிறது!

*　*

**உலக அதிசயம்:** மகாபாரதத்தில் தர்மபுத்திரரைப் பார்த்து யட்சன் கேட்டான்:

"இந்த உலகத்தில் மிகவும் அதிசயமானது எது?"

இந்தக் கேள்விக்குத் தர்மபுத்திரர் பதில் சொன்னார்:

"மனிதர்கள் தங்கள் கண் முன்னால் தினந்தோறும் அநேகர் மரணமடைவதைப் பார்க்கிறார்கள். ஆனாலும் தாங்கள் மட்டும் சாசுவதமாய் இருக்கப் போவதாகவே நினைத்துக் காரியம் செய்கிறார்கள்! — இதுதான் உலகத்தில் பெரிய அதிசயம்."

தர்மபுத்திரர் இந்தக் காலத்தில் இருந்தால், மேற்படி கேள்விக்கு பின்வரும் விதமாகவே பதில் சொல்லியிருப்பார் என்று 'கல்கி' எதிர்பார்க்கிறது:

"பிரிட்டிஷ் மந்திரிகள் தங்கள் கண் முன்னால் ருஷியாவையும் சீனாவையும் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் இன்னமும் அவர்கள் இந்த யுத்தத்தில் ஜயமடையும் இரகசியத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. பழைய குருட்டு வழியையே கடைப்பிடித்து வருகிறார்கள்" என்று தர்மபுத்திரர் சொல்லியிருக்கக் கூடுமாம்.

*　*

**பம்பர வாழ்க்கை:** ஒரு பம்பரம் ஆடும்போது எவ்வளவு அழகாக ஆடுகிறது! எவ்வளவு பிள்ளைகள் அதனுடைய ஆட்டத்தை வியந்துகொண்டு பார்க்கிறார்கள்! அங்ஙனமே மனிதனுடைய வாழ்க்கையிலே அவன் செய்யும் செய்கைகளையெல்லாம் மற்றவர்கள் கண்டு வியக்கிறார்கள் என்று 'செந்தமிழ்ச் செல்வி'யில் ஸ்ரீ கி. எம். இராமச்சந்திரன் செட்டியார் வியப்புடன் வர்ணிக்கிறார்.

இரண்டு பம்பரங்கள் அல்லது பல பம்பரங்கள் தம்மில் யார் மிகுந்த நேரம் ஆடுவோம் என்று எப்படிப் பந்தயம் போடுகின்றனவோ அதைப் போலவே, மனிதர்களிலும் இரண்டு பேரோ அல்லது பலரோ தம் வாழ்நாளில் யார் புகழுடன் தோன்றுவார்கள், யார் பணத்தில் மிகுவார்கள், யார் செல்வாக்கில் விளங்குவார்கள் என்று போட்டி போடுவதுண்டு. வரவரப் பம்பரம் தலை அசைப்பதுபோல இவர்களும் நிலைதடுமாறுவார்கள். முடிவில் பம்பரம் ஓய்ந்து விழுவதைப் போல் இவர்களும் மரணத்தின் வாயில் விழுவார்கள்.



சிறு கதை

# எங்கப்பாவா யிருந்தால்..

ராம்ஜி

"போருமே! நீ ஒரு பிரகஸ்பதி; உன் அப்பா ஒரு பிரகஸ்பதி. இரண்டு பேரும் பெரிய மேதாவிகள்தான்! எனக்குத் தெரியாதா என்ன?"

"எங்கப்பா மேலே என் இப்படி அல்லும் பகலும் அறுபது நாழியும் கரிச்சுக் கொட்டறேள்? அவரா இருந்தா இப்படிச் செய்ய மாட்டார்ன்னு தானே சொல்ல வந்தேன்..."

"ஓகோ! சொல்லவா வந்தே?"

"இல்லை, சொன்னேன்னுதான் வைச்சுக் கொள்ளுங்களேன். சொல்லப் போனால் மட்டும் உங்களுக்கு மூக்குக்கு மேலே கோபம் வந்துடறதே; காரியத்திலே துப்பு இல்லையே! நன்னாத்தான் சொல்றேன்; எங்கப்பாவா யிருந்தால், ஒரு நாளும் இந்த மாதிரி முத்தின வெண்டைக் காய்க்கு — அதுவும் அஞ்சு பலம் காய்க்கு, இரண்டணாவைத் தூக்கிக் கொடுக்கவே மாட்டார்."

"சரி, உனக்கு உன் அப்பா எப்பொழுது அவ்வளவு ஒஸ்த்தியாய்ப் போய் விட்டாரோ, உடனே புறப்பட்டுப் போய் விடு. நாளைக்கே ரயிலேற்றி விடுகிறேன்."

விஷயம் என்னவோ அல்ப வெண்டைக்காய் விஷயந்தான். இருந்தாலும் எனக்கும் என் மனைவி ஜானகிக்கும் அதனால் பெரிய தர்க்கமும், மனஸ்தாபமும் உண்டாகி விட்டன.

இல்லாவிட்டால், எத்தனை நாளைக்குத்தான் அவள் தன் அப்பா பெயரால் என்னை மட்டந்தட்டிக் கொண்டிருப்பதை, நான் சகித்துக் கொண்டிருப்பது?

நானும் ஜானகியும் பட்டணத்தில் தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்து, இரண்டு வருஷங்கள் தான் ஆகின்றன. என்றாலும், இதற்குள், குறைந்தது இரண்டு லட்சம் தடவையாவது, தன் அப்பா எப்படிப் பல் தேய்ப்பார், எப்படிச் சாப்பிடுவார், எப்படி ஆபீஸுக்குப் போவார், எப்படித் தூங்கி விழுவார் என்ற விஷயங்களை எனக்கு ஜானகி உபதேசம் செய்திருப்பாள். அப்பொழுதெல்லாம் எனக்கு இதைப்போல் அவ்வளவு கோபம் வந்தது கிடையாது.

இந்த வெண்டைக்காய் விவகாரத்தில்தான் ஜானகியின் தகப்பனார் என் கோபத்துக்குப் பாத்திரமானார் என்று எண்ணவேண்டாம். இதற்கு முன்னும் இரண்டு மூன்று தடவைகள் அந்தப் பாவிப் பிராமணனால் எங்களுக்குள் தாம்பத்யக் கலகம் நேர்ந்ததுண்டு.

அன்றொரு நாள் இந்த வாக்குவாதம் நிகழ்ந்தது:

வேலைத் தொந்திரவால், ஆபீஸ் கணக்குகளை அன்று இரவிலே வீட்டில் புரட்டிக் கொண்டிருந்தேன்.

"இப்படி ராத்திரியும் பகலுமா ஒருத்தர் உத்தியோகம் பார்ப்பாளா? நன்னாயிருக்கு உங்க உத்தியோக லட்சணம்!" என்று தொடங்கினாள் ஜானகி. நான் பேசவில்லை.

"அதிசயமாத்தான் இருக்கு நீங்க உத்தியோகம் பண்றது! எங்க அப்பாவுந்தான் வக்கீல் உத்தியோகம் பண்றார். கேஸுன்னாக் கேஸு, அப்படி வந்து குமியறது. தூக்க முடியாமெத்தான் கட்டுக் கட்டா அவரும் தினம் கச்சேரிக்குக் கொண்டு போறார். என்றாலும், ஒரு நாளைக்காவது இப்படி உங்களைப்போலே அவர் ராக்கண் விழிச்சு நான் பார்த்ததில்லை."



நானும்.........

"போரும் போரும், வாயை மூடு. உங்கப்பா பெரிய உத்தியோகம் பண்ணிப் புரட்டி விடுகிறார், இல்லையா? சீச்சீ, வாயை மூடு" என்று ஒரே போடாகப் போட்டேன். ஜானகி சலிப்புடன் "நீங்கள் எக்கேடுவேணாலும் கெட்டுப் போங்கள்" என்று சொல்லி, படுக்கச் சென்றாள்.

இரண்டாந் தடவை நடந்த விவகாரம் போன வருஷம் தீபாவளியின்போது.

"இப்படிச் சொளை சொளையாய் நாற்பது ரூபாயைக் கொட்டிக் கொடுத்து விட்டு, இந்த மாதிரி ஒரு புடவையை யாராவது தூக்கிண்டு வருவாளோ!" என்று அவள் ஆரம்பித்தாள்.

"புடவைக்கு என்ன குறைச்சல் என்று கேட்கிறேன்? அசல் பெங்களூர்ப் பட்டாக்கும் அது."

"பட்டுத்தான். யார் இல்லேன்னா? அசல் உரிச்செடுத்த நார்ப் பட்டுத்தான்! ஐயோ! நீங்களும் படிச்சுப் பாஸ் பண்ணி உத்தியோகம் பார்க்கறேளே! தலைத் தீபாவளியின் போது எங்கப்பா வாங்கிக் கொடுத்தாரே, 'ஐஸ் கிரீம் பார்டர்' போட்ட கொள்ளே காலம் சில்கு; அது கூடன்னா இருபத்தெட்டு ரூபாய்க்கு வாங்கித்து......"



......ஜானகியும் மௌன விரதம்

நாளும் கிழமையுமாக இன்றைய தினம் ஒன்றும் பேசக்கூடாதென்று, நான் அன்று அவ்வளவோடு நிறுத்தி விட்டேன். இம்மாதிரி இன்னும் எத்தனையோ விவகாரங்களில் 'அவள் அப்பா' வந்து குறுக்கிட்டார்.

கடைசியிலே, வெண்டைக்காய்த் தகராறின் பூசல் பலமாக முற்றிப் பெரும் புயலாக மாறி, எங்கள் இருவரது உடலையும் உலுக்கிவிட்டது. இரண்டு நாள் இருவரும் பேசவில்லை. வீட்டில் காரியங்களெல்லாம் பேசாச் சலனப் படக்காட்சிபோல் நடந்தேறி வந்தன.

நானும், ஜானகியும் மௌன விரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்த மூன்றாவது நாள்.

அது சரியான கோடை காலம். அப்படியிருந்தும் அன்று காலையிலிருந்தே வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. எனக்கு ஆபீஸில் வேலை ஓடவேயில்லை. ஜானகியின் மௌனம் என் மனோ உற்சாகத்தையும், வாழ்க்கையிலிருந்த சந்துஷ்டியையும் போக்கடித்து விட்டது என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தேன். எப்படியாவது நானாகவே அவளுடன் இன்று பேசி விடுவது என்று எண்ணினேன்.

மணி ஐந்து அடித்ததுதான் தாமதம். உடனே வீட்டுக்குப் புறப்பட்டு விட்டேன். அதுவரையில் குமுறிக் கொண்டிருந்த வானத்திலிருந்து சிறு தூற்றல் விழ ஆரம்பித்தது. வெகு வேகமாக நடந்து வீட்டை அடைந்தேன். நல்ல வேளை! நான் வீட்டுக்குள் காலடி எடுத்து வைப்பதற்கும், இடியும் மின்னலுமாகப் பலத்த மழை பிடித்துக் கொள்வதற்கும் சரியாக இருந்தது.

வழக்கம்போல் மௌனமாய் டம்ளரில் காப்பியைக் கொண்டு வந்து வைத்தாள் ஜானகி.

அவளை ஏறிட்டு நோக்கினேன். ஆனால், பேச நா எழவில்லை. ஆஹா! ஜானகி அன்று எவ்வளவு அழகாகக் காணப்பட்டாள்! அரையில் பூனைத் தலைப்புப்போட்ட லுங்கிப் புடவை. மேலே ஒரு பச்சை 'ஜாகெட்'. அவளுடைய சிவந்த மேனியை எவ்வளவு எடுப்பாக எடுத்துக் காட்டியது அந்த 'ஜாகெட்'!

இப்படி நான் ஜானகியின் ரூப சௌந்தரியத்தில் ஈடுபட்டு, ஏதோ காணாதது கண்டவன் போல் மெய் மறந்து நிற்கையில், உலகையே கிடு கிடுக்கச் செய்யும் ஒரு கோடை இடி திடீரென்று இடித்தது. அவ்வளவுதான்! குபீரென்று பாய்ந்து என் கரத்தைப் பற்றிக் கொண்டாள் ஜானகி. நானும் அவளுடைய வலது கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன்.

கலியாண காலத்தில் அவள் கையைப் பிடித்தபோது அடைந்த ஆனந்தத்தைவிட, ஆயிரம் மடங்கு அதிக ஆனந்தத்தை இப்பொழுது நான் அநுபவித்தேன்.

பாதாதி கேச பரியந்தம் அவளுடைய உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

"ரொம்பவும் பயந்து விட்டாயோ?" என்று கேட்டேன்.

"இல்லை... தூக்கிவாரிப் போட்டு விட்டது" என்று குழறினாள்.

"நீ என் என்னோடு பேசவில்லை? கோபமா?"

"நீங்களாகத்தானே பேசாமலிருந்தீர்கள்!"

"அசடே! இனி உன் அப்பா பேச்சைக் கண்டதற்கெல்லாம் எடுக்காதே. அதனால்தான் வந்தது இவ்வளவு அனர்த்தமும்."

"இல்லை."

மறு நாள் காலை. நல்ல தூக்கத்திலிருந்து ஏதோ சத்தம் கேட்டுத் திடீரென்று விழித்துக் கொண்டேன். எதிரில் ஜானகி நின்று கொண்டிருந்தாள்.

"விடிஞ்சு நாலு நாழியாறது. நன்னாத்தான் படுத்துத் தூங்கறேள்! எங்கப்பாவா இருந்தா இந்நேரம் ஸ்நானம் ஆகி......"

"அட தேவுடா! மறுபடியுமா?" என்று தலையில் அடித்துக் கொண்டேன். வேறே என்ன செய்வது?

**தொடர் கதை**




ஆசிரியர்: சரத்சந்திர சட்டர்ஜி—மொழிபெயர்த்தவர்: ஆர். ஷண்முகசுந்தரம்

ஏறக்குறைய ஆடையற்ற நிலையில் கமலா வெளி அறைக்குள் பிரவேசித்தாள். அங்கே ரத்த வெள்ளத்தில் அசைவற்றுத் துவண்டு ஒரு சோபாவில் காசிநாதன் கிடப்பதைக் கண்டாள். தேகமுழுதும் ரத்தமும் தூசும் படிந்திருந்தன. கண்ணிலும் மூக்கிலும் வாயிலும் ரத்தம் வழிந்து வறண்டு காணப்பட்டது. கமலா கூச்சலிட்டு, மூர்ச்சை போட்டு, அங்கேயே விழுந்து விட்டாள்.

ஜமீன்தாரின் மருமகன் இருட்டில் தனியாக எங்கேயோ போய்க் கொண்டிருந்த போது, யாரோ அவனைக் கொலை செய்துவிட்டார்கள் என்று கிராமம் பூராவும் பேச்சுப் பரவிவிட்டது.

இரண்டு நாளைக் கப்புறம் காசிநாதனுக்கு நினைவு வந்தபோது, போலீஸ் இன்ஸ்பெக்டர், "பாபு! உங்களை யார் இப்படித் தாக்கினார்கள்?" என்று கேட்டார். காசிநாதன் வானத்தைப் பார்த்துக் கொண்டு, கையை உயர்த்தி, "அவன்" என்றான்.

கிழ வேலைக்காரன் அருகில் நின்று கொண்டிருந்தான். அவனுடைய கண்களில் கண்ணீர் பெருகியது.

இன்ஸ்பெக்டர் மறுபடியும், "பாபு! அவர்களைத் தெரியுமா?" என்று கேட்டார். காசிநாதன் தெளிவற்ற குரலில், "தெரியும்" என்றான்.

இன்ஸ்பெக்டர் பரபரப்புடன், "யார் அவர்கள்?" என்றார்.

காசிநாதன் சிறிது நேரம் மௌனமாயிருந்துவிட்டு, பிறகு "நான் பொய் சொன்னேன்; எனக்கு அவர்களைத் தெரியாது" என்றான்.

இன்ஸ்பெக்டர் மறுபடியும் இரண்டு மூன்று தடவை கேட்டார். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. காசிநாதன் அதற்கு மேல் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், அடுத்த நாள் வேலைக்காரனைக் கூப்பிட்டு, "வைத்யநாத் நகரில் என் சகோதரி விந்துவாகினி இருக்கிறாள். அவளை ஒரு தரம் நான் பார்க்க விரும்புகிறேன். யாரையாவது அனுப்பி அவளை நீங்கள் வரவழையுங்கள்" என்றான்.

மூன்று நாளைக் கப்புறம் விந்துவாகினியும் யோகேஷ் பாபுவும் வந்து சேர்ந்தார்கள். விந்து கொஞ்சம் திட மனது உடைய பெண்; கமலாவைப் போலல்ல. ஆகையால், அவள் கூச்சலிடவும் இல்லை; மூர்ச்சையடையவும் இல்லை. கண்ணீரை மட்டும் துடைத்துக் கொண்டு, கலக்கம் நிறைந்த குரலில், "காசி அண்ணா! உன்னை யார் இப்படிச் செய்தது?" என்று கேட்டாள்.

"அது எனக் கெப்படித் தெரியும்?"

"யார் பேரிலாவது உனக்குச் சந்தேக மிருக்கிறதா?"

"அதைக் கேட்காதே, அம்மா!"

விந்து வாய் பேசாமல், காசிநாதனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

காசிநாதன் இவ்வளவு பெரிய காயத்திலிருந்து குணமடைந்து பிழைக்க மாட்டான் என்றே எல்லோரும் நினைத்தார்கள். அபாயமும் கொஞ்சம் கொஞ்சமாக அருகில் வரத்தொடங்கியது. அன்று இரவு வெகுநேரம் வரையிலும் ஜுரவேகத்தில் புரண்டு கொண்டு, "இந்த வேலை நீ செய்ததில்லையா? சொல்லு, கமலா!" என்று அவன் கத்தினான்.

விந்து தமையனின் முகத்தோடு முகம் வைத்து, "என்ன சொல்கிறாய், அண்ணா?" என்றாள்.

காசிநாதன் விந்துவைக் கமலா என்று நினைத்து, அவளுடைய கழுத்தில் கை போட்டு, கருணை மிகுந்த குரலில், "நான் இறந்தும் கூட நீ சுகமடைய முடியாது—அது போகட்டும்; இது உன்னால் நடைபெறவில்லையா? இதை மாத்திரம் ஒரே ஒரு தரம் சொல்லு" என்றான்.

## அத்தியாயம் 10

சிறிது நேரம் சுய நினைவு, சிறிது நேரம் நினைவிழந்த மயக்க நிலை—இப்படியாக மாறிமாறி, இரண்டு நாள் வரையில் கமலா தத்தளித்தாள். அவள் விஷயத்தில் டாக்டர்களுக்கு உள்ளுக்குள் ரொம்பப் பயம். ஆகையால், அவர்கள் சொன்ன பிரகாரம் மிகுந்த ஜாக்கிரதையுடன் அவளைச் சுற்றி அநேகம் பேர் இருந்தார்கள். இடைவிடாமல் இரண்டு நாள் சிகிச்சை செய்த பிறகு, அவளுக்குத் தன் நினைவு வந்தது. அவளைத் தூக்கி உட்கார வைத்தார்கள்.

நன்றாய்க் கண்ணை விழித்துப் பார்த்தாள். தான் இதுவரையிலும் யாருடைய மடியில் தலைவைத்திருந்தாளோ அவள் புதிதாக இருந்தாள்.

"நீ யார்?" என்று கமலா கேட்டாள்.

"நான் உன் கணவனின் சகோதரி."

கமலா வெகுநேரம் வரையிலும் விந்துவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதன் பிறகு, அறையிலிருந்த எல்லோரையும் வெளியே போகும்படி கையாலேயே சமிக்ஞை காட்டிவிட்டு, மெதுவாக, "நான் எத்தனை நேரம் இப்படி மூர்ச்சையாயிருந்தேன், அக்கா?" என்று கேட்டாள்.

"முந்தாநாள் காலையில் மூர்ச்சை போட்டு விழுந்தாய்; அப்புறம் நினைவு வரவேயில்லை."

முந்தாநாள்! கமலா திடுக்கிட்டாள். அதன் பிறகு, தலை குனிந்து, சிலை போல உட்கார்ந்து கொண்டாள். வெகுநேரம் வரையிலும் அவளுடைய உடம்பில் ஒருவித அசைவையும் காணாததால், விந்து பயமடைந்து அவளது வலது கையைப் பிடித்துக் கொண்டு, "கமலா!" என்று கூப்பிட்டாள். கமலா தலை நிமிராமல் பதில் அளித்தாள்: "பயப்படாதே, விந்து! இனி நான் மயக்கமடைய மாட்டேன்" என்றாள்.

தன்னைச் சுய நினைவுடன் வைத்துக் கொள்வதற்கு உள்ளுக்குள் கமலா சிரமப்பட்டு முயற்சிக்கிறாள் என்பதை விந்து அறிந்து கொண்டாள்.

இதனால் விந்து தைரியமடைந்து, பேசாமல் உட்கார்ந்திருந்தாள். அப்புறம் கொஞ்ச நேரம் கழிந்த பிறகு, கமலா பேசத் தொடங்கினாள்: "நீ இரண்டு நாளாக என்னை வைத்துக்கொண்டு இப்படியே உட்கார்ந்திருந்தாயா, விந்து? அப்படியிருக்க, உன்னால் எப்படி முடிந்தது? என்னால் முடியாது" என்றாள்.

அவள் வார்த்தையை விந்து நன்றாய்ப் புரிந்து கொள்ளவில்லை; "என் முடியாது, கமலா? நீ ஒன்றும் அந்நியளல்லவே? எங்களைப் பார்த்ததில்லை. இருந்தாலும், நீயும் அண்ணாவைப்போல எனக்குச் சொந்தம்தான். அவருக்குப் போலவே உனக்கும் சேவை செய்ய வேண்டியது என் கடமை, கமலா! உனக்குத் தெரியாது; நான் வந்ததிலிருந்து இந்த இரண்டு நாளும் எப்படிக் கழிந்ததோ, அது பகவானுக்குத்தான் தெரியும். ஒரு தரம் அண்ணனிடம் போவேன்; அப்புறம் உன்னிடம் வருவேன்—அண்ணாவின் அருகில் இருக்கும்போது, உன்னைப் பற்றி மனது துடிக்கும்; உன்னருகிலிருக்கும்போது, அண்ணாவைப் பற்றி மனம் திகிலடையும். இன்று சாயங்காலத்திலிருந்து, அவருக்குக் கொஞ்சம் தேவலை. அவர் நன்றாகத் தூங்குவதால், நான் உன்னிடத்தில் ஸ்திரமாக உட்கார்ந்திருக்க முடிகிறது. இந்தக் கண்டத்திலிருந்து அண்ணா பிழைத்துக் கொள்வான் என்று யாருக்கும் நம்பிக்கையில்லாமலிருந்தது, தங்காய்" என்றாள்.

"பிழைத்துக் கொண்டாரா?" என்று ஆவலுடன் கேட்டாள் கமலா.

விந்து தலையை அசைத்து, "ஆம், பிழைக்காமலென்ன! இனிப் பயப்படவேண்டியதில்லை. ஜுரம் இறங்கிவிட்டது என்று டாக்டர்களே சொல்லுகிறார்கள்!" என்றாள்.

கமலாவின் முகம் திடீரெனப் பிரகாசித்து, பிறகு சவம்போல் மாறியது. அவளுடைய உடல் ஒரு முறை நடுங்கியது. அடுத்த கணமே அவள் மீண்டும் நினைவிழந்து, விந்துவின் மடியில் சாய்ந்தாள்.

விந்து சத்தமிட்டு யாரையும் கூப்பிடவில்லை. கமலாவின் தலையைத் தன் மடிமீது வைத்துக் கொண்டு, மௌனமாக விசிறினாள். அவளிடம் இயற்கையாக எவ்வளவு தைரியமிருக்கிறதென்னும் சோதனை, அவளுடைய கணவன் நோயுற்றிருந்தபோது நடந்திருக்கிறது. சாவு அவள் கணவனின் தலைமாட்டில் வந்து உட்கார்ந்திருந்தது; அப்போதுகூட அது அவளை அசைக்கமுடியவில்லை; விந்து இப்பொழுது கமலாவின் இந்த அற்ப மூர்ச்சைக்காக ஏன் கலங்குவாள்? சிறிது நேரத்துக்கப்புறம், கமலா கண் திறந்து, தான் எங்கிருக்கிறாள் என்றுபார்த்தாள். இதன் பிறகு, விந்துவின் மடியில் குப்புறப் படுத்துக்கொண்டு மனம் குழைந்து அழத் தொடங்கினாள்.

அவள் பெருக்கிய கண்ணீர், விந்துவின்மடியிலேயே உறையத்தொடங்கியது! அதில் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வெளியில் யாருக்கும் தெரியாது. வெளியில் அமைதியான இரவின் அந்தகாரம் பரந்து சூழ்ந்தது. உள்ளே குளிர்ந்ததோர் அறையில் இருந்த இந்த இரண்டு யுவதிகளில் ஒருத்தி, தனது உருகும் உள்ளத்தின் பூரண ஜ்வாலையை மற்றவளின் ஆழ்ந்த அமைதியான மடியில் மௌனமாகப் போக்கிக்கொண்டிருந்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாகச் சாந்தமடைந்து, கமலா தன் கணவனைப் பற்றிக் கேட்டாள். ஆனால், அவள் தானே நேரில் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆவலை ஏன் வெளிப்படுத்தவில்லை என்பதை விந்து எவ்வளவோ யோசித்தும் அறிந்துகொள்ள முடியவில்லை. ஒரு சமயம் பெரிய மனிதர் வீட்டில் இம்மாதிரிதான் பழக்க வழக்கங்கள் இருக்குமோ என்றுகூட அவள் நினைத்தாள். பணிவிடையின் பொறுப்பையெல்லாம் வேலைக்காரர்களிடமே விட்டு ஒதுங்கி நின்று, தகவல் மட்டும் தெரிந்து கொள்வதாக்கும் என்றும் எண்ணினாள். திடீரென்று கமலா, "சரி அக்கா! உன் அண்ணாவுக்கு நினைவு வந்தபோது என்னைப்பற்றி ஒரு தரம் கூட அவர் விசாரிக்கவில்லையா?" என்று வினவினாள்.

"ஒரு தரம் கேட்டார்" என்றாள் விந்து. கமலா ஒன்றும் பேசாமல் உற்சாகத்துடன், வியாகூலக் கண்களோடு விந்துவின் முகத்தைப் பார்த்தாள்.

விந்து சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "நினைவு வந்ததும், அண்ணா என்னை நீ என்று நினைத்துத் தழுவிக்கொண்டு, பலமாக, இந்த வேலை நீ செய்ததில்லையா? சொல்லு, கமலா! நான் இறந்தால் கூட நீ சுகமடைய முடியாது. இது உன்னால் நடைபெறவில்லையா? இதை மாத்திரம் ஒரே ஒரு தரம் சொல்லிவிடு, கமலா!' என்றார்" என்று சொன்னாள்.

"அதற்கப்புறம்?"

"எனக்கொன்றும் தெரியாது. எதற்காக உன்னை இப்படிக் கேட்டாரோ!"

"அவர் என்ன அறிய விரும்புகிறார் என்பது எனக்குத் தெரியும், விந்து!" என்று சொல்லிவிட்டு, கமலா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

கமலாவின் கரத்தை விந்து பிடித்துக்கொண்டு "நீ அந்த அறைக்குள் போகாதே, தங்காய்!" என்றாள்.

"ஏன், ஏன் போகக்கூடாது?"

"டாக்டர் தடுத்திருக்கிறார்; உனது உயிருக்கு ஆபத்து வந்துவிடுமாம்."

"எனது ஆபத்து, என்னைவிட டாக்டருக்கு அதிகம் தெரியுமோ, அக்கா! அவரிடம் நான் போகிறேன். தூக்கம் கலைந்த பிறகு, அவர் மறுபடியும் இந்தக் கேள்வியைக் கேட்டால், நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்!" என்று கூறிய கமலா, விந்துவின் கையைப் பிடித்துக்கொண்டு, தழதழத்த குரலில், "இல்லாவிட்டால், ஆயுள் உள்ள அளவும் நான் தலை நிமிர்ந்து நடக்க முடியாது, அக்கா! என்னைத் தயவு செய்து அவரிடம் போகவிடு" என்றாள்.

இதற்குப் பிறகு, தன் மனதுக்குள்ளாகவே, "ஆண்டவா! இதுவரையிலும் என் (தாலி) மஞ்சளைக் காப்பாற்றி வந்தாய். இப்போது பொய்யை நிஜமென நிர்ணயம் செய்து அதைப் பிடுங்கிக்கொண்டு போய் விடாதே! எனக்குரிய தண்டனை எங்கே போய் விட்டது? அதைத்தான் அப்படியே வைத்திருக்கிறாயே! எந்தப் பலத்தினால் உன் கடூரமான தண்டனையைத் தையும் நான் சிரித்த வண்ணம் தலையால் தாங்க முடியுமோ, எனது அந்தப் பலத்தை மாத்திரம் பறித்து விடாதே! இது போதும், பிரபுவே!" என்று சொல்லிக் கொண்டாள்.

கணவனின் அறைக்குள் நுழைந்ததும், கமலா மனம் தளராமலிருக்க முடியவில்லை. இரண்டு நாள் உணவற்றிருந்த அவளது மெல்லிய சரீரமும், அதைவிட அதிகப் பலவீனமடைந்திருந்த மூளையும் சுழன்றன. புருஷனின் காலடியில் அவள் போய் விழுந்தாள். காசிநாதன் அப்போது விழித்துக் கொண்டுதான் இருந்தான். யாரோ காலடியில் விழுந்ததாக அவனுக்குத் தெரிந்தது. ஆனால், எழுந்து பார்ப்பதற்கு அவனிடம் தென்பு இல்லை. ஆகையால், அவன் படுத்துக்கொண்டே, "யார், விந்து?" என்று கேட்டான்.

"வேறு யாரும் இல்லை, அண்ணா! கமலாதான்" என்றாள் விந்து.

"கமலாவா! நீ இங்கே ஏன் வந்தாய், கமலா?"

காசிநாதனின் தலைமாட்டில் விந்து உட்கார்ந்து கொண்டு, "இவள் தன்னைத் தானே சமாளித்துக்கொள்ள முடியவில்லை; மயக்கமடைந்து விழுந்திருக்கிறாள், அண்ணா!" என்றாள்.

காசிநாதன் பேசவில்லை. விந்து மறுபடியும், "நான் இன்று இரவு வரவேண்டாமென்று தடுத்தேன். இரண்டு நாளைக்கப்புறம் இப்பொழுதுதான் அவளுக்குப் பிரக்ஞை வந்தது. அப்படியிருக்க, எவ்விதம் இந்த அறைக்குள் வந்து, தன்னை அவள் அடக்கிக்கொள்ள முடியும்? இது எனக்கு நன்றாய்த் தெரியும்!" என்றாள்.

கணவனின் கால்களுக்கிடையே, தனது முகத்தைப் புதைத்துக்கொண்டு, கமலா அவ்விதமே வெகு நேரம் படுத்திருந்தாள். அவளது சூடான கண்ணீர் வெள்ளத்தைத் தன் குளிர்ந்த கால்களினால் காசிநாதன் உணர்ந்தான். இதனால் அவன் மெள்ள மெள்ள "ஆம், இவள் இங்கே வராதிருந்திருப்பதே நல்லது" என்றான்.

கமலாவைப் பார்க்கப் பார்க்க, விந்துவின் கண்களில் நீர் நிறைந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "நல்லதாய்த்தானிருந்திருக்கும். ஆனால், அப்படி யாராவது இருக்க முடியுமா, அண்ணா? நீ குணமடைந்து விட்டாய். இந்த இரண்டு நாளையும் இவள் எவ்விதம் கழித்தாள்? அது எனக்கும் கடவுளுக்குந்தான் தெரியும்; அவளுக்கே கூடத் தெரியாது" என்றாள்.

காசிநாதன் கண்ணை மூடிக் கொண்டு, தன் வெளித் திருஷ்டியை யெல்லாம் கணநேரத்தில் உள்ளே திருப்பி, உலகத்தின் சகல ஜீவராசிகளிடத்திலும் வசிக்கும் அந்தர்யாமியின் பாதத்திலே ஒரு கேள்வியை ஸமர்ப்பித்துப் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அதன் பிறகு கண்ணைத் திறந்து, "என் உயிருக்கு இனிப் பயமில்லை, கமலா! எழுந்து உட்கார்" என்றான்.

"அண்ணா! என்னிடம் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவே கமலா வந்திருக்கிறாள்" என்றாள் விந்து.

காசிநாதனின் வெளிறிட்ட உதடுகளில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. "இனி யாருக்கும் ஒரு பதிலும் அவள் சொல்ல வேண்டியதில்லை, விந்து! இந்த இரண்டு நாளாக மூர்ச்சையாய்க் கிடந்திருக்கிறாளே, அதிலிருந்தே எனக்குப் பூராப் பதிலும் கிடைத்து விட்டது" என்று சொல்லி, தன் இடது கையை ஊன்றி, அவன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். பிறகு, வலது கையால் கமலாவின் முகத்தைத் தூக்குவதற்கு முயற்சித்துக் கொண்டு, "கமலா!" என்று அழைத்தான்.

கமலா ஒன்றும் பேசவில்லை, அவள் அப்படியே அசையாமல் அவனுடைய காலின்மேல் முகத்தை வைத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் பெருகிக்கொண்டேயிருந்தது.

"விந்து!" என்று அழைத்தான் காசிநாதன்.

விந்து கவலையுடன் "நீ தூக்காதே, அண்ணா! டாக்டர் சொல்லிப் போயிருக்கிறார். அப்புறம்—" என்றாள்.

காசிநாதன் புன்சிரிப்புடன் "டாக்டர் என்ன சொன்னாலும், இனிப் பயப்பட வேண்டியதில்லை யென்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். இந்தக் கண்டத்திலிருந்து நீங்கள் என்னைக் காப்பாற்றி விட்டீர்கள்" என்றான்.

அதன் பிறகு காசிநாதன், கமலாவின் கலைந்திருந்த கூந்தலைச் சிறிது நேரம் கோதிக்கொண்டிருந்து விட்டுப் படுத்துக் கொண்டான்.

**முற்றிற்று.**

# கார்ட்டூன் கதம்பம்

பாரத சக்தி கட்டிக் கிடக்கிறது. ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாக்க, பாரத தேசத்தின் சுதந்திரம் இன்றியமையாததென்பதைச் சர்ச்சில் இன்னும் உணரவில்லையே!

ஸ்டார் ஆப் இந்தியாவில்
'வாசு'




சங்கிலியை அவிழ்த்து இந்த யானைக்குச் சுதந்திரம் கொடுத்துத் தன் அவதியை நீக்கிக் கொள்ளத் தெரியாத இந்த மனிதனைப் பார்த்தால், 'கண்ணிருந்தும் குருடு, காதிருந்தும் செவிடு' என்னும் மொழி ஞாபகத்துக்கு வருகிறதல்லவா?

ஆனந்த விகடனில்
'சிவம்'




உரலுக்கு ஒருபுறம் இடி, மத்தளத்துக்கு இருபுறமும் இடி என்பதுபோல், அரசியல் பந்தத்தால் கட்டுண்ட இந்தியா திக்கற்று நிற்பதை இந்தச் சித்திரம் விளக்குகிறது.

கல்கியில்
'ஊமன்'



# ஆண்மை தரும் கல்வி

சுவாமி விவேகானந்தர்

'கல்வி' என்னும் பொருள் பற்றி, சுவாமி விவேகானந்தர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அருளிய பற்பல பொன் மொழிகளையும் பொறுக்கித் தொகுத்துத் தொடர்ச்சியான பல கட்டுரைகளாக இசைத்து மொழிபெயர்த்து, ஸ்ரீ. தி. சு. அவினாசிலிங்கம் ஒரு நூலைத் தயாரித்துள்ளார். 'கல்வி' என்னும் பெயருடன் அவ்வரிய நூல் கோவை ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளது. அந்தப் புத்தகத்தில் உள்ளதோர் அத்தியாயம் இந்தக் கட்டுரை.




ஐரோப்பாவில் பல நகரங்களுக்கு நான் சென்றிருக்கிறேன். அங்கு ஏழை மக்களும் எவ்வளவு நாகரிகத்துடனும் சௌகரியத்துடனும் வாழ்கிறார்கள் என்பதைக் கவனித்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் நம் நாட்டு ஏழை மக்களின் நினைவு என் மனதில் வர, கண்ணீர் சிந்தி அழுதிருக்கிறேன். இந்த வித்தியாசத்திற்குக் காரணம்தான் என்ன? 'கல்வி' என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை. கல்வி, தன்னம்பிக்கை — இவற்றின் மூலமே, நம்முள் மறைந்திருக்குந் தெய்விக சக்தியை நாம் வெளிப் படுத்த முடியும்.

அயர்லாந்தி லிருந்து அமெரிக்காவுக்குக் குடியேற வரும் மனிதர்களை நான் நியூயார்க் நகரத்தில் கவனித்திருக்கிறேன். அவர்கள் வரும்போது மனம்தளர்ந்து, வாழ்க்கையில் அடிபட்டுச் சலித்துப் போன தோற்றத்துடன் யாதொரு விதமான நல்ல உடையுமின்றி, கையில் காசுமின்றி, மனதில் உற்சாகமும் இன்றி வருவார்கள். கையில் ஒரு தடி, அதன் ஓரத்தில் சில கந்தைத் துணிகள் — இவையே அவர்களிடமிருந்த சொத்துக்கள். அஞ்சிய நடையும் வெருண்ட பார்வையும் அவர்களிடம் தென்படும். ஆனால் ஆறு மாதங்களில் இக்கோலம் முற்றிலும் வேறுபடுகிறது: நிமிர்ந்து நடக்கிறார்கள்; உடை மாறி இருக்கிறது; அவர்கள் கண்களிலும் நடையிலும் முன்னிருந்த பயமும் மருட்சியும் இல்லை. இதற்குக் காரணம் என்ன? அயர்லாந்தில் அவர்கள் கேவலமாக நினைக்கப்பட்டு, கேவலமாக நடத்தப் பட்டு வந்தார்கள். இயற்கையே அவர்களில் ஒவ்வொருவனையும் பார்த்து 'அப்பா, உனக்கு நல் வாழ்க்கை கிடையாது. நீ அடிமையாகப் பிறந்து அடிமையாகவே உன் வாழ்க்கையைக் கழித்து, அடிமையாகவே சாக வேண்டியது தான்' என்று உரைத்த மாதிரியிருந்தது. பிறவியிலிருந்தே இதுபோன்ற வார்த்தைகளைக் கேட்டதால் அவன் அவற்றை நம்பி, தான் மிகவும் தாழ்ந்தவன் என்ற உணர்ச்சியால் மயங்கிக் கிடந்தான். ஆனால், அமெரிக்காவில் அவன் காலடி எடுத்து வைத்ததும் வேறு சப்தங்கள் அவன் காதில் விழுந்தன: 'அப்பா, எங்களைப்போல் நீயும் ஒரு மனிதன். உலகில் உயர்ந்த காரியங்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் மனிதர்கள். அவர்கள் உன்னையும் என்னையும்போன்றவர்களே. ஆண்மை மாத்திரம் இருந்தால், நம்மைப் போன்ற மனிதர்கள் எதையும் செய்து முடிக்க முடியும். எனவே, தைரியத்தை மேற்கொள்!' அவன் இவ்வார்த்தைகளைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். அவ்வார்த்தைகள் உண்மை என்பதை உணர்ந்தான். இயற்கையே அவன்முன் நின்று 'எழுந்திரு, விழித்திரு, கருதிய கருமம் கைகூடும்வரை உழைத்திடு' என்று கூறுவதுபோ லிருந்தது.

அயர்லாந்தில் போலவே நம் நாட்டுச் சிறுவர்களும் எதிர்மறைக் கல்வி பெறுகிறார்கள். இக்கல்வி முறையில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆனால், இதன் கெடுதல்கள் அதன் நல்ல அம்சங்கள் அனைத்தையும் மறைக்கும்படி அவ்வளவு அதிகமாக விருக்கின்றன. முதலாவதாக, அது நம் மக்களுக்கு மனிதத்தன்மை யளிக்கக் கூடிய கல்வியாக இல்லை; அது முற்றிலும் எதிர்மறைத் தன்மை யதா யிருக்கிறது. எதிர்மறை உணர்ச்சியை ஊட்டும் கல்வி அல்லது பயிற்சி சாவினும் கொடியது.

நாம் எந்த விதமான சக்தியும் வலிமையும் அற்றவர்கள் என்று அதன் மூலம் போதிக்கப்பட் டிருக்கிறோம். உலகில் உயர்ந்த பெரியோர்கள் நம் நாட்டில் தோன்றியிருக்கிறார்கள் என்பதே நமக்குச் சாதாரணமாக உணர்த்தப்படுவதில்லை. உடன்பாட்டு முறையில் நமக்கு எதுவும் கற்பிக்கப்படுவது கிடையாது. நம் கைகளையும் கால்களையும் சரியாகப் பயன்படுத்தக் கூட நாம் கற்றுக்கொள்ள வில்லை. இதன் காரணமாகச் சென்ற ஐம்பது வருஷங்களில் இக்கல்வியின் மூலம் அறிவு வளர்ச்சியில் தேர்ந்த ஒருவர்கூட உண்டாக்கப்பட வில்லை. தற்காலத்தில் நம் நாட்டில் தோன்றிய அறிவாளிகள் அனைவரும் வெளிநாடுகளில் கல்வி பயின்றவர்க ளாகவோ, நம் நாட்டில்

## மதுரையில் தமிழ்ப் புத்தகசாலை

மதுரை வாசிகளின் சௌகரியத்தை முன்னிட்டு சென்னை சக்தி காரியாலய புத்தக சாலையின் கிளை ஸ்தாபனம் வடக்கு வெளி வீதியில் (20-2-42) காலை 9-மணிக்கு திரு. N. M. R. சுப்பராமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**சக்தி காரியாலயத்தார்**

### சக்தி மலர்கள்

**இனி நாம் செய்ய வேண்டுவது யாது?** ரூ. 1 0

இந்நூல் மாகாத்மா காந்தியடிகள் தமது குருவெனப் போற்றும் ருஷ்யப் பெரியார் லியோ டால்ஸ்டாய் எழுதிய 'What then must we do?' என்னும் அரிய நூலின் இனிய மொழி பெயர்ப்பு. இரண்டாம் பதிப்பு.

**கமலா முதலிய சிறு கதைகள்** ரூ. 1 0

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள கதைகளில் தமிழ்ப் பண்பு வீசுகிறது. இலக்கிய ரஸிகர்களுக்கு நல்விருந்து. ஆர். திருஞானசம்பந்தம் எழுதியது. ('ஹிந்துஸ்தான்' — உதவி ஆசிரியர்)

**ஜப்பான்** ரூ. 1 0

'உலகஞ் சுற்றும் தமிழன்' ஆசிரியர் திரு. ஏ. கே. செட்டியார் தமது ஜப்பான் யாத்திரையில் தாம் நேரில் கண்டவைகளை இதில் விவரமாய் எழுதி யுள்ளார். இரண்டாம் பதிப்பு.

**கல்வி** ரூ. 0 12

'ஒழுக்கம் அளிப்பது, மனோவலிமை தருவது, புத்தியை விசாலிக்கச் செய்வது, தன் வலிவைக் கொண்டு தன்னம்பிக்கையுடனிருக்கச் செய்வது—கல்வி': ஸ்வாமி விவேகாநந்தர் அருளிய பல அரிய கருத்துக்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.


## சிற்பியின் கனவு!



★

மாசிலாத ஒரு மணி மண்டபம் கட்ட அன்று ஒரு சிற்பி கனவு கண்டான். கனவு நனவாகி தாஜ்மஹால் எழுந்தது.

மாசிலாத ஒரு மசியைத் தயாரிக்க விக்ஞானிகள் கனவு கண்டனர். கனவு இன்று நனவாகி அதன் பலன்தான்




# ஜப்கோ பௌண்டிங்க்

JAYA BHARATHAM CO., P. B. 83, MADRAS


Bengal
for
BETTER
LIGHT
BENGAL

இன்னும் சிற்சில இடங்களில் திகழும் பழைய கலாசாலைகளில் மறுபடியும் பயின்று தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டவர்களாகவோ இருக்கிறார்கள்.

கல்வி யென்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களையும் திணிப்பதன்று. அப்படித் திணிக்கப்படும் விஷயங்கள் வாழ்நாள் முழுதும் செரியாமல் உபத்திரவம் செய்துகொண் டிருக்கும்; அதனால் என்ன பயன்? கற்கும் விஷயங்கள் நன்றாக ஜீரணமாகிப் பயன்பட வேண்டும். அவை உயிர் ஊட்டுவனவாய், ஊக்கம் அளிப்பனவாய், ஒழுக்கம் அமைப்பனவாய், மனிதத் தன்மை தருவனவாய் இருக்க வேண்டும். நீங்கள் ஐந்தே ஐந்து உயர்ந்த கருத்துக்களை நன்றாகக் கிரகித்து, அவற்றை உங்கள் வாழ்க்கையிலும் நடத்தையிலும் ஊன்றி நிற்கும்படி செய்வீர்களானால், ஒரு பெரிய புத்தகசாலை முழுவதையும் மனப்பாடம் செய்தவனைவிடப் பெரிய கல்விமான்களாவீர்கள். வெறும் விஷயங்களைச் சேகரிப்பதுதான் கல்வி என்றால், புத்தகசாலைகள் என்றோ பெரிய மகான்களா யிருக்கும்! அகராதிகள் என்றோ ரிஷிகளாகி விடும்!

**அ**ன்னிய பாஷைகளி லுள்ள மற்ற மனிதர்களுடைய எண்ணங்கள் சிலவற்றை மனப்பாடம் செய்வதை நீங்கள் கல்வியெனக் கொண்டிருக்கிறீர்கள். பல விஷயங்கள் மூளையில் திணிக்கப்பட்டு ஒரு சர்வகலாசாலைப் பட்டம் பெற்று விட்டால், உங்களைக் கல்விமான்கள் என்று நினைத்துக்கொண் டிருக்கிறீர்கள். இது உண்மையில் கல்வியாகுமா? உங்கள் கல்வியின் நோக்கமென்ன? ஒரு குமாஸ்தா ஆவது, அல்லது வக்கீல் ஆவது, அல்லது மீறினால், ஒரு மாஜிஸ்ட்ரேட் ஆவது—இவைதானா உங்கள் லட்சியம்? இவை உங்களுக்கும் உங்கள் நாட்டுக்கும் என்ன நன்மை செய்யும்? கண் விழித்துப் பாருங்கள்! அளவற்ற உணவுக்கும் வளத்துக்கும் பெயர்பெற்ற இப்பாரத நாட்டில், இப்பொழுது உணவின்றித் தவிப்பவர்கள் எவ்வளவு பேர்கள் என்பதைக் கவனித்துப் பாருங்கள்! உங்கள் கல்வி இக்குறையை நீக்குமா? சாதாரண மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தைரியமாக நடத்துவதற்கு உதவக்கூடிய பயிற்சியைக் கொடாத ஒரு கல்வியும் கல்வியாகுமா? மக்கள் மனதில் புதைந்துள்ள மனோவலிமையையும், தரும சிந்தையையும், ஆண்மையையும் வெளிப்படுத்தாத ஒரு கல்வி முறையைக் கல்வியெனச் சொல்லல் தகுமா?

ஒழுக்கம் அளிப்பது, மனோவலிமை தருவது, புத்தியை விசாலிக்கச் செய்வது, ஒருவனைத் தன் வலிமை கொண்டு தன்னம்பிக்கையுடனிருக்கச் செய்வது ஆகிய இவற்றை யளிக்கும் கல்வியே நமக்கு வேண்டும். அன்னிய ஆதிக்கமின்றி நம் சொந்த ஞானத்துறைகள் எல்லாவற்றையும் நாம் ஆராய்ச்சி செய்தல் அவசியம். அத்துடன் ஆங்கில பாஷையையும், மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரங்களையும் நாம் கற்க வேண்டும். இவற்றுடன் தொழிற் கல்வியும், தொழில் வளர்ச்சிக்குள்ள சகல அறிவும் நமக்குத் தேவை. இவற்றின் மூலம் படித்தவர்கள் உத்தியோகம் தேடி அலைவதற்குப் பதிலாக, தங்களுக்கு வேண்டிய அளவு சம்பாதித்துக் கொள்ளவும், கஷ்ட காலத்திற்கெனச் சிறிது பொருள் சேகரித்து வைக்கவும் சக்தி பெறுவார்கள்.

**ஆ**ண்மை யளிப்பதே கல்வியின் லக்ஷியமா யிருக்கவேண்டும். எல்லாப் பயிற்சிகளின் நோக்கமும் அதுவே. மனிதனுடைய மனோ சக்தியைத் தன் வசப்படுத்தி, பயன்படுத்தத்தக்க துறையில் செலுத்த உதவுவதே கல்வி யெனப்படும்.

இரும்புபோன்ற தசைகளும், எஃகுபோன்ற நரம்புகளும், எதுவும் தடுக்க முடியாத அளவற்ற சக்தியும் வாய்ந்தவர்களே நம் நாட்டுக்கு இப்பொழுது தேவை. அவர்களது சக்தி எதற்கும் அஞ்சாததாய், அண்ட சராசரங்களின் அந்தரங்க இரகசியங்களையும் ஊடுருவி அறிய வல்லதாய், அறிந்தபின் அவற்றின் நோக்கத்தை எவ்வகையிலும் பூர்த்தி செய்யும் ஆற்றல் உள்ளதாய், அவசியமானால் ஆழக்கடலின் அடியிலும் செல்ல வல்லதாய், மரணம் ஏற்படினும் அஞ்சாததா யிருக்க வேண்டும். அத்தகைய ஆண்மை தரக்கூடிய மதமே நமக்கு அவசியம்; ஆண்மை தரக்கூடிய கொள்கைகளே நமக்கு வேண்டும்; ஆண்மை தரக்கூடிய கல்வியே நமக்குத் தேவை.

—

“ஒரு கன்னத்தி லறைந்தால், மறு கன்னத்தைக் காட்டு” என்று உபதேசித்தார் உத்தம சமாதான வாதியான கிறிஸ்து பெருமான். அவரைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களின் வேதமான பைபிளுக்கு ஒரு நூதனப்பதிப்பு லண்டனில் தயாராகி யிருக்கிறதாம். அதிலே, ஏரோப்பிளேன்கள், டாங்கிகள், படைவீரர் ஊர்வலங்கள் ஆகியவைகளைச் சித்தரித்த படங்கள் ஏராளமாய் அச்சிடப்பட் டிருக்கின்றனவாம்!

—

## வருமான வரிக்கு வட்டி

வருமான வரி யென்றால், அதைச் செலுத்த உலகத்திலே எந்தத் தேசத்தாருக்கும் மனம் வருவதில்லை. ஆனால், ஐக்கிய அமெரிக்க ஜனங்கள் மட்டில், தங்கள் வரிக்குமேல் மிக அதிகமாகவே சர்க்காருக்குப் பணம் செலுத்திவிடுகிறார்களாம். இதன் ரகஸ்யம் என்ன தெரியுமோ? அதிலும் ஒரு லாபம் இருப்பதுதான் அந்த ரகஸ்யம்.

தங்கள் வரிக்குமேல் அதிகப் பணத்தை யாரும் சர்க்காரிடம் செலுத்தினால், பின்னால் கணக்குப் பார்க்கும்போது, வித்தியாசம் தெரியுமாம். அதிகமாய்ச் செலுத்தப்பட்ட பணத்துக்கு அப்போது ஆறு சதவிகிதம் வட்டிசேர்த்து, சர்க்கார் திருப்பிக் கொடுக்கிறார்களாம். ஆறு சதவிகிதம் வேறெங்கும் வட்டி கிடைக்காதல்லவா? இதற்காகவே அநேகர் சர்க்காரிடம் வருமான வரிக்குமேல் பணம் செலுத்தி லாபம் அடிக்கிறார்களாம்!

*  *

அவர்களுக்கும் இந்தியர்கள் என்றுதான் பெயர். ஆனால், நம் நாட்டுக்குச் சம்பந்தமே கிடையாது. அமெரிக்காவில் இப்படிப் பல ‘இந்தியர்’களுண்டு. பொலிவியா என்னுமிடத்தில் உள்ள இந்த இந்தியர்கள், ஏரோப்ளேன்களை ‘இடிக்குஞ்சு’கள் என்று நினைக்கின்றார்களாம். ஒரு சமயம அவர்களுடைய ஊர் அருகே ஒரு ஏரோப்ளேன் போய்த் தங்கியதாம். அவ்விடத்திய இந்தியச் சிற்றரசன் தன் ஒற்றர் சிலரை அனுப்பி, அந்த ஏரோப்பிளேனின் கீழே பதுங்கி, அது முட்டையிடும் போது ஒன்றிரண்டு முட்டைகளை விமானிக்குத் தெரியாமல் தூக்கிவந்து விடும்படி அனுப்பினானாம். அந்த முட்டைகள் குஞ்சுபொரித்து விமானங்களாகிவிட்டால், தான் உபயோகிக்கலா மல்லவா, அதற்காக!

# இயற்கையின் யுத்த விமானம்

வ. சு. மணி

'தட்டான், தட்டான்! கல்லைத் தூக்கு!' என்று குழந்தைகள் ஒரு பூச்சியைத் தொந்திரவு செய்வதுண்டல்லவா? அந்தத் தட்டாரப் பூச்சியைத்தான் இயற்கையின் 'யுத்த விமானம்' என்று குறிப்பிடுகிறேன். போர்க் காலங்களில்தான் நாம் அதிகமாக ஆகாய விமானங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம்; மிகுதியாக நமது கண்ணுக்கும் அவை தென்படுகின்றன. தட்டாரப் பூச்சிகளையும் இப்படியே சில காலங்களில்தான் பார்க்க முடியும். மழைக் காலம் முடிந்து குளிர் காலம் ஆரம்பிக்கு முன், தட்டான்கள் ஏராளமாக மரங்களுக்கும் செடிகளுக்கும் சற்று உயரத்தில் காலையிலும் மாலையிலும் உல்லாசமாகப் பறந்து வருவதை யாவரும் கண்டிருக்கலாம். இவைகளின் பிறப்பு வளர்ப்பு மிகுந்த விசித்திரமானது. பிராமணன் இரு பிறப்பு அடைந்தவன் என்கிறார்கள். ஒன்று, சாதாரணமாகப் பிறப்பது; இரண்டாவது பிறப்பு, பிரம்ம ஞானத்தை அடைவது. இது உண்மையோ பொய்யோ; தட்டானுக்கு மாத்திரம் மூன்று பிறப்பு உண்டு.

தாய்த் தட்டான் தன் வயிற்றில் பல முட்டைகளைத் தாங்கி நீரின்மேல் பறந்து வருகிறது. பறந்து வரும் பொழுது, தன் வாலினால் நீரைத் தொட்டுத் தொட்டு வருவதைக் காணலாம். அது ஒவ்வொரு முறை அப்படித் தொடும் பொழுதும், பல முட்டைகளை நீரில் இட்டுவிடுகிறது. இந்த முட்டைகள் மிதந்து கரையோரங்களில் முளைத்திருக்கும் புல், நீர்ப் பூண்டுகளுக்கு இடையே ஒதுங்கி நிற்கின்றன. பிறகு, சூரிய வெப்பத்தால் பொரிகின்றன. தட்டாரப் புழுக்கள் வெளி வருகின்றன. வெளி வந்த அந்தப் புழுக்கள் நீரின் அடித்தளத்துக்குச் சென்று தங்கி விடுகின்றன. அழுக்கு, பாசி, சிறிய பூச்சி முதலியவைகளை அங்கே இந்தப் புழுக்கள் தின்று வளர்கின்றன. நீரின் அடியில் வளரும் இந்தத் தட்டான் புழுக்கள் பறக்கும் தட்டானைப் போலவே இருக்கின்றன. ஆனால், வாலும் இறக்கைகளும் மட்டில் கிடையாது. பறக்கும் தட்டானைப் போலவே தலையும் ஆறு கால்களும் இந்தப் புழுக்களுக்கும் இருக்கின்றன. நீரின் அடித் தலத்தில் இந்தப் புழுக்கள்



தங்கள் கால்களால் நகர்ந்து, ஆகாரம் தேடிக் கொள்ளுகின்றன. நன்றாக வளர்ந்த பிறகு, நீரின் அடியிலே இந்தப் புழுக்களால் வசிக்க முடியாது. இவை தங்களுடைய வாழ்வு நீரின் அடியில் இல்லை என்பதை உணர்கின்றன. பூண்டுகளைப் பற்றிக் கொண்டு, மெதுவாக நீரின் மேல் மட்டத்துக்கு இந்தப் புழுக்கள் வந்து விடுகின்றன. வந்த சிறிது நேரத்தில், பாம்பு சட்டையை உரிப்பது போல, தங்களது புழு உடலைத் தள்ளி விடுகின்றன. புழு உடலிலிருந்து நான்கு மெல்லிய இறக்கைகளுடனும் ஒரு வாலுடனும் தட்டான் வெளியாகிறது. உடனே அது தன் இறக்கைகளை உலர்த்திக் கொண்டு, சுதந்திரம் கண்டவன் போல, ஆகாயத்திலே பறந்து விடுகிறது!

தாய் வயிற்றில் ஒரு பிறப்பு; முட்டையில் இரண்டாவது பிறப்பு; புழுவில் மூன்றாவது பிறப்பு—ஆக மூன்று பிறவிகளையும் கடந்து வந்து, இந்தத் தட்டான்கள் செய்யும் வேலைதான் என்னவோ?

மழைக்காலம் ஓய்ந்ததும், புல் பூண்டுகள் வளர்கின்றன. கொசு, பலவகைப் பூச்சிகள், தவளைகள் ஆகிய ஜந்துக்களும் முட்டைகள் இட்டுத் தங்கள் இனங்களைப் பெருக்கி விடுகின்றன. எங்கும் உயிர் இனங்களின் நடமாட்டம். மாலை நேரங்களில் கொசுக்களின் கீதம் 'ஞொய்' என்று சப்திக்கிறது.

சூரியன் மேற்கே மறைந்து கொண்டிருக்கிறான். கொசுக்களும் 'இருட்டு வந்தது' என்று களித்துச் செடிகளிலிருந்து வெளியே கிளம்புகின்றன. ஒரு தட்டான் ஒரு கொசுவைத் தட்டுகிறது; கொன்று தின்று விடுகிறது.

ஏராளமான கொசுக்கள் கூட்டம் கூட்டமாக வெளிக் கிளம்பி ஆகாயத்திலே பறக்கின்றன. அமைதியாகப் பறந்து திரிந்து கொண்டிருந்த தட்டான்களிடையே ஒரு பரபரப்பு ஏற்படுகிறது. எதிரி விமானங்களைக் கண்ட மாத்திரத்தில் தாக்கப் புறப்படும் யுத்த விமானங்களைப் போல, தட்டான்களும் சிறிய வட்டங்களிட்டும் பெரிய வட்டங்களிட்டும், பாய்ந்து பாய்ந்து, கொசுக்களைத் தாக்கிக் கொல்லுகின்றன. ஒரு நிமிஷத்தில் கொசுக்கள் அழிகின்றன. தட்டான்கள் முன்போல் அமைதியாகப் பறக்கின்றன. கொசுக்கள் வெளியே கிளம்பி வர முயற்சிக்கும் பொழுதெல்லாம், அவைகளைத் தட்டான்கள் தாக்கி அழித்து விடுகின்றன.

இந்த அழிவிலும் மிஞ்சி உயிர் தப்பி வரும் கொசுக்களே நமக்கு ஸகிக்க முடியாத தொந்திரவைக் கொடுக்கின்றன. அவ்வளவு கொசுக்களுமே உயிர் தப்பி வருமானால், நமது கதிதான் என்னவோ! இயற்கைத் தேவி அதிக உற்பத்தியைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் கையாண்டு வரும் முறைகள் யாவுமே இந்த மாதிரி மிக்க விசித்திரந்தான்.

# ஜப்பான் நோட்டு




மலாயாவில் வரும்போதே ஜப்பானியர், இந்தக் காகித நாணயங்களையும் தயாராய்க் கொண்டுவந்து நுழைத்துவிட்டார்கள்! ஊரைப் பிடிக்குமுன் ஜனங்களின் செல்வத்தைப் பறிக்க, அடடா! என்ன ஜரூர்!



# காலி வீடு

லா. ச. ராமாமிருதம்

வெள்ளி முளைத்து, கிழக்கில் வெண்மை படரும் வேளையில், திடீரென்று, அவ்வீடு கண் முன் தோன்றியதும், வழிதப்பி இரவெல்லாம் தேடித் தவிக்கும் அவ்வழிப் போக்கர்களுக்கு அது ஏதோ கடவுள் அருளிய வரம் போலிருந்தது. மார்பில் ஒரு கையை வைத்து, பகவானை வாழ்த்தி வீட்டை நோக்கி ஓர் அடி முன்னெடுத்து வைக்கையில்...

புதரொன்று சலசலத்தது.

அவனுக்கு வயிறு பகீரென்றது. இத்தனைநாழி இரவெல்லாம் பூச்சி பொட்டுக்குத் தப்பியபின், விமோசனம் நேரும் வேளையில்...

இவனைப் போன்றே, தூசி படிந்து, உருக்குலைந்து, ஆடை கிழிந்து மற்றோர் ஆள் புதர்களை விலக்கிக்கொண்டு, இவன் எதிரில் வந்து நின்றான். இருவரும், ஒரு கணம் ஒருவரையொருவர் நோட்டம் பார்த்து நின்றனர்.

அதோ ... தூரத்தில் ஓங்கிப் படர்ந்த மலைச்சாரலுக்கும், அதையொட்டி அடர்ந்த புதர்ப் பிரதேசத்துக்கும், பிறகு கண்ணுக்கு எட்டிய தூரம் பரந்த சமவெளிக்கும், அதில் அங்கங்கே சிதறிய சிறு வயல்களுக்கும் இடையில் பட்டைதீட்டியதுபோல் ஓடும் அருவி... இம்மாதிரி இயற்கை வெளி விளங்கும் இவ்விடத்தில் இவ்விரு மனிதப் புழுக்களும் பரஸ்பரம் பார்த்து வெறிப்பது விபரீதத்தின் வேடிக்கைதான்.

பிறகு, புது ஆசாமி, ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, "பார், தன்னை முழுக்கும் இரவைச் சமாளித்துக்கொண்டு வெளிக்கிளம்பும் இரவியின் வேளையில், இவ்வீடு, இரவெனும் மாது நடுநிசியில் ஈன்றெடுத்து மறைக்க முயலும், மர்ம மகவுபோல் இருக்கிறது..."

இந்தக் கற்பனையைக் கேட்டதும், மற்றவனின் முகத்தில் அருவருப்புத் தட்டியது.

"இதென்ன இழவு! நான் ஏதாவது கவியரசுடன், இந்தத் தனியிடத்தில் மாட்டிக்கொண்டேனா என்ன?..."

"ஆம், நான் கொஞ்சம் கவிதான்—ஆனால் இன்னும் அரசாகவில்லை—நீ யார்?"

வேறிடத்தில், இப்படி ஒருவரையொருவர், முன்பின் அறியாமல், ஒருமையில் பேசியிருந்தால், அப்பொழுதே ஒருவர்(முன்) குடுமியை ஒருவர் பிடித்துக் கொண்டிருப்பர். ஆனால், இங்கேயோ சமூகத்தின் கோட்பாடுகளும் மரியாதையு மெல்லாம் வெறும் புரளியேயாகும்.

"நான்...நான்.. கதாசிரியன்.."

"ஓஹோ...வியாசரோ?..."

"நான் அவ்வளவு பெரிய காவியகர்த்தா அல்ல...ஏதோ..."

"நான் வியாசரைக் குறிக்கவில்லை...வியாசர் என்றால், வியாசம் எழுதுபவன் என்று அர்த்தம்..."

கதாசிரியனின் கைகள் குறுகுறு வென்றன. சிரமப்பட்டுச் சமாளித்துக் கொண்டு, "எனக்குக் கவிதையில் நம்பிக்கையில்லை. மூக்கு எங்கே என்றால், மண்டையைச் சுற்றிப் பிடிக்கும் வழக்கம் எனக்கில்லை; நேரேதான் பிடிப்பேன். இப்பொழுது எதிரிலிருக்கும் வீடு, எனக்கு வீடாய்த் தான் தோன்றுகிறது. எனக்குப் பசிக்கிறது. பசியென்றால், சாதாரணமல்ல; அடிவயிற்றைக் கிள்ளுகிறது. ஆனால், உன்னுடைய கோளாறு எப்படி இதை விஸ்தரிக்கிறதோ! இம் மெய்யனல் ஆகுதியைத் தேடி அளாவுகிறது..."

"அனலில், மெய்யனல், பொய்யனலென்றும் உண்டோ?..."

"சரி சரி. உன் வித்தையை உனக்கே நான் சொல்லிக் கொடுக்கவேண்டும் போலிருக்கிறதே! மெய் என்றால் உடல்; அனல் என்றால் நெருப்பு...இது தெரியாதா?"

கவியின் முகத்தில் அசடு தட்டிற்று. "உனக்கும் நமக்கும் ஒவ்வாதென்றே நினைக்கிறேன்..." என்றான்.

"ஆ, பார்த்தாயா, கவிதையற்ற பேச்சு! ஆயினும் அவ் வாக்கில் எவ்வளவு அர்த்தபுஷ்டி! பளிச்சென்றிருக்கிறது; பளிங்குபோல் இருக்கிறது. சரி, உன்னுடன் சண்டையிட எனக்கு இப்பொழுது தென்பில்லை. அங்கேபோய் ஆகாரத்துக்கு வழிதேடுவோம்... ஆனால்.....உனக்கு......கற்பனையே ஆகாரம் என்றால்...ரொம்ப உத்தமமாய்ப் போயிற்று..."

"இல்லை, நான் ஆகாரமும் சாப்பிடுவ துண்டு..."

"சரி, வா... போய் இரப்போம்..."

கதவு பூட்டியில்லை. கதாசிரியன் இரு முறை கதவை மெல்லத் தட்டிப் பார்த்தான். பதில் இல்லை. கொஞ்சம் அழுத்தித் தள்ளவும், கதவு 'க்ரீச்' என்று கத்திக் கொண்டு திறந்தது. இருவரும் உள்ளே புகுந்தார்கள்.

வீடு சற்று நீள வாக்கில், முதலில் ரேழி, பிறகு முற்றம், அடுத்

# ‘டோவர்’
## ரேடியோக்கள்
( பிரிட்டிஷ் மேக் )



5 VALVES
MODEL 'DOVER'
3 WAVE BANDS
Rs. 245/-

**நீங்கள் ஏன் ‘டோவர்’ ரேடியோவையே வாங்கவேண்டும்?**

உயர்தரமான வேலைப்பாடுகளுடன் கூடியவை. — ‘முல்லார்ட்’ வால்வுகள் பிட்டப் செய்யப்பட்டுள்ளவை.

அழகும் வனப்பும் வாய்ந்தவை.

குறைந்த விலை உள்ளவை.

A. C. மெயின்களிலும் 6 வால்ட் பேட்டரிகளிலும் வேலை செய்யப்படுபவை—‘WINDSOR’

சிக்கனமுடையவர்களுக்குக் குறைந்த விலை மாடல்கள்—‘DOVER’

மீட்டர்கள் 16 to 65—60 to 115—195 to 550.



5 VALVES MODEL 'DOVER' IN WOODEN CABINET
3 WAVE BANDS Rs. 280/-

Stockists & Sole Distributors for
Madras Presidency including Native States :—

**‘ஜயபோன் கம்பெனி’**
**2-15, LUCKMUDOSS ST.**
**Near Sowcarpet**
**G. T. MADRAS**






உயர்தரமான இலைகளைப் பொறுக்கி வெகு ஜாக்கிரதையுடன் அனுபவ ரீதியாகப் பதம் செய்யப்படுவதால் நரஸூஸ் டீ நறுமணமுள்ளதாக இருக்கிறது. நரஸூஸ் காப்பிக்கோ சூரிய வெப்பத்தால் நன்ருக பழுத்த முதல்தரக் கொட்டைகளே பொறுக்கப்படுகின்றன. பிறகு நன்ருக வறுக்கப்பட்டு நீங்கள் விரும்பும் நறுமணமுள்ள இனிய காபிக்கான் தூளாக செய்யப்படுகிறது.

# நரஸூஸ்




# டீ,காபி

எந்தத் திரத்திலும் எவ்வளவு வேண்டுமாஞலும் இந்தியா, பர்மா, சிலோனில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—
**நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி.**
ஹெட் ஆபீஸ்:
சேலம்.

MNK-9. TM

# இவ்வருட - -
# அபிவிருத்தியின்
# புள்ளி விவரங்கள் :

- புதிய பாலிஸிகள் சுமார்
  ரூ. 3,00,00,000
- அமுலிலிருக்கும் பாலிஸிகள்
  ரூ. 18,16,00,000 க்குமேல்
- க்ஷேம நிதி
  ரூ. 3,57,00,000 ,,
- மொத்த சொத்துகள்
  ரூ. 4,05,00,000 ,,
- கொடுபட்ட உரிமைத் தொகை
  ரூ. 2,25,00,000 ,,

**நம்பிக்கையான சேவையினுலே**
**பிரக்யாதி வாய்ந்தது**

# ஹிந்துஸ்தான்
## கோவாப்பரேடிவ் இன்ஷ்யூரன்ஸ்
## சொஸைட்டி லிமிடெட்

ஹெட் ஆபீஸ் :
" ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ் "
6-ஏ, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு, கல்கத்தா

சென்னை பிராஞ்சு :
" ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ் "
107, அரண்மனைக்காரத் தெரு, சென்னை

# GANI & SONS

THE HOME OF
## ROLLS WATCHES

*Known the world over*
*for accurate*
*performance*
*&*
*durability*



Rolled Gold Rs. 55/-
9 ct. Gold Rs. 80/-
18 ct. Gold Rs. 110/-



Rolled Gold Rs. 60/-
9 ct. Gold Rs. 110/-
18 ct. Gold Rs. 155/-



Rolled Gold Rs. 55/-
9 ct. Gold Rs. 80/-
18 ct. Gold Rs. 110/-

எல்லா விசேஷங்களுக்கும் பரிசு வழங்க
ஏற்ற பற்பல விதமான சாமான்கள்

# கனி & சன்ஸ்,

மதராஸ்

ஹெட் ஆபீஸ் :
**55-57,** ரட்டான் பஜார்

பிராஞ்சு :
**190,** மௌண்டு ரோடு

தாற்போல் கொல்லைப் புறத்துக்குப் போகும் வழியாய், விரிந்தது. முற்றத்தை ஒட்டி ஓடும் தாழ்வாரத்தின் பக்கமாய் ஒரு கூடம். கூடத்தில் ஒரேவோர் அறை. வீடே அவ்வளவுதான்.

அறை வாசற்படிக்கு மேல், சுவரில் ஒரு புகைப் படம் மாட்டியிருந்தது.

அவ்வறைதான் சமையலறை என்று, பார்க்கும் பொழுதே தெரிந்தது. அறையின் மூலைகளில் ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கிய பானைகளும, கரியேறிய சுவ



......ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டார்கள்

ருக்குக் கீழே அடுப்பில் சொருகிய வண்ணம் அவிந்து கிடக்கும் கொள்ளிக்கட்டை யொன்றும் காணப்பட்டன. எனவே, அது சமையலறைதான் என்பதில் சந்தேகமென்ன ?

“ ஒருத்தரையும் காணவில்லையே...!” என்றான் கவி.

“ கொல்லைப் புறத்தில் இருப்பார்களோ, என்னவோ ?...”

“ சரி, வா ; போய்ப் பார்ப்போம்...”

கொல்லைப்புறக் கதவு மூடியிருந்தது. கதவின் சந்து வழியாய்க் கொல்லை மரங்களின் பச்சை தெரிந்தது.

கொல்லையில் ஒரு பழங் கிணறு. அதன் இடிந்த கைப்பிடிச் சுவரின் மேல், பாதி உள்ளும் பாதி வெளியுமாய் ஒரு தாம்புக் கயிறு தொங்கியது. தவிர, ஒரு மாட்டுத் தொழுவமும் அதில் ஒரு வைக்கோற் போரும், அதன் பக்கத்தில் ஒரு பசுவும் கன்றும் இருந்தன.

இவையன்றி, ஐந்தாறு தென்னை, நாலைந்து வாழைக்கன்றுகள், ஓர் அவரைப் பந்தல், முற்றி உதிர்ந்த ஒரு தென்னம் பாளை.

ஆனால், அங்கே ஒருவருமில்லை.

கவி அலறத் தொடங்கினான் : “ சரி, இப்போது என்ன செய்வது ? தன்னந்தனியாய் அகப்பட்டுக்கொண்டேனே, இந்த நிர்மானுஷ்யமான காட்டிலே '...”

“ இந்த நல்ல தங்காள் பாட்டுப் பாடாதே... நீ தன்னந்தனிமையாயில்லை... நானும் இங்கே இருக்கிறேன்... இதோ ஒரு மாடு இருக்கிறது... வீடு இருக்கிறது...”

“ மனுஷனைக் காணுமே !...”

“ எங்கேயாவது வெளியே போயிருப்பான்...”

“ என்ன இவ்வளவு அதி காலையிலேயா ? ”

“ பின்னே என்ன ? பட்டணத்தில், முதுகில் வெயிலடிக்கும் வரையில் நீ தூங்குகிற மாதிரி நினைத்துக் கொண்டாயோ ?”

பிறகு, இருவரும் மௌனமாயிருந்தார்கள். கிழக்கு நன்றாய்ச் செவந்து, சூரியனின் முதற் கிரணங்கள் வீசத் தலைப்பட்டன. ஆனால், இன்னமும் ஆள் சந்தடியில்லை.

திடீரென்று கதாசிரியன் தீர்மானத்துடன் எழுந்திருந்தான் :

“ என்ன செய்யப் போகிறாய்?”

“ ஆகாரத்துக்கு ஏதாவது வழி தேடப் போகிறேன். சும்மா இருந்தால், வயிறு கேட்குமா ?”

“ வாஸ்தவம்.. ”

கதாசிரியன் கவிஞனை ஒரு மாதிரியாய்ப் பார்த்தான்.

“ உன்னைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை...” என்றான் ; சாவதானமாய் : “ உன்னைப்போல் எத்தனையோ பேர்வழிகளைப் பார்த்திருக்கிறேன். உன் முகத்தில் சோம்பேறிக் களை கூத்தாடுகிறது. நீ எல்லாவற்றிற்கும் ‘ ஆமாம்’ போட்டுக் கொண்டு சும்மா இருந்துவிட்டு. ஊணுக்கு மாத்திரம் முந்தி வந்துவிடலாம் என்று நினைக்காதே. (கவிஞனின் முகத்தில் அசடு தட்டியது.) அந்த ஜம்பம் என்னிடம் சாயாது, தெரிந்ததா ? இருவரும் சிரமப்பட்டால் தான் பசியாற வழியுண்டு. ஆகையால், நான் உள்ளே போய் அடுப்பு மூட்ட வசதியுண்டா என்று பார்க்கிறேன். அதற்குள் நீ போய் ஒரு பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு வந்து, இந்த மாட்டைக் கறக்க வேண்டும்...”

“ அது உதைக்குமே !...”

“ பட்டுக்கொள்...முன்னால் ஒரு தோண்டி ஜலம் மொண்டு கொள்கிறேன். அப்புறம் நீ தாம்புக் கயிற்றை அணை கயிறாய் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்...”

பசுவின் முகம் சரியா யில்லை. ஓரக்கண்ணால் ஆளை அது நோட்டம் பார்ப்பது போலிருந்தது. கன்றை ஊட்ட விடும்பொழுதெல்லாம் பசு சும்மா இருக்கும் ; கன்றை விரட்டி விட்டு, பின்னங் காலைச் சேர்த்துக் கட்டி, பயந்து பயந்து நெருங்கி, மடியைத் தொட்டவுடனே உதைக்கும்! பின்புறம் கன்றுக்குட்டி ஓடிவந்து முட்டும் ! இதற் கிடையில், காலைக் கட்டி எஞ்சிய தாம்புக் கயிறு இவனைத் தடுக்கிவிட்டது. இந்த நர்த்தன வஸ்தையில் கவிஞன் உழன்று கொண் டிருக்கையில், கதாசிரியன் உள்ளேயிருந்து வந்தான்.

“ அரிசி அகப்பட்டது...பானையில்...புழுங்கலரிசி”

“ ஐயோ ! எனக்குப் பச்சரிசி தானே பழக்கம் !...” என்று ஓலமிட்டான் கவிஞன்.

"தவிர, எதோ மிளகாய், உப்பெல்லாம் இருக்கிறது. ஆனால் எனக்குச் சாதம் ஒன்றுதான் வடிக்கத் தெரியும்...நீ கறக்கும் பாலைக் காய்ச்சிச் சோற்றில் விட்டுக் கொண்டு சாப்பிடவேண்டியதுதான்..."

"தொட்டுக் கொள்ள?...... வெறும் பாலுஞ் சோறு வயிற்றைக் குமட்டுமே!"

"ஒரு மண்ணும் தெரியவில்லை... முக்கியமான விஷயம் தீப்பெட்டி, அதைக் காணோம்...நீ என்ன சிகரெட் பிடிப்பதுண்டா?...... கோபித்துக் கொள்ளாதே...கவிகள், அந்தப் புகையில்தான் தங்கள் கற்பனையை மிதக்கவிட்டு, கவிதையைப் பொங்கவைத்துக் கொள்வது வழக்கம் என்பார்களே ஏன்று கேட்டேன். அப்பொழுது, நெருப்புப் பெட்டி உன்னிடத்தில் நிச்சயமா யிருக்கு மல்லவா?..."

அதென்னவோ அவர்களுடைய நல்லகாலம் இந்தக் கவிக்கும் ஸிகரெட் குடிக்கும் வழக்கமிருந்தது. சிகரெட் தீர்ந்துவிட்டது. நெருப்புப் பெட்டி மாத்திரம் மிஞ்சி இருந்தது.

உள்ளே கதாசிரியன் அடுப்புப் பற்ற வைத்துக்கொண்டிருக்கையில், தடதடவென்று உளறியடித்துக்கொண்டு, கவிஞன் வந்து, கதாசிரியனின் காலடியில் விழுந்து, கால்களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான்.

"அப்பா, நீ எனக்கு வெறுஞ் சாதத்தையே போடு—நான் அதை வில்லுண்டையாய் விழுங்கி வைக்கிறேன். அந்த மாட்டை மாத்திரம் கறக்க வைக்காதே—இதோ பார், அரிசி களைகிறேன்; அடுப்பு விசிறுகிறேன்; இலை போடுகிறேன்; ஜலம் எடுத்து வைக்கிறேன்; எச்சில் திரட்டுகிறேன். அந்த மாட்டை மாத்திரம்..."

கதாசிரியன் ஆரம்பித்தான்: "நீ எடுத்த காரியம் எதுவும் விடியாது—நீ பட்டினத்துக் கவியல்லவா?—நான் இப்பொழுது பட்டினத்தில் வாழ்ந்தாலும், கிராமத்தில்தான் பிறந்து வளர்ந்தேன். என் தாயார் எருமை மாடு கறப்பாள்; என் தகப்பன்..."

"ஐயோ!—உன் கோனார் வம்சாவளியெல்லாம் வேண்டாமே! —இது பசுமாடப்பா, பசுமாடு!— வசனம் கேட்டதில்லையா—'பசுவையும் பார்ப்பானையும்'..."

கதாசிரியன் பல்லைக் கடித்துக் கொண்டு: "ஆம், நான் பார்ப்பான்தான்—உன் குறும்பு நாசமாய்ப் போக—கோனாரில்லை. ஆனால், பட்டிக்காட்டில் பார்ப்பானுக்கும் பால் கறக்கத் தெரியும். எனக்குப் பசுக் கறக்கத் தெரியும் —இதோ பார். பத்து நிமிஷத்தில் திரும்பி வருகிறேன். ஹே மஹா கவியே!..." என்று கொல்லைப் புறம் சென்றான்.

கவிக்குக் காரியம் எதுவுமில்லை. சுவரில் அங்குமிங்கும் சிதறிய இருண்ட மாடங்களிலும், புதைந்த சட்டிகளிலும் கையை விட்டுத் தோண்டிய வண்ணம், தான் இவ்வேளையில் தன் வீட்டிலிருந்தால். தனக்கு ஏற்பட்டிருந்திருக்கும் சௌகரியங்களை எண்ணி எண்ணி நைந்துருகினான்.

காலை ஏழு மணிக்குக் கண் விழித்தவுடன், பல் விளக்குமுன், படுக்கையை விட்டு எழுந்திருக்குமுன்னே, ஏதோ சொல்பமாய் ஒரு 'கப்' டீ. பிறகு பல் விளக்கிக்கொண்டு சுடச்சுட இட்டலி, காப்பி—(ஓர் இட்டலிக்குச் சட்னி, ஓர் இட்டலிக்குக் கத்தரிக்காய்க் கொஸ்து)—அப்புறம் 8, 8-30 மணிக்கு உடம்பு தேறுவதற்காக ஒரு கப் ஓவல்டின்—.

இச்சமயம் திடீரென்று கவியின் சிந்தனைகள் சிதறின. தலை மட்டத்துக்குச் சற்று உயரமாய் இருந்த ஒரு மாடத்தில் நுழைந்திருந்த அவன் கையில் மிருதுவாய் ஏதோ சிக்குண்டது. சற்றுச் சிரமப்பட்டுக் காலை எழுப்பி அதை முன்னுக்கு இழுத்தான். அவ்வளவு தான்...

கவி போட்ட வீறிடலில், கதாசிரியன் அலறிப் புடைத்துக் கொண்டு, கொல்லைப் புறத்திலிருந்து ஓடிவந்தான்.

கவியின் முகம் சுண்ணாம்பாய் வெளுத்துக் கிடந்தது. வாயடைத்து விட்டது. சுவரைச் சுட்டிச் சுட்டிக் காண்பித்தான் கவி.

மாடத்திலிருந்து ஒரு புலித்தலை எட்டிப் பார்த்தது. கதாசிரியனே திக்பிரமை பிடித்துச் சற்று அயர்ந்து விட்டான். அவ்வளவு தத்ரூபம்!

'கீச் கீச்' என்று கத்திக் கொண்டு ஓர் எலி பின்னாலிருந்து அதை உருட்டி விட்டபின்தான், அது பஞ்சும் கதம்பை நாரும் அடைத்த உயிரற்ற தலை என்று அவர்களின் உணர்வில் பதிந்தது.

அதன் நெற்றியில் கண்களின் நடு மையத்தில் ஓர் அம்பு ஊடுருவிப் பாய்ந்து நெட்டுக் குத்தாய் நின்றது.

கவி "நாம்—ஷாப்பிட்ட பிழகு — இழைப்பட்றி — அப்புழம் — பேஷி — கொழ்ழலாம்" என்று தைரியமாய்க் குழறினான்.

அவ்வளவு நொள்ளைப் பேச்சுப் பேசிய போதிலும், கவி புழுங்கலரிசிச் சோற்றைச் சும்மா விடவில்லை. பாயும் ஜமக்காளமும் போலச் சாதத்தைச் சுருட்டி, கவளமாய் உருட்டி, வாயில் அவன் அப்பிக்கொண்ட ஒரு விறுவிறுப்பைக் கண்டு, "ஏது, ஆக்கி வைத்தால் நன்றாய் அழிப்பாய் போலிருக்கிறதே!—" என்று கதாசிரியன் அதிசயித்தான்.

"என்னப்பா, பிரயோசனமில்லை. இதற்குத் தொட்டுக் கொள்ள ஏதாவது இருந்தால், ஏதோ இரண்டு பருக்கை உள்ளே இறங்கும் — வாயைக் — குமட்டுகிறது—நான் ஏதாவது தேடித் தான் பார்க்கிறேன்."

இருட்டில் ஒவ்வொரு பானையாய்க் கையை விட்டுக்கொண்டு வருகையில், கவியின் கையில் மறுபடியும் ஏதோ சிக்குண்டது— ஆனால், இச்சமயம் தட்டுப்பட்டது ஒரு துணி. அதை வெளிச்சத்தில் கொண்டு வந்தான்.

"ஆ புடவை!—" கவியின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! காணாததைக் கண்டதுபோல் புடவையைக் கன்னத்தில் ஒத்திக் கொண்டான்: "இதைப் பற்றியும் அப்புறம் பேசிக் கொள்ளலாம்!—"

ஆனால், கதாசிரியன் இதைக் கவனிக்கவில்லை. பூஞ்சல் காளான் பூத்த ஒரு கிச்சிலிக்காய்ச் சுருள் அவனுக்கு அகப்பட்டு விட்டது. எப்படியிருந்தாலென்ன; ஒன்றுமில்லாததற்கு அது போதாதா?

உச்சியேறிய சூரியன் சாய்ந்து, இப்பொழுது மேல் திசையில் விழ

வும் ஆரம்பித்து விட்டான். வெப்பம் தணிந்து, ஓடும் தண்ணீரில் ஸ்நானம் செய்துவிட்டுக் கரையேறும்போது உண்டாகும் உற்சாகமான குளுமை தேங்கி நின்றது.

கதைகாரனும் கவிஞனும் வாசல் புறம் வந்து பின்னால் கை கட்டிய வண்ணம், இந்தக் குளிர்ந்த வெப்பத்தை அனுபவித்துக் கொண்டு நின்றார்கள். தின்று விட்டு மத்தியான வேளை யெல்லாம் நன்றாய்த் தூங்கியபின், இந்த மஞ்சள் வெயிலில் வந்து நின்றதும், உடம்பே ஏதோ மதோன்மத்தம் பிடித்தது.

"மாலை வேளையே இவ்விடத்தில் நன்றாயிருக்கும் போலிருக்கிறது—" என்றான் கதாசிரியன்.

ஆம், துருவிக் கொட்டிக் குவிந்த தேங்காய்ச் சிதளில் குங்குமப்பூச் சாற்றைப் பிழிந்தாற்போல, வானத்தில் அங்கங்கே மேகங்கள் திட்டுத் திட்டாய், சிவப்புப் பூத்து நின்றன. மேல் திசையில் செம்மரத் தூலங்கள் பாய்ச்சியதுபோல் கிரணங்கள் அளாவின. வீட்டுக்குக் கூப்பிடு தூரத்தில் ஓடும் அருவி நீருடன், ரோஜாவின் சிவப்பும் ஓடியது. மாலையின் மந்தஹாஸத்துடன் செடிகள் லஜ்ஜையாய் ஆடின... ......எங்கும் நிர்ச்சலமயம்.

"நீ பெரிய கதாசிரியனாயிற்றே; உனக்கு என்ன தோன்றுகிறது, இங்கே நாம் கண்ட புகைப்படத்தையும் புலித்தலையையும் புடவையையும் பற்றி?"

ஏதோ ஆவேசம் வந்தவன்போல் கதாசிரியன், பரவசமடைந்த குரலில் சொல்லலுற்றான்: "ஒரு நாள் ஒருவன் இங்கே வந்தான், ஒருத்தியுடனும் அவர்களுடைய ஒரே குழந்தையுடனும். எதற்காக, இங்கே, எவ்விடமிருந்து வந்தான் என்று நமக்குத் தெரியாது; தெரியவும் வேண்டியதில்லை. ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். அவனும் அவளும் எந்தச் சந்தடியினின்று, எந்த நிம்மதியைத் தேடி வந்தார்களோ, அதை இங்கே கண்டு விட்டார்கள்.

"அவர்கள் வந்த புதிதில், இவ்விடம் வெறும் பாழும் குடிசையாயிருந்தது. பிறகு நாளடைவில் குடியிருக்கும் வீடாய் ஒரு மாதிரியாய் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். கட்டடத்தில் கலந்து வரும் பழமையையும் புதுமையையும் பார்த்தால், அப்படித் தோன்றுகிறது.

"அவர்களுடைய தொழில் என்னவோ! ஒரு வேளை ஒன்றுமில்லையோ என்னவோ! அவனுக்குப் படிப்பிலும் நம்பிக்கையில்லையென்று தோன்றுகிறது. இங்கே ஒன்றும் புத்தகத்தைக் காணோம். ஆம், படித்துப் பயனென்ன, பார்த்து மகிழ இங்கே எல்லாம் இருக்கும்போது? இந்த நிம்மதியான இடத்தில் யோக நித்திரை செய்வதைவிட, வேறு என்ன வேலை? விடியும் வேளையில் மலைச் சாரல்களிடையினின்று ஆதித்தன் புறப்படும் அழகையும், நடுப்பகலில் ஆகாய வீதியில் அவன் செல்லும் வேகத்தையும், மாலையில் அருவியின் கரையில் மனையாளுடனும் மகவுடனும் நின்றுகொண்டு மேல் திசையில் அவன் மறையும் அழகையும் பார்த்துக் கொண்டே, நாள் முழுவதும் கழிக்கலாமே! இடையில் போகாத பொழுதுக்கு வயலில் பயிர் வேலை இருக்கிறது. புழக்கடையில் காய்கறி போடலாம் — எப்படிப் பொழுது போக்குவது என்னும் கஷ்டத்தை இம்மூவரும் அனுபவித்ததாய்த் தெரியவில்லை.

"நாள்கள், வருஷங்கள் கழிந்தன.

"பிறகு, ஒரு நாள் அந்தப் புருஷன், கையில் வில்லும் அம்பும் ஏந்திக்கொண்டே (இவ்விடத்தில் துப்பாக்கியும் தோட்டாவும், ஏது !)/ வெளியே புறப்பட்டான். 'எங்கே? எதற்காக?' என்று என்னைக் கேட்காதே. பல காரணங்கள் இருக்கலாம்; இந்தக் குன்றின் சாரலுக்கப்புறம் என்ன பிரதேசம் என்று காண இருக்கலாம்; அல்லது, வானம் பூமியைத் தொடும் எல்லையை எட்ட இருக்கலாம். எப்படியும் புறப்பட்டாகி விட்டது. ஆனால், புறப்பட்டவன், அத்துடன், அவ்வளவுதான். நடுப்பகலாயிற்று; மாலையாயிற்று; இரவாயிற்று; நடுநிசியுமாயிற்று. போன ஆள் திரும்பவேயில்லை.

"மறு நாள் வெள்ளி வேளையில் தாயும் மகனும் தேடப் புறப்பட்டார்கள். பார்வைக்குக் கிட்ட இருக்கும் மலைத்தொடர், நெருங்க நெருங்க எட்டிக்கொண்டே போயிற்று. உச்சி வேளையில், முள்ளும் கல்லும் பட்டு இரத்தம் வழியும் கால்களுடன், மலைத் தொடரைக் கடந்தார்கள். கடந்ததும், அவனைக் கண்டார்கள்.

"ஆனால், இனி அவனேது? அது தானே! கூடு விட்டு ஆவிபோன பின் மனிதன் ஜடவஸ்துத் தானே. உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் வரை, அவர் என்கிறார்கள்; பேரைச் சொல்லுகிறார்கள்; பெரியவர் என்கிறார்கள். உயிர் நீங்கியதுதான் தாமதம். 'பிணத்தைத் தூக்கு' என்கிறார்கள். 'பெரியவரைத் தூக்கு...' என்றா சொல்லுகிறார்கள்?...

"ஆகையால், அது விரிந்த கைகளுடன் குப்புற விழுந்து கிடந்தது. மூக்கிலிருந்து இரண்டு நூல் இரத்தம் வழிந்து காய்ந்திருந்தது. மூக்குத்தண்டின் மேல், ஒரு சாரி எறும்புகள் மொய்த்துக் கொண்டிருந்தன. அவன்மேல், தோளைக் கவ்விய வண்ணம், நெருங்கி அணைத்த மாதிரி, ஒரு புலி பதுங்கி இறந்திருந்தது. அதன் வயிற்றில், அம்பு பாய்ந்து முதுகின் வழி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

"புலி அவன் பாராத திக்கிலிருந்து பின்புறம் பாய்ந்திருக்க வேண்டும். பாய்ந்ததும், அவன் விழுகையில் இசைகேடாய் அம்பு திரும்பி அதன் வயிற்றில் பாய்ந்திருக்கிறது. இதுதான் விஷயம்.

"பிறகு, அவன் மனைவி, தன்னந்தனியாய் எப்படி இந்தத் துக்கத்தைச் சகித்தாளோ! எப்படிப் பிணத்தை அடக்கம் செய்தளோ! தன்னிடத்துக்கு எப்படித் திரும்பி வந்து சேர்ந்தாளோ! ஆனால், இது மாத்திரம் தெரிகிறது. அவர்கள் வேண்டாமென்று துப்பியெறிந்த எச்சில் சமூகத்தினிடம் மட்டில் மறுபடியும் போய்ச் சேரவில்லை. அந்தப் புலியின் தலையை உடன் கொண்டு வந்து விட்டாள். உள் விவகாரங்களைக் குடைந்து பஞ்சும் கத்தும் பை நாரும் அடைத்து, அவள் கணவனின் படத்துக்கு எதிர்ப் புரையில் வைத்துவிட்டாள். தினம் படத்துக்குப் பூஜை எப்படி நடக்கும் தெரியுமா? அவளுடைய மகன், தகப்பனின் படத்துக்கு முன் வில்லும் அம்பும் ஏந்தி, மாடத்துக்கு எதிர் நின்று குறி பார்த்து, புலித்தலையில் இரு கண்களுக்கும் மத்தியில் அம்பு நுழைய, எய்யவேண்டும். பழிக்

குப் பழி ! நியாயத்துக்குக் கட்டும் கப்பம்! ஆனாலும், இதெல்லாம் முன் தயாரிப்புத்தான்; பெருங் காரியத்துக்குத் தயாராக முன்னால் செய்து கொண்ட ஓர் ஒத்திகைதான்; அப்பனைக் கொன்ற புலியின் வம்சத்தை வேருடன் அழிப்பதற்காக, முன் செய்து கொண்ட ஏற்பாடுதான்...''

இவ்விடத்தில் கதாசிரியன், சற்று மூச்சுவாங்கிக் கொண்டு மறுபடியும் சொல்லலுற்றான்:—

“ஆம், இந்தப் பழிக்குப் பழி வாங்கும் வேலை—வேருடன் களையும் காரியம் என்பதெல்லாம் புதுப் பழக்கமல்ல. இதற்கு வேண்டிய அத்தாட்சிகள், நம்முடைய இதிகாச புராணங்களில் முதற் கொண்டு இருக்கின்றன. பரசுராமன் என்ன, கார்த்த வீரியார்ச்சுனன் என்ன, ராம ராவண யுத்தம் என்ன, கம்ஸன் வசுதேவ பரம்பரையை அறவே அழிக்க முயன்றது என்ன, அதே கிருஷ்ண பரம்பரையின் யாதவ குல நாசம் என்ன, பாரத யுத்தம் என்ன, நம் தேச சரித்திரத்திலேயே சாணக்கிய சாஹஸம் என்ன, அலாவுதீன் கில்ஜி சரிதம் என்ன—இப்படியாகப் பல உதாரணங்கள் உண்டு. நம் வாழ்க்கையையே பார்க்கப் போனாலும், ஒன்றுக் கொன்று பழிக்குப் பழியாய்த்தான் இருக்கிறது... பார், இந்தப் பாம்பு என்றுதான் இருக்க வேண்டியதில்லை. எந்தப் பாம்பைக் கண்டாலும் கீரி துரத்துகிறது. எலியைக் கண்டால் பூ...''

“சரிதானப்பா... உன் கதையைச் சொல்லு. உலகத்தின் கதையைச் சொல்லிவிட்டு, உன் கதை யென்று ஏமாற்றி விடாதே...'' என்று கவி இடைமறித்தான்.

“என் கதை இனி அதிகமில்லை. ஒரு நாள், நேற்றுக்காலை, பையன், கையில் வில்லும் அம்பும் ஏந்தி இதுவரை வீட்டில் பயின்ற பயிற்சியை, அம்பலத்தில் ஆடச்சென்றான். காலை ஆயிற்று, பகலாயிற்று, மாலை ஆயிற்று; புலி வம்சத்தைத் தேடச் சென்ற பையன் இன்னும் மீளவில்லை. தாயின் உள்ளத் துடிப்பைச் சகிக்க முடியவில்லை. அடுப்பில் சொருகிய கொள்ளிக் கட்டையை அவிக்கவும் மறந்து, தனயனைத் தேடிச் சென்றிருக்கிறாள்— இன்னமும் வந்து கொண்டிருக்கிறாள்.''

ஆம், இப்பொழுது நல்ல இருட்டுத்தான். மாலை வேளையில், மரங்களும் செடிகளும், திடீரென்று அரும்பிய அழகு போய், இப்பொழுது இரவிருளில், உருவற்ற மொந்தாகாரமாய், அங்கங்கே ஒரு விதமான பயங்கரத்துடன் திமிறி நின்றன. புட்களின் அரவம் அடங்கியது. அப்பொழுது சங்கீதமாய் ஒலித்த செடி கொடிகளின் உராய்வுகள், பாம்பு, பூச்சிகளின் அர்த்தமுள்ள சலசலப்பாய் மாறியது......

இவ்விந்திர ஜாலத்தின் திகைப்பில், இருவரும் சற்று நேரம் மௌனமாயிருந்தார்கள். பிறகு...

“உன் கதை அவ்வளவு ஸ்வாரஸ்யமில்லை—'' என்றான் கவி: “அதில், காதல், மோஹம் முதலிய சிருங்கார ரஸங்களில்லை. காதல் இல்லாத கதை என்ன கதை!—புலியாம், புலிவேட்டையாம்! பெண்ணும், பிள்ளையாம்!— சுத்த ‘டார்ஸான்' வேலையா யல்லவா இருக்கிறது! — போனளாம்—வரவில்லையாம்—பூ!''

கதாசிரியன் திடீரென்று கையை உயர்த்தி அமர்த்தினன்.

“இல்லை, வருகிறாப் போலிருக்கிறது—கவனி!''

ஆம், யாரோ வீட்டை நெருங்குகிறார்கள். காலடியில், சிறு மணியாம்பருக்கைக் கற்கள் ‘சரக், சரக்'கென்று நொறுங்கும் சப்தம்.

கதவு ‘படீ'ரென்று திறந்தது.

“யாரது?''

“நாங்கள்தான் — வழிப்போக்கர்கள்—வழி தவறிவிட்டது''

“ஓ, சரிதானுங்க — விளக்கை ஏத்துறேன் — குந்துங்கண்ணா — என் எழுந்திருக்கணும்!—எப்போ வந்திங்க?''

கேள்விகளைக் கேட்டுக் கொண்டே, அவன் உள்ளே போனதும்—கவியும் கதைகாரனும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். யாரோ காட்டாள் போலிருக்கிறது—பேச்சில் ஒன்றும் ‘நாஸூக்கை'க் காணோம்!

ஒரு சிறு தகர விளக்கை எங்கேயிருந்தோ அவன் ஏற்றிக்கொண்டு வந்து வைத்தான். அவனது முதுகில் ஒரு சிறு மூட்டை இன்னும் தொங்கியது.

“பார்த்தால் எசமான்மார் மாதிரி இருக்குதுங்களே — சாப்பாடு ஏதாவது ஆச்சுங்களா— அட பாவமே!—தனியாய் வந்து அகப்பட்டுக் கொண்டீங்களா?— பரவா இல்லீங்க. காத்தாலே எழுந்திருச்சுப் போவலாம்— ஊர்லே யிருந்து—கீரைத்தண்டும் முள்ளங்கியும் வாங்கி வந்திருக்கிறேங்க—இதோ சடுதியிலே சமையல் செய்துட றேனுங்க—மாமியார் வீட்டுக்குப் போயிருந்தேனுங்க — பெண்ஜாதி பிள்ளைத்தாச்சி. நேத்துக்காலை, அவளையும் மவனையும்—ஆமாங்க, பத்துப் பன்னிரண்டு வயசிலே ஒரு மவன் இருக்காங்க — அவளையும் மகனையும் கொண்டுபோய் விட்டூட்டு, இப்பத்தான் வாரேனுங்க''

சரிதான், சரியான ‘ஓட்டை' வாய்தான்!

“நீங்க எங்கே போவணுங்க?''

“வெட்டிவாக்கம்—'' என்று இருவரும் ஒரே மூச்சில் சொல்லிவிட்டு, ஆச்சரியத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

“அட ராமா! வெட்டிவாக்கம் இதோ இருக்குதுங்களே — மலையைத் தாண்டினா வெட்டிவாக்கம் —காலையிலே காமிக்கிறேனுங்க —அங்கேதான் நம்ப எசமான் இருக்காரு—நீங்க இந்தப் போட்டோவைப் பார்க்கல்லே, அது அவர் தானுங்க.''

“ஆமாம், யார் அவர்?—''

“அவர்தான் என் எசமானுங்க —பெரிய வைத்தியருங்க—ஐயாக்கண்ணுப் பண்டிதரு என்னு பேருங்க—''

“யார்? ஐயாக்கண்ணுப் பண்டிதரா! அவரைத்தான் நான் பார்க்க வேண்டும்'' என்றான் கதாசரியன்.

“இதென்ன! நானும் அவரைத்தான் பார்க்க வந்தேன்—'' என்றான் கவி.

“சரிதானுங்க, நாளைக் காலேலே நானே கொண்டு போய் விடுறேன்—இந்தப் பக்கத்திலே—அவருக்கு நல்ல பேருங்க—இப்போ

புதிசா ஒரு மூலிகை ஒண்ணு அகப்பட்டிருக்குது அவருக்கு—ரொம்ப ரகசியமா அதை ஏதோ புடம் வெச்சிருக்காருங்க—இங்கேதான், இந்த வீட்டுப் புளக்கடையிலே—அதுக்குக் காவலுங்க நானு--புளக்கடைக்குப் பின்னாலே—அது பயிராவுதுங்க—அவுரு ஒரு மாதிரி மனுசன்—அவுரு புதுசாக் கண்டுபிடிச்சதாலே, மற்றவங்க கண்ணுக்குப் படக்கூடாதாம்—பட்டா அவுங்க அந்தப் பதங் கண்டு மருந்து செய்திட்டால், அவுருக்கு மகிமை போயிடுதல்ல? என்ன யோசனை பண்ணுறீங்க—புரியுதில்லே?—"

"நன்றாய்ப் புரிகிறது—நீ போய்ச் சாமானை இறக்கு—தோளிலேயே வைத்துக் கொண்டிருக்கிறாயே!—"

**அ**வன் உள்ளே சென்றதும், இருவரும் ஒருவரை யொருவர் ஒரு கண நேரம் விறைத்து நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

"நீயேன் இந்த வைத்தியரைப் பார்க்க வேண்டும்?—"

"நீ மாத்திரம்?—"

"நான் அவருடைய விளம்பரத்தைக் கண்டேன், பத்திரிகையில். அவருடைய புது மருந்துக்கு நல்ல விளம்பரம் செய்யக் கூடிய ஓர் ஆள் வேண்டுமாம்—நாம் ஏதோ கதை யெழுதுகிறோமே; நம்முடைய எழுத்து வன்மை, விளம்பரத்துக்கு உபயோகப் படாதா, அதனால் நமக்கும் கொஞ்சம் பணம் வாராதா என்ற எண்ணம் தான். அவர் விலாசத்துக்குக் கடிதம் எழுதினேன்; என்னுடைய கதைத் தொகுதியையும் அனுப்பினேன். எழுத்தில் எனக்கு இருக்கும் அனுபவத்தைப்பற்றி அவருக்கு அத்தாட்சி வேண்டாமா, அதற்காகவே கதைத் தொகுதியை அனுப்பினேன். நேரில் வந்து காணும்படி பதில் வந்தது—அதனால்தான் கிளம்பி வந்தேன்—"

"அதே சமாசாரம்தான் நம்முடையதும்—நீ படித்த பத்திரிகையேதான் நானும் படித்தது. உனக்குத் தோன்றிய எண்ணம் தான் எனக்கும் உதித்தது—வெறுமையே வளைத்து வளைத்து எழுதினால் மாத்திரம் போதுமா?—சாற்றுக் கவி, ஒரு சின்னப் பாயிரம், ஒரு சிறிய பாட்டுப் புத்தகம்—மூலிகைகளின் சிலாக்கியத்தைப் பற்றி—நல்ல, புது ஹிந்தி 'டியூன்களில்' அமைத்துவிடலாம். இந்த என் யோசனையை அவருக்குத் தெரியப்படுத்தியதும்—என்னையும் வரும்படி எழுதினார்—பார் இதோ கடிதம். மருந்துகள் விற்க, பாட்டைப் போல் வேறே நல்ல மந்திரம் கிடையாது—இதை மாத்திரம் மனதில் முடிபோட்டுக் கொள்."

"அட வயிற்றுப் பிழைப்பின் கொடுமையே!" என்று கதாசிரியன் தலையிலடித்துக் கொண்டான்.

கொஞ்ச நேரம் கழித்து "ஆ! ஞாபகம் வந்தது—உள்ளே வா; அந்த ஆளை ஒரு கேள்வி கேட்க வேண்டும்—" என்று கவி, கதாசிரியனை உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.

## இதுதான் காமன்ஸ் சபை

பிரிட்டிஷ் பார்லிமெண்டின் இரு சபைகளில் முக்கியமான காமன்ஸ் சபை எப்படிப்பட்டது என்று, ஹெரால்டு நிக்கால்ஸன் என்ற ஆசிரியர், லண்டன் 'ஸ்பெக்டேட்டர்' பத்திரிகையில் பின்வருமாறு வர்ணிக்கிறார்: "அநேக சமயங்களில் இந்தச் சபையானது ஒரு மீன்காட்சிச்சாலையைப்போல் இருக்கிறது. மீன்காட்சிச்சாலை மீன் தான் மேலே மிதந்து, வாயை வாயைப் பிளந்து கொப்பளிக்கும்; சண்டைமட்டில் போடாது."

* *

மனம் நீக்ரோவின் தலையிலுள்ள சுருட்டை மயிருக்குச் சமானம். அதை இழுத்துப் பிடித்திருக்கும் வரையில் நீளமாயிருக்கும். ஆனால் பிடிப்பை விட்டதும், பழையபடி அது சுருண்டுவிடுகிறது. அதுபோல, மனம் பலவந்தமாக அடக்கி நிறுத்தப்பட்டிருக்கும்வரையில் நன்றாய் வேலை செய்து நற்பயன் விளைவிக்கும். ஆனால் சற்று ஜாக்கிரதைக் குறைவு ஏற்படுமானால், உடனே அது ஸன்மார்க்கத்தைவிட்டு விலகிவிடும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

* *

**அதிகாரி:** 'இங்கே புகை குடிக்காதே' என்று அதோ எழுதியிருக்கிறதே, அதை நீர் பார்க்கவில்லையா?

**பிரயாணி:** என்னென்னவோ தான் எழுதிவிடுகிறார்கள். அது எதையுமே நான் லட்சியம் செய்வதில்லை. 'காலகோடி பனியன்களையே அணியுங்கள்' என்று அதோ எழுதியிருக்கிறானே? உடனே, அதை வாங்க நான் ஓட முடியுமா?

"ஏனப்பா, இந்தப் புலித்தலையில், அம்பு சொருகி நிற்பதேன்?"

அவன் கொஞ்சநாழி மிரளமிரள விழித்துவிட்டு, "ஓ! அதுவா? அது நம்ப பையன் வேலைங்க—(சலுகைக் குரலில்) சுத்தக் கேப்புமாரிங்க—இந்தப் பக்கம், காடை, கவுதாரி பறவைகளெல்லாம் ஸாஸ்தி—அதுகளை அடிச்சுச் சந்தைக்குக் கொண்டுபோனா, நல்ல துட்டு—அதுவும் கொஞ்ச தூரம் தாண்டி, ரயிலேறிப்போனா துரைமாருங்க வாங்கினா, ஒரு காடைக்கு, ரூபா ரெண்டு, மூணு கூட அகப்படுங்க. அது சுட்றதுக்கு, இங்கே, இவன் குறி பழகறானும். அந்தப் புலித்தலை, சுவரிலே, அழகா மாட்றதுக்கு வைத்தியர் வாங்கினாரு; அதை, அவர் இல்லாத சமயத்திலே, பையன், இந்தக் கோலம் பண்றானுங்க!"

**சா**ப்பிட உட்காரச் சற்று நேரத்துக்கு முன்னால், கவி ஒரு கேள்வி கேட்டான், கதாசிரியனை: "கோழி முட்டை பார்த்திருக்கிறாயா?—"

"இதென்ன கேள்வி, சாப்பிடும் வேளையில்?—"

"எவ்வளவு அழகாயிருக்கிறது! வழவழ வென்றிருக்கிறது! வட்டமாயிருக்கிறது! வடிவா யிருக்கிறது!—ஆனால் அதை யெடுத்து, தூணிலோ, சுவரிலோ அறைந்தால்..."

"ஐயோ ஆபாசமே!—" என்று அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டான் கதாசிரியன்.

"அதே லட்சணம் தான், புலித்தலையை வைத்து நீ கட்டிய கதையும். அதற்கு இந்த ஆள் கொடுத்த வியாக்கியானத்துக்கும், நீ கட்டிய கற்பனைக்கும்—"

மௌனம் குடி புகுந்தது அவ்விடத்தில். திடீரென்று வான் தகட்டில் துளை விழுந்ததுபோல், நட்சத்திரங்கள் பிரகாசித்தன. அருவியில், சிற்றலைகள் மெள்ளக் கரையில் துவளும் சல சலப்பு, காதில் வந்து மோதியது.

அத்துடன், அடிவயிற்றில் பசியைக் கிளப்பும் வேகத்துடன், உள்ளிருந்து, முள்ளங்கிக் குழம்பின் வாசனை 'கம்'மென்று காற்றில் மிதந்து வந்து கலந்தது.



# சங்கராந்தி



டி. கே. சிதம்பரநாத முதலியார்

சங்கராந்தியை ஏற்படுத்தியவன் பெரிய புண்ணியவான். சங்கராந்தி என்கிற விசேஷத்தை ஏற்படுத்தாவிட்டால் நம்முடையவீடும் தெருவும் எப்படியிருக்கும் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். மோட்டார் வண்டிக்கு ஏதோ ஓவர்ஹால் செய்கிறார்கள். வீட்டுக்கும் ஊருக்கும் நாட்டுக்குமே ஓவர்ஹால் செய்கிறது சங்கராந்தி.

சங்கராந்திக்கு ஒரு மாசம் இருக்கும்போதே வெள்ளை அடிக்கும் ஆசாமிகள் தெருவில் வந்து உலாவுகிறார்கள். சுண்ணாம்புச் சட்டி, மட்டை, ஒட்டடைக் கொம்பு முதலான எடுபிடிகளையும் பார்க்கலாம். மாடிக்குமாடி சாரங் கட்டிக்கொண்டிருப்பார்கள். எல்லாம் ஒரே அவசரம். ஒரே பரபரப்பு.

வீட்டுக்குள் புகுந்தாலோ, ஆடவர் பெண்டிர் பிள்ளைகளுமே அறை அறையாய்க் காலி செய்வதற்குத் தட்டு முட்டுகளை—இருப்புச் சட்டி முதல் இங்கிலீஷ் அகராதி வரை—அங்கொரு பக்கம் குவித்துக் கொண்டும் இங்கொரு பக்கம் சிதறிக் கொண்டும் இருப்பார்கள். மூதாதையர்கள் உடுத்திய பீதாம்பரங்கள், போர்த்த சால்வைகள், லாங்-கோட்டுகள் எல்லாம் அலமாரிகளிலிருந்தும், மரப் பெட்டியின் அடியிலிருந்தும் வெளியே வந்து கொஞ்சம் சூரிய வெளிச்சத்தைக் காணும். இருட்டறைக்குள் அடைபட்டிருந்த வெண்கலப் பாத்திரங்கள், இருப்புப் பாத்திரங்களோ என்று சொல்லும் படி களிம்பேறிக் கிடக்கும். அவைகளும் உருப்பெற்று விளங்குவதற்காக உமியோடு உமியாய் உமிக் குவியலில் கிடக்கும். இதெல்லாம் போக, முந்நூற்று அறுபத்தைந்து நாள் புகையடை ஏறிய மண் சட்டிகளும், மண் பானைகளும் தெருக்கோடியில் விழுந்து உடைகிற சத்தமோ சங்கராந்தியின் அதிதேவதைக்கு வரவேற்பு உபசாரம்.

இத்தனை களேபரங்களுக்குள்ளும் ஒரு உற்சாகம். பாத்திரங்களும் பட்டும் பீதாம்பரங்களும், அவைகளுக்கு ஏற்பட்ட இடங்களில் போய் சௌகரியமாய் உட்கார்ந்து கொள்ளும். ஒழுங்கும் விளக்கமும் எங்கிருந்தோ வந்து குடிபுகுந்த மாதிரி இருக்கும்.

இன்று காலையில் பல நண்பர்களை அவர்களுடைய வீட்டுக்குப் போய்ப் பார்த்திருப்பீர்கள். வீடுகள் எல்லாம் ஒரே வெள்ளை, அல்லது அழகான டிஸ்டெம்பர். தெருவைப் பார்த்தால் தலை சீவிப் பொட்டணிந்து வயிரக் கடுக்கன்களையும் மோதிரங்களையும் நன்றாய்த் துடைத்து, ஒரு புருஷன் நிற்கும் நிலையில் இருக்கும்.

வீட்டு முற்றங்களில் புதிதாக அடுப்புகள் கட்டி, பொங்கல்ப் பானைகளை ஏற்றி இருக்கிறதும், பக்கத்தில் நிறைவிளக்கு நிறை நாழி நிற்பதும், மஞ்சள்த் தோகையும் கரும்புத் தோகையும் கிடக்கிற அழகும், பெண்களும் குழந்தைகளும் புதிய உடை உடுத்திக் கொண்டு பால் பொங்குகிறதா என்று எட்டிப் பார்க்கிற ஆத்திரமும், ஒப்பற்ற காட்சிதான்.

இந்தக் காட்சியும் கோலாகலமும் எப்படி உற்பத்தியாயின என்று கொஞ்சம் பார்க்கலாம்.

சூரியன், ஆறு மாசம் வடகோடியிலிருந்துதென்கோடிக்கும், அடுத்த ஆறு மாசம் தென் கோடியிலிருந்து வட கோடிக்கும், பிரயாணம் செய்கிறான். இந்த உண்மையை நம்மவர் பல்லாயிர வருஷங்களுக்கு முன்னே கண்டு கணக்கிட்டு வைத்தார்கள். ஆயிரக் கணக்கான வருஷங்கள் கடந்ததனால் கணக்கில் ஒவ்வொரு வருஷத்திலும் கொஞ்சம் மிச்சம் விழுந்து விட்டது. இது காரணமாகத் தெற்குக் கோடியிலிருந்து சூரியன் வடக்கு முகமாகத் திரும்புகிற நாள் தற்சமயம் மார்கழி மாசம் ஒன்பதாம் தேதியாய் இருக்கிறது. மார்கழி மாசம் ஒன்பதாம் தேதியன்று கொண்டாட வேண்டிய சங்கராந்திக் கொண்டாட்டத்தை, தை மாசம் முதல் தேதியன்று கொண்டாடுகிறோம். காரணம் மேலே சொன்ன மிச்சங்களுக்கு வகைசெய்யாமல் கணித்து வந்ததுதான். இந்தக் கணக்கை, சூரியனும் பூமியும் தங்களுக்குள் எப்படியாவது தீர்த்துக் கொள்ளட்டும். நமக்குக் கவலை யில்லை.

எப்படியோ நமக்கு ஒரு கொண்டாட்டம் கிடைத்து விட்டது. அதுவும் நல்ல முகூர்த்தத்தில் கிடைத்துவிட்டது. அறுவடையாகிக் களஞ்சியத்திலும் வீட்டிலுமே நெல் நிறைந்திருக்கிற நேரம். உப்பு, புளி என்கிற பதார்த்தங்களைத்தவிர்த்து, மற்ற உணவுக்கு வேண்டிய, காய்கறி கிழங்குகள் ஏராளம். சுண்டைக்காய் முதல் பூசனிக்காய் வரையும் சந்தையில் மலை மலையாய்க் குவிந்து கிடக்கின்றன. கிழங்கு என்றாலோ கொட்டிக் கிழங்கு முதல் மலையாளத்துச் சேனை வரையும் வந்து குவிவதைப் பார்த்

(72-ஆம் பக்கம் பார்க்கவும்)



நம் உள்ளத்தையும் இதயத்தையும் ஒட்டடை அடித்து...

# முல்லையும் சோகமும்

மு. அருணாசலம்

நமது நாட்டிலே முல்லைக்கு ஒரு தனிச் சிறப்புக் கொடுத்திருக்கிறோம். ஐந்திணை என்ற பழைய திணைப் பாகுபாட்டிலே முல்லையும் ஒரு திணை என்பதை நாம் அறிவோம். இருந்த போதிலும், முல்லையின் சிறப்பு 'முல்லை நகை' என்பதிலேதான் வெளிப்படுகிறது. முல்லையைக் கூறும் போதெல்லாம், அதன் முறுவல் - சிரிப்பைத்தான் நமது கவிஞர்கள் சிறப்பித்துக் கூறுவார்கள். ஒரு பெண்ணின் அழகிய முகத்தை வருணிக்கும்போது, அவளுடைய முல்லை நகையைக் கூறுவிட்டால், அவர்களுக்குத் திருப்தி உண்டாகாது. இப்படியாக, முல்லையையும் முறுவலையும் சேர்த்துக் கூறுவது நெடுநாளைய தமிழ் மரபு.

முல்லையின் அழகிலே ஈடுபட்டு, வள்ளலொருவன், தான் ஏறிவந்த தேரை முல்லைக்கொடி படரும்படி கொடுத்துவிட்டான் என்பது ஒரு பழைய கதை.

முல்லையின் அழகைக்கண்டு அனுபவித்துச் சந்தோஷிப்பது போக, ஒருவர், 'ஐயோ முல்லையே! நீ ஏன் மலர்ந்தாய்' என்று கேட்பது இலக்கியத்திலே புதியதாயிருக்கிறது. அவருடைய இரக்கத்துக்குக் காரணமான துக்கத்தை நாமும் கண்டு அனுதாபப்படுவதற்குமுன், சோக உணர்ச்சியைக் கவிஞர்கள் எவ்வாறு வெளியிடுகிறார்கள் என்பதையும் சற்றுப் பார்க்கலாம்.

2

இராமாயணத்திலே ஒரு கட்டம். இராமனுக்கு முடி சூட்டுவதற்காக எல்லா ஏற்பாடுகளும் ஆகியிருக்கின்றன. இந்த நிலைமையிலே தசரதன் கைகேயி அரண்மனைக்குப் போனான். கூனியினுடைய துர்ப்போதனை காரணமாக, கைகேயி யானவள், தனக்குக் கொடுக்கவேண்டிய இரண்டு வரங்களையும் அப்போதே தரவேண்டுமென்று தசரதனைப் பிடிவாதம் செய்து கேட்கிறாள். அந்த வரங்கள் காரணமாக, இராமன் காட்டுக்குப் போக நேரிடுகிறது. முடிபுனைந்து எல்லோரையும் மகிழ்விக்க வேண்டிய தருணத்தில், சீதையும் தம்பி இலக்குவனும் பின்தொடர, இராமன் காட்டுக்குப் போய் விடுகிறான்.

இராமன் முடி புனையப் போகிறான் என்ற சந்தோஷச் செய்தியைக் கேட்டு அதிக குதூகலமடைந்திருந்த அயோத்தி நகர மக்கள், அவன் காட்டுக்குப் போகிறான் என்ற செய்தியைக் கேட்டுப் பெரிதும் கலங்கினார்கள். அரச வீதி வழியே மூவரும் போவதைக் கண்ணாலும் கண்டார்கள். இராமனுடைய அருமையான குணங்களிலே ஈடுபட்டிருந்த அம் மக்களுக்கு, அக் காட்சி எவ்வளவு துயரத்தைக் கொடுத்திருக்கும்! தங்கள் துயரத்துக்கு எல்லை காணாதவர்களாய், அவர்களெல்லோரும் இராமனைத் தொடர்ந்து காட்டுக்குச் சென்றுவிட்டார்கள். கைகேயி கேட்ட வரங்களின் கொடுமையை நினைத்து நினைத்து, மிகவும் மனம் வருந்திக் கொண்டிருந்தான் தசரத மன்னன். உடனிருந்து அவனுடைய துயரத்தைத் தணிக்க முயன்று கொண்டிருந்த தேவியர் அவனை நீங்கி இராமனைத் தொடர்ந்து போக முடியவில்லை. இவர்கள் தவிர, நகரத்திலுள்ள மற்றெல்லோரும் இராமனைத் தொடர்ந்து போய்விட்டார்கள்.

இதைச் சொல்ல வந்தார் கம்பர். சாதாரண வார்த்தைகளால்மட்டும் இதைச் சொல்லிவிட முடியாது. இராமன் காட்டுக்குப் போவதையறிந்து நகர மக்கள் வருந்திப் புலம்புகிறார்கள் என்று சொல்லும் போது, அவரே நகரமக்களில் ஒவ்வொருவராகவும் இருந்து, அந்தத் துன்பத்தை அனுபவிக்கிறார். அவ்வாறு அனுபவிக்கிற துன்பத்தை எப்படி வெளியிடுகிறார்?

இந்தச் சமயத்தில் கம்பர் காட்டுகிற அயோத்தி நகர வீதிகளை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். வீதி வழியாக அவர் போகிறார். எங்குப் பார்த்தாலும், நகர மாந்தர், ஆடவரும் பெண்டிரும், இராமன் போகிற தேரைப் பின் பற்றிச் சென்றுகொண் டிருக்கிறார்கள். வீதியின் இருபுறத்திலுமுள்ள மாளிகைகளில் மனித அரவமே யில்லை. மாளிகைகளின் திண்ணைப் புறத்துச் சுவர்களிலே எழுதப்பட்டிருந்த ஓவியங்களைக் கம்பர் பார்த்தார். இவற்றில் கண்ட ஆண் பெண் வடிவங்களை அவர் முதலில் சித்திரங்கள் என்று எண்ணவில்லை; நகரமக்களென்றே எண்ணினர். இவர்கள் முகத்திலும், கரைகாண முடியாத ஒரு சோகம் நிறைந் திருப்பதாக அவருக்குப் புலப்பட்டது. ஆனால், நகர மக்களெல்லோரும் இராமனைத் தொடர்ந்து செல்லும்போது, இவர்கள் மட்டும் இங்கே நிற்பானேன் என்ற திகைப்பு உண்டாயிற்று. அதன்பிறகுதான் அவருக்கு நினைவு வருகிறது, தாம் பார்த்த உருவங்கள் உண்மையான மக்களல்ல, உயிரற்ற வெறும் சித்திரங்களே என்பது.

இந்த பாவத்தோடு கம்பர் அயோத்தி நகரத்தை வருணிக்கி



ளூர். உள்ளத்தி லெழுகிற சோக மனத்தையும் பாட்டிலே காண லாம் :

ஏகிய குரிசில்பின்
யாவர் ஏகிலார் ?
மாவியல் தானைஅம்
மன்னை நீங்கலாத்
தேவியர் ஒழிந்தனர் ;
தெய்வ மாநகர்
ஓவியம் ஒழிந்தன,
உயிர்இலா மையால் !

3

கவிஞனுடைய வேலை என்ன? உள்ளதை உள்ளபடி சொல்லி விடுவது. இது எளிதென்று யாரும் கருதலாம். வெளியுலகத்திலே நடப்பதையும் காண்பதையும் அப்படியே சொல்லிவிட முடியும்; இது எளிது. ஆனால், கவிஞனுடைய வேலை இதுவன்று. வெளியுலகத்துக்கும் அப்பால், உணர்ச்சியுலகத்தில், உள்ளத்தில் நிகழ்வதை அப்படியே உணர்ச்சி ததும்பும்படியாக வெளியிடுவதுதான் கவிஞனுடைய வேலை.

தம்முடைய பாத்திரங்களின் மூலம் தாம் அடைந்த துயரத்தைக் கம்பர் கூறினார். ஒரு புலவர் இதையொத்த சந்தர்ப்பத்தில் தமது துயரத்தை எப்படிச் சொல்லுகிறாரென்பதையும் மேலே பார்க்கலாம்.

4

ஒல்லையூர் என்ற ஊரிலே சாத்தன் என்ற வீரனொருவன் இருந்தான். போரிலே எவருக்கும் பின்வாங்காத வீரமுடையவன். அவன் வீரத்தைப் பற்றிய புகழ் நாடெங்கும் பரவியிருந்தது. பல இடங்களிலிருந்து, பாணனும் பாடினியுமாக, யாழை ஏந்தி, அவனுடைய புகழைப் பாடிக் கொண்டு வருவார்கள். அப்படி வருவோருடைய இனிய பாடலைக் கேட்டு மகிழ்ந்து, அவர்களுக்கு வேண்டும் பரிசில்களை—பொன்னையும் உணவையும் ஆடையையும்—அளித்து அவர்களை அனுப்புவான். இச்செய்கையால் அவன் புகழ் முன்னிலும் அதிகமாகப் பரவலாயிற்று. புலவர்கள் பலர் அவன் வள்ளன்மையைக் கேள்வியுற்று வருவார்கள். அவர்களுடைய புலமையையறிந்து, தக்கபடி உபசரித்து சாத்தன் அவர்களைத் தன்னோடு பல நாள் இருக்கச் செய்வான்.

தேனுள்ள பூவைத்தேடி வண்டுகள் வருவதுபோல, வள்ளன்மை நிறைந்த சாத்தனைத் தேடி வந்த புலவர்களில், கீரத்தனார் என்பவர் ஒருவர். குடவாயில் என்ற தமது ஊரிலிருந்து புறப்பட்டு வந்து சாத்தனைக் கண்டார். கற்றாரை ஆதரிக்கும் அவனுடைய தகுதியிலும் அன்பிலும் ஈடுபட்டுப் பல நாள் அவனோடு தங்கியிருந்தார். சாத்தன் எப்போதும் அவரைத் தன்னோடு இருக்கச் செய்து விட்டான். அவரும், ஒல்லையூரிலேயே அவனுடைய இணைபிரியாத நண்பராக இருந்து வந்தார்.

அவ்வூரைச் சுற்றிலும் பூஞ்சோலைகள் அடர்ந்திருந்தன. சாத்தனும் புலவருமாக எத்தனையோ முறை அச்சோலைகளிலே திரிந்து, அங்குள்ள பூக்களின் அழகைக் கண்டும், மரங்கள் தந்த கனிகளை உண்டும் இன்புற்றிருக்கிறார்கள். அச்சோலைகள் வழியாக, ஒல்லையூரிலுள்ள வீரர்கள் போருக்குப் போவதும் வெற்றி பெற்று மீள்வதுமாயிருப்பார்கள். தேனெடுக்கவும் கனி பறிக்கவும் இளம் பெண்கள் அங்கே போவார்கள். அவர்கள் கூந்தலிலே, அங்குள்ள பலவகை மலர்களையும் காணலாம். தவிர, சாத்தனைக் கண்டு பரிசில் பெறும் பொருட்டுப் பாணரும் விறலியருமாக அவ்வழியே செல்வார்கள். கவலையற்று அவர்கள் பாடி வருவதையும், பூக்களைச் சூடிச் செல்வதையும் புலவர் கண்டு, அக்காட்சியைப் பெரிதும் அனுபவித்திருக்கிறார்.

புலவர் வாழ்ந்த இந்த இன்ப வாழ்க்கைக்கு முடிவு வந்தது. சாத்தன் இறந்துவிட்டான். இனி அவருக்கு ஒல்லையூரில் என்ன வேலை? தம்மூருக்குத் திரும்பலானார். சோலை வழியாக வரும்போது, பழைய நினைவுகளெல்லாம் அவருள்ளத்தில் எழுந்தன. பாதையின் ஓரத்திலே ஒரு முல்லைக் கொடி நன்றாகத் தளிர்த்துப் பூத்திருந்தது. முறுவல் பூத்த அதன் தோற்றம் அவருடைய துயரத்தைக் கிளறிவிட்டது. சாத்தனுடைய ஞாபகம் வந்தது; அவனிடம் பரிசில் பெற வந்த பாணனொருவன் இதே முல்லைக் கொடியினருகில் நின்று மலர் பறித்த பழையதொரு காட்சியும் அவருடைய மனக் கண்ணில் தோன்றிற்று.

அந்தப் பாணன் பின்னே பாடினியும் வந்தாள். கொடியிலிருந்த பூவைப் பறிக்க எட்டி எட்டிப் பார்த்தாள்; எட்டவில்லை. கண்ட பாணன், அருகில் வந்து நின்று, தன் கையில் வைத்திருந்த யாழின் குடத்தைப் பிடித்துத் தூக்கி, யாழின் மருப்பாலே முல்லைக் கொடியை வளைத்தான். பாடினி பூவைப் பறித்து மகிழ்ச்சியோடு தலையில் சூடிக்கொண்டாள். இது அந்தக் காலத்தில் நடந்தது.

சாத்தன் இறந்து விட்டான். இனி ஏன் பாணர் இவ்வழி வரப் போகிறார்கள்? எவ்வளவு அழகாகத்தான் இந்த முல்லை பூக்கட்டும், என்ன பயன்? வீரர் அணியப் போகிறார்களா? பாணன் வளைக்க, பாடினி பறித்துச் சூடிக் கொள்ளப் போகிறாளா? அந்தக் காட்சிகளை இனிக் காணமுடியுமா?

இளையோர் சூடார் ;
வளையோர் கொய்யார் ;
நல்யாழ் மருப்பின்
மெல்ல வாங்கிப்
பாணன் சூடான்,
பாடினி அணியாள் ;
ஆண்மை தோன்ற
ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன்
மாய்ந்த பின்றை,
முல்லையும் பூத்தியோ ?
ஒல்லையூர் நாட்டே !

பாணன் கிளையை வளைத்த காட்சியை இந்தப் புலவர் எப்படி அனுபவிக்கிறார்! கொடி வருந்துமே என்றெண்ணி, மெதுவாக, 'மெல்ல' வளைக்கிறானாம்!

"நீ ஏன் மலர்ந்தாய்?" என்று தன்னுடைய துயரங் காரணமாக முல்லைக் கொடியைக் கேட்கிற புலவர், 'முல்லையும் பூத்தியோ?' என்று கேட்கிறார். "கல் நெஞ்சு படைத்த ' நான் ஒருவன்தான் உயிரை விடாமல் இன்னும் வாழ்கிறேன். ஆனால், நீயுங் கூடவா மலர்ந்தாய்?" என்று அவர் சொல்லுவதுபோல இருக்கிறது.

உண்மையாகப் பார்க்கப் போனால், எதற்காக அந்த முல்லை மலரவேண்டும்? அழகிய விஷயங்களை அனுபவிப்பதற்கு கலையுள்ளம் படைத்த நல்ல ரசிகர்கள் வேண்டும். ரசிகர்கள் இல்லாத இடத்திலே, அழகுக்கு இடமேது? முல்லை ஏன் மலர வேண்டும்?

இதுவே கவிஞனுடைய சோக உள்ளம்.



# உலகம் கெட்டுப் போச்சு

வல்லிக் கண்ணன்

அப்பொழுதுதான் வெளிச்சம் உண்டாயிருந்தது. அதைப் பரப்பும் சூரியன் ஏற்பட்டது. நட்சத்திரங்கள், காற்று, தண்ணீர் எல்லாமே அப்பொழுதுதான் தோன்றியிருந்தன. உலகமும் அப்பொழுதுதான் சிருஷ்டியில் உருவாகியது.

உலகத்தில் காடுகள் இருந்தன. மரங்கள் வளர்ந்தன. மலைகள் நின்றன. மிருகங்கள், பறவைகள் எல்லாம் வசித்தன. சிருஷ்டியின் லட்சியமாகிய மனிதனும், அவனுக்கு ஒரு மனைவியும் பூமியில் தோன்றினர்.

அவன்தான் ஆதாம்.

அவள்தான் ஏவாள்.

அவர்கள் சிருஷ்டி தேவதையின் கன்னிக் குழந்தைகள். வசித்து வந்ததோ அழகிய சோலை; இன்பத்தின் ஊற்று; சாந்தி கொஞ்சும் இடம். ஆனால், அவர்களது மனம் சாந்தியுறவில்லை.

'விலக்கப்பட்ட மரத்தின் கனி'யைப் புசிக்கவேண்டும் என்ற கவலை; மனதிலே அந்த எண்ணம் வலுத்தது.

கர்த்தரது கண்டிப்பின் பயம் மண்டியிட்டது. மனம் தூண்டியது. சாத்தான் பின்னாலிருந்து தள்ளினான்.

ஆசை யாரைவிட்டது?

ஏவாள் விரும்பினாள்; ஆதாம் பழத்தைப் பறித்தான். இருவரும் புசித்தனர்.

கர்த்தர் கதறினார்; கண்டித்தார்.

ஆதி மனிதனின் மனதிலே ஒரு பாரம் வந்து விழுந்தது—கடமை தவறியதால்! அவர்களுக்கு வாழ்வு ரசிக்கவில்லை.

ஆதாம் சொன்னான் 'உலகம் கெட்டுப் போச்சு' என்று.

ஏவாள் தலையசைத்தாள் 'ஆம்' என்ற கருத்திலே!

* *

காலம் உருண்டது.

மனிதர்கள் பிறந்தார்கள், இறந்தார்கள்; இன்னும் பிறந்தனர். அவர்களது அறிவுப் பறவை அகண்ட உலகிலே வானத்தை முட்டத் துடித்தது.

"உலகம் தட்டை" என்றான் ஒருவன்.

"ஆம்" என்றனர் பலர்.

"சூரியன் சுழல்கிறான்" என்றான் அவன்.

"ஆம், ஆம்" என்றனர் பிறர்.

காலம் கழிந்தது. ஒருவன் சொன்னான்: "உலகந்தான் உருளுகிறது. உலகம் உருண்டை வடிவமானது" என்று.

"போடா பைத்தியம்!" என்றனர் மக்கள்.

நாட்கள் மடிந்தன; மாதங்கள் சென்றன. ஆனாலும், அவன் "உலகம் உருண்டை....உருண்டை...." என்று முரண்டு பிடித்தான்.

சிலர் "இருக்கலாம்" என்றனர்.

சிலர் "இருக்குமோ?" என முனகினர்.

சிலர் "இல்லவே இல்லை" என்று சாதித்தனர்.

"உலகம் உருண்டை" என்ற உண்மை எப்படியோ இறுதியில் நிலம் எங்கும் உருண்டு விட்டது.

பலர் "என்ன! உலகம் கெட்டே போச்சு!" என்றனர்.

* *

வருஷங்கள் ஓடிவிட்டன. இன்னும் உலகம் உருண்டுகொண்டு தானிருந்தது. சிருஷ்டி ஏதோ இயந்திர வெறியிலே உயிர்களை உண்டாக்கி உலகிலே எறிந்து வந்தது. மறுபுறம் மரணம் தன் உரிமையை நிலைநாட்டப் போட்டியிட்டுப் போராடியது.

கிராமங்கள் நகரங்கள் ஆயின. நகரங்கள் தேசங்களாகவும், தேசங்கள் சாம்ராஜ்யங்களாகவும் உருவெடுத்து, அழிந்து, உருவாகி, மறைந்து—ஏதோ ஒரு சக்கர ரீதியிலே—ஒழுங்காக உருண்டன.

மன்னர்களுடன் மன்னர்கள் போட்டியிட்டனர். அதற்காக மனிதர்களுடன் மனிதர்கள் போராடினர். கொன்றனர்; கொலையுண்டனர்.

அன்றும் மக்கள் சொல்லிக் கொண்டுதான் இருந்தார்கள் "உலகம் கெட்டுப் போச்சு!' என்று.

* *

யுகங்கள் பறந்தன.

மனிதனது தனிப் பெரும் உடைமையான அறிவும் உயர உயரப் பறந்தது. உலகம் எவ்வளவு விசாலமானது என்று உணர்ந்தது. இயற்கை எவ்வளவு அற்புதமானதென அறிய ஆரம்பித்தது.

'தேவை' அலறியது ராட்சஸ வேகத்திலே!

மனிதன் பணம் தேட ஆரம்பித்தான். சிலர் முதலாளிகளானார்கள்; பலர் அடிமைகளானார்கள்.

ஒரு புறம் அறிவு வளர்ந்தது; விசாலமாயிற்று; ககனத்தை எட்டிப் பிடிக்கத் துள்ளியது.

அதே வேளையிலே பெரும்பாலோர் ஞான சூன்யரானார்கள்.

புராணங்கள், புளுகு மூட்டைகள் வளர்ந்தன. மோசமும் நாசமும் ஓங்கின. அறிவும் அறிவீனமும் போட்டியிட்டு முன்னேறின.

அன்றும் மனிதன் அதே பல்லவியைத்தான் பாடினான்—'உலகம் கெட்டுப் போச்சு!' என்று.

ரயில் வண்டி, ஓடும் உலகின் பிரத்தியட்சப் பிரமாணமாகப் பூமி எங்கும் ஓட ஆரம்பித்தது. முதலில் மனிதர் பயந்தனர். சிலர் நகைத்தனர். பிறகு எல்லோரும் போற்றினர். அன்றும் பலர் 'உலகம் கெட்டுப் போச்சு' என்றார்கள்.

கடல் மீது கப்பல் மிதந்தது. மனிதர்கள் வாயினின்றும் 'உலகம் கெட்டுப் போச்சு!' என்ற பேச்சே வந்தது.

* *

ஒருவன் "பறக்க வேண்டும்" என்றான்.

"பைத்தியம்" என்றனர் அனைவரும்.

ஒருவன் பறக்க முயன்றான்.

"முட்டாள்!" என்றனர் பலர்.

காலம் பறந்தது; அறிவு பறந்தது; அனுபவம் பறந்தது.

முயற்சி யாரைக் கைவிட்டது! மனிதன் பறக்க ஆரம்பித்தான்; சர்வ சாதாரணமாகப் பறந்துவிட்டான் விமானத்திலேறி!

எல்லோரும் மூக்கின் மேல் விரலை வைத்தனர். அன்றும் சிலர் முத்தாய்ப்பு வைத்தனர்—'உலகம் கெட்டுப் போச்சு!' என்று.

* *

நூற்றாண்டுகள் பல தொலைந்தன.

உலகம் நாகரிகத்தில் முன்னேறியது. எல்லாத் துறையிலும் முன்னேற்றம்; நாகரிகம்!

சலனப் படங்கள், சங்கீதக் கருவிகள், கொலைக் கருவிகள், கொள்ளைக் கருவிகள் எல்லாம் குவிந்தன.

புத்தகங்கள் ஏராளமாக வெளி வந்தன. முட்டாள்களும் ஏராளமாகத் தோன்றினர்.

நேசமும் பாசமும் வளர்ந்தன. மோசமும் நாசமும் எவ்வின.

யுத்தங்கள் எவ்வளவோ தோன்றின; தோன்றுகின்றன. மக்கள் கொலை புரிந்தனர்; கொலையுண்டனர்.

அன்பும் வெறியும் எதிரெதிரே தாண்டவமாடுகின்றன.

எல்லாம் முன்னேற்றம்; எங்கும் முன்னேற்றம். நாகரிகம் வளர்கிறது!

நாகரிகம், நாகரிகம் எனும் பெயரில் சொல்ல முடியாத குற்றங்களும் அவற்றோடு கூடவே நன்மைகள் பலவும் வளர்கின்றன.

கடவுளைப் போற்றினர்; தூற்றினர்.

முதலாளி நசுக்குகிறான்; தொழிலாளி முறைக்கிறான். வைதிகம் புதுமையைத் திட்டுகிறது; புதுமை பழமையைக் கிண்டல் பண்ணுகிறது.

இந்தக் காலத்திலும் அடிபடுகிறது அந்த வசனம்: 'உலகம் கெட்டுப் போச்சு, ஐயா!'

என்ன பொல்லாத உலகம் இது!

என்ன விசித்திர மனிதர்கள் இவர்கள்!

---

(68-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தால், இவ்வளவையும் உட்கொள்வதற்கு வயிறெங்கே, மனுஷர்களெங்கே என்றுதான் சொல்லத் தோன்றும்.

ஆகவே சங்கராந்தி யென்றால், வேண்டாத பழைய காரியங்கள் எல்லாம் ஓடி விடுகின்றன. மஞ்சள் தோகையும் கரும்புத் தோகையும் பூர்வமான வஸ்துக்களாக இருந்தாலும் புத்தப் புதிய வளத்தோடு நம்மிடம் வருகின்றன. புதிய வளம் ஏற்பட்டு, நம்முடைய உடலுக்கு புதியதொரு உணர்ச்சியையும் உல்லாஸத்தையும் கொடுக்கின்றன. இவ்வளவையும் தந்த அந்தப் பூர்வ புண்ணியவானுக்கு எவ்வளவு நன்றி பாராட்ட வேண்டும்.

புறம்பான காரியங்களில் சங்கராந்தி வந்து புகுந்து ரொம்ப ரொம்ப சுத்தம் பண்ணுகிறது. அலங்காரம் பண்ணுகிறது. ரொம்ப சந்தோஷம். ஆனால் நம் உள்ளத்தையும் இதயத்தையும் ஒட்டடை அடித்து, வெள்ளை அடித்து, வளம் செய்ய, அடடா! நமக்கு ஒரு சங்கராந்தி யில்லாமல் போயிற்றே. அப்படி ஒரு சங்கராந்தி ஏற்படுத்தக் கூடுமானால், மக்களது வாழ்க்கை இப்பொழுது இருக்கிறபடியா இருக்கும்? அறிவின்மையும் பொய்ப் பிரசாரமும் உலகத்தை விட்டு வெளியே போய் விடுமே. ஏதோ செவ்வாய்க் கிரகம், சனிக்கிரகம் என்று சொல்லுகிறார்கள்; அந்தக் கிரகங்களுக்கு ஏற்றுமதி ஆயிருக்குமே.

உள்ளத்தைத் துப்புரவு செய்வதற்கான வழி யொன்றும் நமக்குத் தெரியவில்லைதான். நம்முடைய கவி சுப்பிரமணிய பாரதி யாருக்கும் தெரியவில்லை தான். முத்து மாரியம்மையின் பாதமே கதியென்று விழுகிறார் அவர். எப்படி விழுகிறார் என்று பார்ப்போம்:

துணி வெளுக்க மண்ணுண்டு—
எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரீ
தோல் வெளுக்கச் சாம்பருண்டு—
எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரீ
மணி வெளுக்கச் சாணையுண்டு—
எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரீ
மனம் வெளுக்க வழியில்லை—
எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரீ
பிணிகளுக்கு மாற்றுண்டு—
எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரீ
பேதமைக்கு மாற்றில்லை—
எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரீ
*அணிகளுக்கோர் எல்லை யில்லாய்!—
எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரீ
அடைக்கல மிங்குனைப் புகுந்தோம்—
எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரீ.

[குறிப்பு: சென்னை ரேடியோவில் ஜனவரி மீ 14 தேதி செய்த பிரசங்கம்]

* வானத்தில் பிரகாசிக்கிற கோடிக்கணக்கான நக்ஷத்திரங்கள் எல்லாம் சக்தி தேவிக்கு ஆபரணங்கள்.

## மனிதனும் இறைவனும்

மனிதன் யார்? போராட்டம், பிடிவாதம், பலாத்காரம், எதிர்பாராத வினை ஆகியவற்றின் மூலமாக இயற்கையை உடைமைப் படுத்திக்கொள்ளும் பொருட்டு, அவனிடமிருந்து தனது உண்மையான சொரூபத்தை மறைத்துக்கொள்ளும் இறைவனே மனிதன். இறைவன் யார்? மானிட ஜீவனில் அமைந்துள்ள தனது தனித்தன்மையினின்று தனது விசுவரூபத்தையும் பர நிலையையும் மறைத்துக் கொள்ளும் மனிதனே இறைவன்.

—யோகி அரவிந்தர்.




# சுவாமி சுத்தானந்த பாரதியார்

## எழுதிய புதிய நூல்கள்

| | ரு. அ. | | ரு. அ. |
|---|---|---|---|
| கல்விக் கதிர் ராப்பர் | 1 4 | அன்பின் அற்புதம் | 0 10 |
| ,, காலிகோ | 1 12 | சிவாஸ்திரம் | 0 8 |
| அன்பு வழி | 0 6 | இளிச்சவாயன் | 1 0 |
| கவிக்கனவு | 0 10 | மகா கவி தாந்தே | 1 0 |
| அன்பு நிலயம் ராப்பர் | 1 8 | திருமந்திர விளக்கம் | 1 0 |
| ,, காலிகோ | 2 0 | யோகத்தின் அடிப்படை | 0 10 |
| காலத்தேர் | 1 0 | அருட்சுடர் வள்ளலார் | 0 12 |
| தமிழ்க் கனல் | 0 8 | ,, காலிகோ | 1 0 |
| குழந்தை யின்பம் | 0 4 | இன்பமாலை | 0 6 |
| திருக்காட்சி | 0 4 | பொதுநெறி | 0 2 |
| அரவிந்த யோக தீபிகை | 0 8 | திருக்குற ளின்பம் ராப்பர் | 1 4 |
| உடலுறுதி | 1 0 | ,, காலிகோ | 1 12 |
| பராசக்தி அர்ச்சனை | 0 3 | மகரிஷி தாயுமானர் | 0 4 |

## சக்தி காரியாலயம்

சென்னை — மதுரை

# உண்மையான இன்பத்தை அனுபவிக்க
## "டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்கள்"
## உபயோகியுங்கள்



இவ்வுலகில் ஒவ்வொருவரும் பணக்காரனயினும், ஏழையாயினும், ஆணயினும் பெண்ணயினும், யௌவனராயினும், வயோதிகராயினும், வீர்யத்துடனிருப்பதையே விரும்புவார்கள். அவர் யாருக்காவது வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க முடியாதென்று தோன்றினலோ அல்லது இனத்தின் இன்பங்களை அனுபவிக்க முடியாவிட்டாலோ, அல்லது நல்ல திடகாத்திரமுள்ள குழந்தைகள் பிறக்கவேண்டிய சக்தி இல்லாவிட்டாலோ அவர்கள் எப்பவும் "டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்களை" உபயோகிக்க வேண்டும். இந்த மாத்திரைகள் ஆச்சர்யமான குணத்தைக் கொடுக்கும். ஒவ்வொரு பெட்டியிலும் பத்து டோஸ்களிருக்கின்றன. வயது என்னவாயிருந்தாலும், விவாக வாழ்வின் இன்பங்களை பூரா திருப்தியுடன் அனுபவிக்க ஒரு டோஸ்கூடப் போதுமானது இன்றைக்கே "டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்கள்" ஒரு பெட்டி வாங்கி உபயோகித்துப் பாருங்கள். நீங்கள் முன்னல் அனுபவிக்க முடியாத இன்பத்தை அது தரும் என்பதற்கு சந்தேகமில்லை. ஒரு பெட்டியின் விலை ரூபாய் 5. தபால் கூலி அணு 9. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஏஜண்டுகள்: **அப்பா & கம்பெனி**

அப்பா பில்டிங்ஸ், சைனு பஜார் மதராஸ்.



எல்லா விதமான
தமிழ்ப் புத்தகங்களும்
எங்களிடம் கிடைக்கும்
புத்தக விலைப் பட்டியல்
வேண்டுவோருக்கு அனுப்பப்படும்.

மானேஜர்
**சக்தி காரியாலயம்**
சென்னை :: மதுரை



எழுதுவதில் இணையற்றது
பார்க்கர் பேனு



**கனி & சன்ஸ்**
ராட்டன் பஜார், மதராஸ்



**உயர்ந்த வைரங்கள்**

புதுமாதிரி வைர நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

உ. அ. அரு. அருணசலம்
செட்டியார்

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி



## அனுபவ ஜோதிஷர்



திறமைக்கு தங்க மெடல்களும் நற்சாட்சிகளும் பெற்றவர், எதிர்காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூ. 1. பேள் கேள்வி 1-க்கு அணு 8. மாதவாரி ஒரு வருஷ பலன் ரூ. 5. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர் காழியூர் கோவிந்தாச்சாரி
3/2, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர்
மதராஸ்

# ஆண்டவனும் சாத்தானும்

(ருமேனியக் கதை—காராஜியேல எழுதியது)

க. நா. சுப்பிரமணியன் மொழிபெயர்ப்பு

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலையில் ஆண்டவனைத் தேடிக் கொண்டு சாத்தான் வந்தான். "மஹாப் பிரபோ! நீங்கள் ஏன் இப்படி மனித ஜாதியைப்பற்றி அனாவசியமாகக் கவலைப்படுகிறீர்கள்? அவர்கள் உதவாக்கரை என்று உங்களுக்கு இன்னமும் தெரியவில்லையா? அவர்களை என்னிடம் ஒப்புவித்து விடுங்கள். நான் பார்த்துக் கொள்ளுகிறேன். வீண் கவலை உங்களுக்கு எதற்கு? மனிதர்கள் சுபாவத்திலே கெட்டவர்கள்; அசடர்கள்!" என்றான் சாத்தான்.

அப்போது ஆண்டவனுக்குச் சாத்தானிடம் அதிகமாகப் பேச மனமில்லை. ஆகவே, கொஞ்சம் ஆத்திரமாகவே பதிலளித்தார்; "போ வெளியே! நீ அயோக்யன், ரொம்பவும் கெட்டவன். உன்னுடன் பேச, அதுவும் இன்று உன்னுடன் பேசிக் கொண்டிருக்க எனக்கு மனமில்லை."

"மஹாப் பிரபோ!"

"மஹாவுமாச்சு, பிரபுவும் ஆச்சு! மனிதர்களைப்பற்றி நீ கூறும் அவதூறுகளை எல்லாம் கேட்க நான் தயாராயில்லை. அவர்கள் எப்படி அசடர்களாய் இருக்க முடியும்? அவர்கள் என்னைப் போலவே இருக்க வேணுமென்று நான் சிருஷ்டித்தேனே?"

"அது சரி. ஆனால்—நான் இப்படிச் சொல்லுவதைத் தாங்கள் மன்னிக்கவேணும்; மனிதர்களுக்கு அறிவு..."

"போதும். போய்விடு நீ! நம்பிக்கை அற்றவனே! உன் பேச்சைக் கேட்டால், எனக்கும் நம்பிக்கை அற்றுவிடும் போல் இருக்கிறது. எனக்கு உண்மையிலேயே கோபம் வருமுன் போய்விடு! பொய்யும், புளுகுமாகச் சொல்லிக் கொண்டு, என்னிடம் ஏன் இப்படி அடிக்கடி வந்து தொந்திரவு கொடுக்கிறாய்? மனிதர்கள் அசடர்களா? எனக்கு அவர்கள் அசடர்கள் என்று தோன்றவில்லை."

"ஓ!" என்று சொல்லிச் சிரித்தான் சாத்தான்: "நான் இப்படி விடாப்பிடியாகச் சொல்லுவதற்குத் தாங்கள் என்னை மன்னிக்கவேணும். தாங்கள் மனிதர்களை அணுகிப் பழகி வெகு நாட்கள் ஆகிவிட்டன. அவர்கள் உங்களை அவமதித்ததற்கு அப்புறம்..."

"என்னை அவமதித்தார்களா? எப்பொழுது?" என்று, அதை மறந்துவிட்டவர்போல, ஆண்டவன் கேட்டார். அது அவருக்கு உண்மையிலேயே மறந்து போனாலும் போயிருக்கலாம். ஆண்டவனுக்கு எது சாத்தியம், எது சாத்தியமில்லை என்று யார் சொல்ல முடியும்?

"தங்களுக்கு ஞாபகம் இல்லையா? ஜெரூஸலத்தில் தங்களைச் சிலுவையில் அறைந்து..."

"ஓ! ஆமாம்; ஆமாம்" என்று சொல்லி, ஆண்டவன் அந்தப் பேச்சை மாற்ற முயன்றார்: "நீ இப்பொழுது, சமீபத்தில் மனிதர்களிடையே போயிருந்தாயா?"

"போகாமல்? நான் மனிதர்களிடையே போய்ப் பழகாவிட்டால், என் ஜீவனம் எப்படி நடக்கும்? அவர்களுடைய ஜீவனம் தான் எப்படி நடக்கும்? நான் இப்பொழுதெல்லாம் மனிதர்களிடையேதான், இரவு, பகல் எந்நேரமும் வசிக்கிறேன்....மனிதர்களைப்பற்றி நான் சொல்லுவதை நம்புங்கள். அவர்கள் அசடர்கள், ஒன்றுக்கும் உதவாதவர்கள்; அவர்களிடம் தாங்கள் நம்பிக்கை வைப்பதில் சாரமில்லை."

ஆண்டவனுக்கு அளவு மீறிக் கோபம் வருவதைக் கண்டு, அருகிலிருந்த பீட்டர் குறுக்கிட்டார்: "இதோ பார்! உன்னையும்,



உன் வின்னியாசங்களையும், வழிகளையும், ஆண்டவன் நன்கு அறிவார். நீ பேசுவதில் பயனில்லை. ஆண்டவனுக்கு வேண்டியது ருஜுக்கள்தான், வீணே காது புளிக்கும் வரையில் பேசாதே. போய்விடு. இல்லாவிட்டால் காதைப் பிய்த்து விடுவேன்!"

பாவம்! சாத்தான் என்ன செய்வான்? பீட்டர் விளையாட்டாகப் பேசவில்லை, வினையாகவே பேசினார் என்று அறிந்தவுடன் ஓடியே போய்விட்டான். ஆனாலும், போகும்போது "ருஜுக்களா வேணும்? வேண்டிய ருஜுக்கள் காட்டுகிறேன்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டே போனான். அன்று முழுதும் அவன் அலைந்து திரிந்துவிட்டு, அஸ்தமன சமயத்தில் ஐரோப்பாக் கண்டத்தில், ஜெர்மனி என்கிற தேசத்தில், இரண்டு நதிகளுக்கு மத்தியிலிருந்த ஒரு நகரை அடைந்தான். நீண்ட தாடியுடன் தெருவோடு போய்க் கொண்டிருந்த ஒருவனை நிறுத்தி, "என்ன, கூட்டன்பர்க்! சௌக்யமா?" என்று க்ஷேமம் விசாரித்தான்.

அதிகம் வளர்த்து வானேன்? அவர்கள் இருவரும் ஆத்ம சிநேகிதர்கள் ஆனார்கள். கூட்டன்பர்க்கின் காதில் சாத்தான் ரகஸ்யமாக ஏதேதோ சொன்னான். சாத்தான் சொன்னதை ஆதாரமாக வைத்துக் கொண்டு, வெகு நாள் யோசித்து யோசித்து, கூட்டன்பர்க் கடைசியாக அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தான்.

அதற்கப்புறம் அச்சு இயந்திரம் வேலை செய்ய ஆரம்பித்தது...

முதலில் அச்சு இயந்திரம் வெகு மெதுவாகத்தான் வேலை செய்தது. ஆனால் சாத்தானுக்கா தெரியாது, அதை எப்படித் துரிதப்படுத்த வேணுமென்று? அச்சு இயந்திரத்தின் சக்கரங்களைத் தன் வாலைக் கொண்டே வெகுவேகமாக இயங்கவைத்தான். வேகமா?...மணிக்கு லட்சம் பக்கங்களுக்குமேல் அச்சிடக் கூடிய சாதகம் ஆகும்வரையில், சாத்தானுக்குத் திருப்தி ஏற்படவில்லை. லட்சம் பக்கங்கள் தயாரானால் மட்டும் போதுமா? அவற்றை ஜனங்களிடையே பரவச் செய்ய, அதிதுரிதமாகப் பரவச் செய்ய, சாதனங்கள் வேண்டாமா? ரயில், மோட்டார் முதலிய இந்தச் சாதனங்களைக் கண்டுபிடித்த பெருமையும், விசாரிக்கப் புகுந்தால், சாத்தானையே சாரும்.

இது எல்லாம் நடந்து சில காலத்துக்குப் பிறகு ஒரு நாள், சொர்க்க வாசலைக் காத்து நின்ற பீட்டரின் காதில் ஒரு பெரிய ஆரவாரம் விழுந்தது. என்ன என்று ஆச்சர்யத்துடன் அவர் நிமிர்ந்து பார்த்தார். சாத்தான் வந்திருந்தான். அவனைப் பின்தொடர்ந்து ஒரு நீண்ட புகை வண்டியும் வந்திருந்தது. அந்தப் புகை வண்டியில் அச்சிட்ட புத்தகங்கள், பைபிள் வியாக்கியானங்கள், பத்திரிகைகள் ஆகியவை நிறைந்திருந்தன. புகை வண்டியிலிருந்து அவற்றை இறக்க மாட்டாமல் இறக்கித் தூக்கிக் கொண்டு, ஆண்டவன் சன்னிதியைச் சாத்தான் அடைந்தான்.

"அயோக்கியப் பதரே! மறுபடியும் வந்து விட்டாயா?" என்றார் ஆண்டவன்.

"ஆமாம், மஹாப் பிரபோ!"

"என்ன விசேஷம்?"

"அதிகமாக ஒன்றும் இல்லை. தங்கள் பார்வைக்கு என்று இதை எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். கொஞ்ச நாளைக்கு முன் நான் வந்திருந்தபோது, ருஜுக்கள் வேணுமென்று கேட்டீர்களே! ருஜுக்கள் கொண்டு வந்திருக்கிறேன். பாருங்கள். பீட்டர் பிரபுவே! நீங்களும் பாருங்கள்; மூக்குக்கண்ணாடியை அணிந்து கொண்டு பாருங்கள்"—இப்படிச் சொல்லிக்கொண்டே சாத்தான், தான் கொண்டு வந்திருந்த சரக்கை எல்லாம் அவர்களிடம் காட்டினான்.

சிலவற்றைப் புரட்டி வாசித்துப் பார்த்துவிட்டு ஆண்டவனும், பீட்டரும் தலையைச் சொறிந்தார்கள்; தாடியை உருவினார்கள்; ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

### சண்டிக் கப்பலின் கதி

சூயஸ் கால்வாயில், சண்டிக் கப்பலுக்குச் சாவுதான் கதியாம். அதாவது, அங்கே நடுவழியில் எந்தக் கப்பலாவது ரிப்பேர் ஆகி, 12-மணி நேரத்துக்குள் பழுது சீர்படாவிட்டால், அப்படியே குண்டுபோட்டுக் கடலில் அமிழ்த்தி விடுவார்களாம். ஏனெனில், அங்கே வழி குறுகல், கப்பல் போக்கு வரத்து வருமானமோ ஏராளம். ஒரு 'சண்டிக் கப்ப'லால் மிற கப்பல்களின் போக்குவரத்துத் தடைப்பட்டால், ஏராளமான நஷ்டமாகுமல்லவா? அதைத் தடுக்கவே இந்த வேலை.

"மஹாப் பிரபோ! ஆண்டவனே! நான் சொன்னது சரிதானே?"

ஆண்டவன் பதில் சொல்லவில்லை.

"என்ன பீட்டர்?"

பீட்டரும் பதில் சொல்லவில்லை.

சிறிது நேரம் கழித்து ஆண்டவன் கேட்டார்: "சரி. இப்பொழுது என்ன செய்ய வேணும்?"

"மனிதர்கள் அசடர்கள்; ஒன்றுக்கும் உதவாதவர்கள். அவர்களை என்னிடம் ஒப்புவித்து விடுங்கள்; நான் பார்த்துக் கொள்ளுகிறேன்."

"தொலை! நீயே இனிமேல் மனிதர்களிடையே ஆட்சி செலுத்து. என்முன் நிற்காதே. தொலை!" என்று ஆத்திரத்துடன் கத்தினார் ஆண்டவன்.

குஷியாக ஒரு குதி குதித்துக் கொண்டு, சாத்தான் கிளம்பினான்.

"இரு. எங்கே இப்படி அவசரமாகப் போகிறாய்?" என்று ஆண்டவன் கேட்டார்.

"காலம் வீணாவானேன்? மனிதரிடையே ஆட்சி செலுத்த, நான் பூலோகம் போகிறேன்."

"என்ன? இந்தக் குப்பையை எல்லாம் இங்கே போட்டுவிட்டா போகிறாய்? இதையும் தூக்கிக் கொண்டு ஓடு! இந்த மாதிரி அச்சிட்ட சரக்குடன் நீ இனிமேல் என்றாவது என்முன் எதிர்ப்பட்டாயானால், உன் வாலை ஒட்ட நறுக்கி விட, நான் பீட்டருக்கு உத்திரவு இட்டுவிடுவேன்; ஜாக்கிரதை! காதில் விழுந்ததா?"

தன் வாலைப் பத்திரப்படுத்திக் கொண்டு, அச்சிட்ட தன் சரக்குடன், சாத்தான் சுவர்க்கத்திலிருந்து வெளியேறினான்.

இப்படியாகத்தானே மனித குலம் புத்தகங்களும் பத்திரிகைகளும் அச்சிடவும், அவற்றைச் சர்வ கலா சாலைகளிலும் நூல் நிலையங்களிலும் சேமித்து வைக்கவும் கற்றுக்கொண்டது!

# புத்தக உலகம்

**கதைக்கோவை:** (தொகுதி II): வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை: கிளேஸ்— ரூ. 4—0—0; பெதர் வெயிட் ரூ. 5—0—0.

இந்தத் தொகுதியில் 50-பிரபல எழுத்தாளர்களின் கதைகள் அடங்கியிருக்கின்றன. அத்தனை பேரும் முதல் தொகுதியில் இல்லாத புதிய பெயர்கள். முதல் தொகுதியிலேயே சேர்ந்திருக்க வேண்டிய, ஆனால் விட்டுப் போய் விட்ட, பல முக்கியஸ்தர்களின் பெயர்களும் இந்தத் தொகுதியிலே சேர்க்கப் பட்டு விட்டதால், பெருங் குறையொன்று தீர்ந்தது என்றும் இங்கே குறிப்பிடுவது அவசியமாகும்.

வ.ரா., 'கல்கி,' பி.ஸ்ரீ., 'இளங்கோவன்,' 'குமுதினி,' 'தமிலன்,' 'மதுரம்,' கே. எஸ். வேங்கடரமணி, ஸி. ஆர். ஸரோஜா, ந. ராமரத்தினம், வி. ஆர். எம். செட்டியார் முதலிய இன்னும் பல பிரபல எழுத்தாளர்களும் சிறுகதாசிரியர்களும் இந்தத் தொகுதியில் சேர்ந்திருக்கிறார்கள்.

புது வீடு கட்ட விரும்பும் இரு புதுமைக் குழந்தைகளை, வ. ரா. சிருஷ்டித்திருக்கிறார். குழந்தைகளின் விளையாட்டு, லட்சிய வாழ்வின் அழகிய பிரதிபிம்பமாகும்.

'கல்கி'யின் கதை கிண்டிக் குதிரைப் பந்தயத் தமாஷ். அவருடைய விதூஷகம் எப்போதும் போலவே நல்ல பொழுது போக்காயிருக்கிறது.

'இளங் கோவ'னின் 'முதல் தாமரை.' நடையழகும் உணர்ச்சிச் செறிவும் வர்ணனைப் பெருக்கும் நிறைந்ததோர் அபூர்வக் கற்பனை.

நமது நாகரிகத்துக்குள்ளே புரையோடிக் கிடக்கும் ஒரு தீமையை, உள்ளங்கிளறும் சோகக் கதையொன்றின் மூலம் ந. ராமரத்தினம் எடுத்து விசிறுகிறார்.

"நான் தேச சேவை செய்தேன்; கூடாதென்றார் முதலாளி. நான் கேட்கவில்லை. என்னை அவர் வெளியேற்றி விட்டார்" என்று ஒரு தலைமைப் பத்திராசிரியர் சமீபத்திலே கண்ணீர் விட்டார். அவர் 'மதுரம்' என்ற நண்பரின் 'பாலகிருஷ்ணன் படம்' என்ற கதையைப் படிப்பது அவசியம். படித்தால், அவருடைய தலைமையாசிரிய மனச் சாட்சி, கதையின் உதவியாசிரியர் துயர் கண்டு அழுமா, சிரிக்குமா என்று நாம் அறியோம். 'மதுர'த்தின் கதை ஓர் அரிய பிரத்யட்ச சித்திரமாகும்.

இவ்விதமே மற்றும் அத்தனை கதைகளும் வெவ்வேறு விதமான ரஸனை நிரம்பி விளங்குகின்றன. எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் பற்பல புதிய எழுத்தாளர்களையும் தேடிக் கண்டு பிடித்துக் கதைகளைச் சேர்த்துத் தொகுத்து, தமிழுக்கும் எழுத்தாளர்களுக்கும் சிறந்த சேவை புரிந்துள்ள அல்லயன்ஸ் ஸ்ரீ. குப்புஸாமி ஐயரின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் இங்கே பாராட்டாமல் விட முடியாது. காகித விலை அகாதமாய் ஏறியிருக்கும் இந்தக் காலத்திலும், முதல் தரமான முறையில், உயர்ந்த தாளில், சிறந்த அமைப்புடன், அதற்கேற்றவாறு விலையை ஏற்றாமல், மலிவாகவே அவர் பிரசுரித்திருப்பதால், யாவரும் வாங்கி ஆதரிப்பது தமிழர் கடமையாகும். அருமையான, விதம் விதமான, ரஸனை மிக்க சிறு கதைகள்; நேர்த்தியான பதிப்பு.

* *

**சீவக சிந்தாமணி:** வெளியிட்டோர்: சைவ சித்தாந்த மகா சமாஜம், 22-ஏ, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர். விலை: ரூ. 1—8—0.

பஞ்ச காவியங்களுள் ஒன்று சீவக சிந்தாமணி. முற்றிலும் விருத்தப் பாவால் ஆனது. கம்பனுக்கு இவ்விஷயத்தில் வழிகாட்டியது சீவக சிந்தாமணிதான் என்று கூறுவோருமுண்டு. அது எவ்வளவு தூரம் உண்மையோ, அதை ஆராய்ச்சியாளர்தான் சொல்ல முடியும். அதெவ்வாறாயினுமாகட்டும். சீவக சிந்தாமணி ஒரு புராதனத் தமிழ்க் காவியம். மூலம் மிகவும் திருத்தமாகப் பதிக்கப் பெற்றுள்ளது. பாட்டு முதற் குறிப்பு, விரிவான அபிதான விளக்கம், அரும் பதவுரை இவைகள் சேர்க்கப் பட்டிருப்பது கற்க விரும்பும் மாணாக்கருக்குப் பேருதவியாகும். பதிப்பும் அமைப்பும் மிக நேர்த்தியா யிருக்கின்றன.

* *

**ஸ்ரீ தியாகி ராமாயணம்—சுந்தர காண்டம்:** பதிப்பாசிரியர்: இராம-சடகோபன். வெளியிட்டோர்: 'தியாகி' ஆபீஸ், விழுப்புரம். விலை: ரூ. 2-8-0.

உலகத்தின், சிறப்பாக இந்தியாவின், பொக்கிஷமாகும் ராமாயணம் என்ற மகா காவியம். வால்மீகியின் மூலகாவியம் கன்னியழகுடன் பொலிவது; கம்பராமாயணம் சர்வாபரண பூஷிதையான சுந்தரிபோல் லாவண்ய முடையது. வால்மீகியின் சுலோகங்களிலிருந்தும், கம்பனின் பாடல்களிலிருந்தும் பொறுக்கி யெடுத்த மலர்களை இடையிடையே நிரவி, தெளிந்த நடையில், ருசிகரமான முறையில், பக்தியும் பவ்யமும் இலக்கியச் சுவையும் பொதிந்த நெறியில் 'தியாகி' இராம சடகோபன் இந்நூலை இயற்றி யிருக்கிறார். யாவரும் படித்து அனுபவிக்கக் கூடிய புத்தகம்; யாவரும் படித்து அனுபவிக்க வேண்டிய புத்தகம்.

* *

**ரூஸ்ஸோ:** ஆசிரியர்: வெங்களத்தூர் சாமிநாத சர்மா. வெளியிட்டோர்: பாரத பந்தர், புஸ்தக வியாபாரிகள், இரங்கூன். விலை: அணா 4

பிரஞ்சுப் புரட்சிக்குச் சிந்தனை விதைகள் தெளித்த தத்துவதர்சிகளில் மிக முக்கியமான ஒருவர் ரூஸ்ஸோ. சமூக அமைப்பையே அடியோடு மாற்றும் புரட்சித்

தத்துவங்களை அவர் வெளியிட்டார். கல்வி போதனை பற்றியும் மானிட சமத்துவம் பற்றியும் அவருடைய கருத்துக்கள், இன்றும் உலகை ஆட்டி வைத்து வருகின்றன. விறுவிறுப்பும் இனிமையும் அனுதாபமும் நிறைந்த நடையில், இந்தக் கீர்த்திமானுடைய சரித்திரத்தை ஆசிரியர் மிக அழகாய் எழுதி யிருக்கிறார்.

*  *

**சிந்தனையும் மின்னொளியும்** : ஸ்ரீ அரவிந்தர் அருளியது. மொழிபெயர்த்தவர் : பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல். வெளியிட்டோர் : நவயுகப் பிரசுராலயம், ஜி. டி., சென்னை. விலை : அணு 10.

மகான் அரவிந்தர் ஆத்மானுபவம் நிறைந்ததொரு மகாஞானி. அவருடைய சிந்தனைச் சுடர்கள் தத்துவ தர்சனத்தில் பிறந்தவை; அறிவைக் கலக்கிப் பிரமிக்கச் செய்யும் சக்தி வாய்ந்தவை. பிரபஞ்சம், தெய்வம், ஆத்மா, பாசம் ஆகியவை பற்றிப் பளீர், பளீர் என்று டால் அடிக்கும் அரவிந்த அறிவுப் பொறிகள் பலவற்றை, ஸ்ரீகோதண்டராமன் திரட்டி, சிக்கலற்ற அழகான தமிழ் நடையில் பெயர்த்துத் தந்திருக்கிறார். மனதைத் தீட்சண்யப் படுத்தி, சூட்சுமப் பார்வையைத் தீட்டிவிடக் கூடிய நூல் இது.

*  *

**ஜவாஹர்லால் நேருவின் கடிதங்கள்** : மொழிபெயர்த்தவர் : கி. ரா. வேங்கடராமன், பி.ஏ., பி.எல். வெளியிட்டோர் : கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர். விலை : ரூ. 1-8-0.

குமாரி இந்திராவுக்கு நேருஜி எழுதிய இந்தக் கடிதங்கள் மிகப் பிரசித்தமானவையாகும். இந்திரா பத்து வயதுச் சிறுமியா யிருக்கும் போது எழுதப்பட்ட கடிதங்கள் இவை. இவற்றின் மூலமாக, உலக சரித்திர நுட்பங்களைத் தம் மகளுக்கு நேரு புகட்டுகிறார். குழந்தைகள் மட்டிலுமல்ல; பெரியவர்களும் படித்து, சரித்திர நோக்கில் ஒரு புதிய, தெளிந்த பார்வையைப் பெற உதவுவன இவை. ஸ்ரீ வேங்கடராமன் அழகான எளிய தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். அமைப்பும் பதிப்பும் முதல் தரம்.

*  *

**ஸ்ரீமத் பிரம்மானந்த சுவாமிகளின் ஞானோபதேசம்** : வெளியிட்டோர் : ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர். விலை : அணு 14.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய ஞானக் குழந்தையாவார் ஸ்ரீமத் பிரம்மானந்த சுவாமிகள். பாரமார்த்திகப் பெருவாழ்வு சம்பந்தமாக அவருடைய அருங் கருத்துக்களும் உபதேசங்களும் சாதன மார்க்கங்களும் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன. சுவாமிகளின் கடிதங்கள், அவருடன் சிஷ்யர்கள் நடத்திய வினாவிடைகள் ஆகியவை இதில் தரப் பட்டிருக்கின்றன. தத்துவார்த்தங்கள் சம்பந்தமான ஐயங்களை விளக்கி யிருப்பதுடன், ஆத்மார்த்த சாதனங்களையும் மிகத் தெளிவாக, சுவாமிகள் விவரித்திருக்கிறார். சுத்தமான மொழி பெயர்ப்பு.

*  *  *

**ஞானியாரடிகள் கந்தர் சட்டிச் சொற்பொழிவுகள்** : குறிப்பெடுத்தெழுதியவர் : வித்துவான் திரு. மு. இராசாக்கண்ணு முதலியார், பி. ஓ. எல். வெளியிட்டோர் : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பவழக்காரத் தெரு, சென்னை. விலை : ரூபா ஒன்று.

தமிழுக்கும், சிறப்பாகச் சைவத்துக்கும் பெரும்பணி புரிந்த ஞானியாரவர்களின் ஐந்து சொற்பொழிவுகளைப் பொருளாகக் கொண்டது இந்தப் புத்தகம். முருகப் பிரானின் கடவுள் தத்துவத்தையும், புராண வரலாற்றையும் எழுவாயாகக் கொண்டு, சைவ மத சூக்குமங்களை, தேனினு மினிய செஞ்சொல் நடையில் விளக்குகிறார் சுவாமிகள். ஞானியாரடிகளின் வரலாற்றுச் சுருக்கம் முன்னே தரப்பட்டிருக்கிறது. ஞானியாரவர்களின் சொற்பொழிவுகள், இலக்கியச் சுவையும் இலக்கண அமைவும் தத்துவப் பொருள்களும் பொருந்தி அழகுடன் மிளிர்கின்றன.

*  *  *

**ஸ்ரீ மஹர்ஷி வாய் மொழி** : வெளியிட்டோர் : ஸ்ரீ ரமணாசிரம ஸர்வாதிகாரி நிரஞ்ஜனானந்த சுவாமிகள், திருவண்ணாமலை. விலை : அணு 4.

முற்றும் துறந்த முனிவர் பகவான் ரமணரின் பாரமார்த்திக உபதேசங்கள், சம்வாத ரூபமாக இதிலே விளக்கமா யிருக்கின்றன. ரமணரின் அழகிய திருவுருவப் படம் சேர்க்கப் பட்டிருக்கிறது. சுலபமான நடை, தெளிவான கருத்து, சுத்தமான பாஷை, ஆத்மானுபவம் நிறைந்த நோக்கு—இவை இந்தச் சம்பாஷணைகளின் சிறப்புக்களாகும்.

*  *

**சைவப் பஞ்சாங்கம்** : கணித்தவர் : இ. மு. சுப்பிரமணிய பிள்ளை. வெளியிட்டோர் : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பவழக்காரத் தெரு, சென்னை. விலை : அணு 2.

ஆகம முறையாகக் கணிக்கப்பட்ட இந்தப் பஞ்சாங்கத்தில், முறைப்படி சகல அம்சங்களும் உள்ளன. சுமார்த்த, வைணவ, கிறித்தவ, மகம்மதிய விசேடங்களும் முகூர்த்த நிர்ணயம் முதலிய பல அரிய பொது விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன.

*  *

**சித்ரபானு வருஷத்திய ஆனந்த போதினி பஞ்சாங்கம்** : கணித்தவர் : வி. ஜி. ராஜன், பி. ஏ. பிரசுரித்தோர் : ஆனந்த போதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ். விலை : அணு 4.

இந்தச் சுத்த திருக்கணிதப் பஞ்சாங்கத்தில் முறையான பற்பல அம்சங்களும் இருப்பதோடு, தேசாந்திர ஸம்ஸ்காரம் குறிக்கப்பட்டி ருப்பதால், எந்த இடத்திலுள்ளவர்க்கும் உபயோகம். மேலும், நவக்கிரக நிராயன சுத்த ஸ்புடம் முதலிய ஜோதிஷ உபயோகமான விசேஷங்களும் இதில் தரப்பட்டிருப்பது இதன் சிறப்பாகும்.

*  *

**கொத்தமங்கலம் சி. சு. ரா. சு. ராமராமன் செட்டியார் வாழ்க்கை வரலாறு** : ஆசிரியர் : நா. ப. தணிகை அரசு. வெளியிட்டோர் : இந்து மத பாடசாலை, வாலாஜாபாத்.

தான தர்மங்கள் சிறப்பாகச் செய்து, அமைந்த வாழ்வு வாழும் ஸ்ரீ செட்டியாரவர்கள் 60-ஆண்டு நிறையப் பெற்றுள்ளார். அவருடைய சரித்திரம் நல்ல தமிழில் அழகாக எழுதப் பெற்றுள்ளது. பல போட்டோப் படங்கள் அடங்கியுள்ளன.

*  *

**வாலாஜாபாத் இந்து மத பாடசாலை**யின் விசு ஆண்டு பொங்கல் மலர் வரப் பெற்றோம். 1941-ஆம் ஆண்டு அறிக்கையும் அதில் அடங்கியுள்ளது. அரிய குருகுல முறையில் கல்வி யளிக்கப்படும் இந்தப் பாடசாலை வர வரச் சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்து வருவது சந்தோஷத்திற்குரிய செய்தியாகும்.



## பாலர் கதை

# நாகரிகப் பெண்

நீலா

சுந்தரி ஒரு நாகரிகப் பெண். அவள் எப்போதும் புருஷ உடை தரித்திருப்பாள். ஒரு நாள் அவள் தோட்டத்திலே விளையாடிக்கொண்டிருந்தாள். அங்கே மல்லிகைப் புதரில் ஒரு ஸ்திரீ நின்றுகொண்டிருந்தாள். அவள் ஓர் ஆச்சரியமான ஸ்திரீ. அவளுக்கு இரண்டு இறக்கைகள் இருந்தன. அவளுடைய இறக்கைகளில் ஒன்று அந்தப் புதரில் சிக்கிக்கொண்டிருந்தது. அதனால் அவள் தவித்துக்கொண்டிருந்தாள்.

“இதைக் கொஞ்சம் விடுவி. நீ என்ன கேட்டாலும் தருகிறேன்” என்றாள் அந்த ஆச்சரியமான ஸ்திரீ.

அவளை விடுவித்துக்கொண்டே, “நீ யார்?” என்று கேட்டாள் சுந்தரி.

“நான் கந்தர்வ லோகத்து ஸ்திரீ. தினம் இங்கே வந்து பூப் பறித்துக்கொண்டு போவேன்; இன்று இப்படி அகப்பட்டுக் கொண்டேன்” என்றாள் அந்த ஸ்திரீ.

சுந்தரி அவளை விடுவித்த பிறகு, “உனக்கு என்ன வேண்டும், கேள்” என்றாள் கந்தர்வ ஸ்திரீ.

“உங்கள் ஊர் ரொம்ப அழகாயிருக்குமாமே; அதை நான் பார்க்கவேண்டும்” என்றாள் சுந்தரி.

“சரி, இந்தக் குளிகையை வாயில் போட்டுக் கொள். கந்தர்வ லோகம் போய்ச் சேரலாம்” என்று, அந்த கந்தர்வப் பெண் சொன்னாள். ஒரு குளிகையையும் சுந்தரியிடம் கொடுத்தாள். உடனே மறைந்துவிட்டாள்.

சுந்தரியும் அப்படியே அந்தக் குளிகையை வாயில் போட்டுக் கொண்டாள். உடனே கந்தர்வ லோகத்துக்கு அவள் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

“அடடா! இதோ ஒரு பையன் வந்து விட்டான், பார்த்தாயா?” என்று கந்தர்வ ஸ்திரீகளெல்லாம் கத்தினார்கள்.

“இல்லை; நான் ஒரு பெண்” என்று சொல்லி, சுந்தரி சிரித்தாள்.

“என்ன பொய்!” என்றாள் ஒரு கந்தர்வப் பெண்.

“இங்கே ஆண்கள் வரக் கூடாது. வந்தால், அவர்களை எங்கள் ராணி, பட்டுப் பூச்சியாய் மாற்றி விடுவாள்” என்றாள் மற்றொருத்தி.

“நான் பெண்தான்” என்று மறுபடியும் சொன்னாள் சுந்தரி. ஆனாலும், இவளை அவர்கள் நம்பவில்லை.

சுந்தரியை அந்த கந்தர்வப் பெண்கள், தங்கள் ராணியிடம் அழைத்துச் சென்றார்கள்.



“இந்தப் பையன் ஹத்துமீறி நம் ஊருக்குள் வந்து விட்டான். அதல்லாமல் பொய்யும் சொல்லுகிறான். தான் ஒரு பெண் என்கிறான். இவனை மகாராணி தண்டிக்க வேண்டும்” என்றார்கள் கந்தர்வப் பெண்கள்.

ராணி விசாரிக்கலானாள்: “பொய் சொல்லாதே. நீ பையன்தானே?”

**சுந்தரி:** “இல்லை; நான் ஒரு பெண்.”

**ராணி:** “பாவாடையும் மேலாக்கும் அணியாமல், ஏன் நிஜார் போட்டிருக்கிறாய்?”

**சுந்தரி:** “எங்கள் அப்பா ரொம்ப நாகரிகமானவர். ஆணும் பெண்ணும் சமம் என்று அவர் சொல்லுகிறார். அதனால்தான், இந்த உடை எனக்கு வாங்கித் தந்திருக்கிறார்.”

**ராணி:** “அது போகட்டும். பெண்ணாயிருந்தால், வாரிப் பின்னிப் பூச்சூட்டிக்கொண்டிருப்பாயே? ஏன் உன் தலை கிராப் வெட்டியிருக்கிறது?”

**சுந்தரி:** “கிராப்பா? இல்லை. ‘பாப்’ செய்து கொண்டிருக்கிறேன். வெள்ளைக்காராள் தேசத்தில் இப்படித்தான் செய்வார்களாம். அப்படியே என் தகப்பனாரும் செய்திருக்கிறார்.”

“இப்படிப் பொய்யெல்லாம் சொல்லாதே. நீ ஆண்தான். உன்னைப் பட்டுப் பூச்சியாக மாற்றத்தான் போகிறேன்” என்றாள் ராணி.

“இல்லை. வேண்டாம். என்னை வீட்டுக்குப் போக விடுங்கள்” என்று கத்தினாள். சுந்தரி.

“உனக்கு ஐந்து நிமிஷம் சாவகாசம் அளிக்கிறேன்

அதற்குள் நீ பெண் என்று ரூபிக்கவேண்டும். இல்லையானால், நீ பட்டுப்பூச்சி யாகி விடுவாய்'' என்றாள் ராணி.

சுந்தரி தேம்பித் தேம்பி அழுதாள். என்ன செய்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை. ''நான் பெண். நான் பெண்'' என்று மட்டில் முனகிக்கொண்டிருந்தாள்.

''ஆயிற்று மூன்று நிமிஷம். இன்னும் இரண்டு நிமிஷந் தான் பாக்கி. நீ பெண் என்பதற்கு ருஜு எங்கே?'' என்று கர்ஜித்தாள் ராணி.

தலை குனிந்து, சுந்தரி இன்னும் அழுதுகொண்டே இருந்தாள்.

தோட்டத்தில் கண்ட கந்தர்வப்பெண் இந்த ஸமயந் தான் இவளைக் கண்டுகொண்டாள். அவள் இவளருகே வந்து, யாரும் அறியாமல் காதோடு, ''அந்தக் குளிகையைத் துப்பி விடு; தப்பித்துக் கொள்ளலாம்'' என்றாள்.

இதற்குள் ராணி ''கால் நிமிஷந்தான் பாக்கி; பிடி சாபம்'' என்று மிரட்டினாள்.

சுந்தரி ஆத்திரத்துடன் ''தூ!'' என்று குளிகையைத் துப்பினாள்.

கந்தர்வ லோகம் 'படீர்' என்று மறைந்தது.

தங்கள் வீட்டுத் தோட்டத்திலே, தூக்கம் நீங்கி விழித்தவள் போல, சுந்தரி கண்ணைத் துடைத்துக் கொண்டாள். அவள் தலைக்கு மேலே ஓர் அழகான பட்டுப் பூச்சி 'விர்' என்று பறந்து வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

---

''உண்மை பேசுவதிலே உள்ள ஓர் அழகு என்னவென்றால், என்ன சொன்னோம் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாததுதான்'' என்று ஸெயிண்ட் கினெனட் என்ற ஒரு பெரியாரின் ஞாபக ஸ்தம்பத்தில் எழுதப் பட்டிருக்கிறது.

---

பாலர் பாட்டு



# கடல்

'உமா'

கடலே கடலே கருங்கடலே
கவலை யில்லாப் பெருங் கடலே
அல்லும் பகலும் அலை கடலே
ஆழ முள்ள உவர்க் கடலே
தெள்ளித் தெள்ளி மணல் கொழித்துத்
தினமும் முத்தம் பல கொள்வாய்
மழையும் பெய்வது முன்னாலே
மக்கள் வாழ்வது முன்னாலே
மழையாய்ப் பெய்த நீரெல்லாம்
மண்ணில் நீயே கொண்டிடுவாய்
எல்லை யில்லா உருவுடையாய்
இன்ப வாழ்வே தினமுடையாய்
கண்டு களிக்க வருபவரின்
கருத்தைக் கொள்ளை கொண்டிடுவாய்
உன்னிற் சேரும் கழிபொருளை
உள்ளம் மகிழ்ந்திடக் கொண்டிடுவாய்
உயர்ந்த பொருளாய் மதித்திடுவாய்
உன்னைப் போலே இவ்வுலகில்
உருவில் மாற்ற மடையாமல்
உள்ளத் தன்மை குன்றாமல்
உண்டோ ஒரு பொருள் உவர்க்கடலே?

---

# ஒலியும் ஒளியும்

**டி. கே. ஷி. யும் 'சகுந்தலை'யும்:** அன்று நான் போயிருந்தபோது என்னவோ ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தார். ஏதாவது பாடலை ஞாபகப் படுத்திக் கொள்ளுகிறாரோ வென நினைத்து, "என்ன யோசிக்கிறீர்கள்?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"புதிதாக ஏதாவது சினிமாப் படம் வந்திருக்கிறதா?" என்று டி. கே. ஷி. கேட்டார்.

எனக்குண்டான ஆச்சர்யத்துக்கு அளவில்லை! கவிதைக்கு பாவமும் சங்கீதத்துக்கு ஜீவனும் நடிப்புக்கு உணர்ச்சியும் அவசியம் வேண்டுமென்று கருதுகிறவர் அவர். இந்தக் கலைகளில் துளி ரஸாபாஸம் கலந்தாலும் காணச் சகியார். ஆகையால், "தமிழ்ப் படம் கேட்கிறாரே!" என்று திகைப்புடன் நோக்கினேன்.

**டி. கே. ஷி.:** "திகைக்கும் விஷயம் எனக்குத் தெரியும். ஆனால், நான் இனிமேல் தமிழ்ப் படங்களுக்குப் போக உத்தேசித்திருக்கிறேன். முன்பெல்லாம் ஆங்கிலப் படத்துக்குத்தான் போவது வழக்கம். நல்ல படமாக இருந்துவிட்டால் ஒரு படத்துக்கே நான்கு தடவை போவேன்" என்று உற்சாகத்துடன் சொன்னார்.

"எந்தப் படத்தைப் பார்த்துப் பரவசமடைந்தீர்கள்? அந்தக் காட்சிகள் நெஞ்சை விட்டு நீங்கவில்லையோ?" என்று கேட்டேன்.

**அவர்:** "அந்தக் காட்சியை எப்படி மறக்க முடியும்? ஆகா! அவள் கானகத்தில் பூங்கொடிகளுக்கிடையே ஒரு கொடியாகத் தானும் வளர்கிறாள். அவனோ ராஜ்யத்தை ஆளும் மன்னன். அப்பேர்ப்பட்ட சக்ரவர்த்தியின் இதயத்தில் தனக்கு இடம் கிடைத்துவிட்டது என்று கண்டதும், அவள் கொள்ளும் குதூகலத்துக்கு அளவுமுண்டோ? இதயத்தின் சாயல் தத்ரூபமாக முகத்தில் பிரதிபலிப்பதென்பது சாமான்யமல்ல. உண்மைக் கலை அதுதான்."

சகுந்தலையின் நடிப்பைப் பற்றித்தான் இவ்விதம் காவ்யரீதியில் வர்ணிக்கிறார் என்று தெரிந்துகொண்டேன்.

**டி. கே. ஷி.:** "என்ன சொன்னேன்? ஆம், மன்னனிடம் மயங்கியது முதல் கட்டம். ஒரு இள மங்கையின் முதல் காதலின் பரவச நிலையைத் தத்ரூபமாகப் பார்த்தோம். சரி, பிறகு ராஜ சபையில் துஷ்யந்தனுக்கு முன்னால் சகுந்தலையைச் சந்திக்கிறோம். அப்போது அவள் படுகிற பாடு! அப்பப்பா! துயரமும் கோபமும் ஏமாற்றமும் மாறி மாறி வந்து மோதுகின்றன; வார்த்தைகள் உள்ளத்தின் அடியிலிருந்து குமுறிக்கொண்டு வருகின்றன. அகக் கொந்தளிப்பை அப்படியே காண்கிறோம். நடிப்பென்றால் அதுதான் நடிப்பு. கடைசியாக — ஆகா! அந்தத் தோற்றம்! நம் ஹிந்துப் பெண்களுக்கே இயற்கையாக அமைந்ததல்லவா? கணவனால் நிந்திக்கப்பட்டு, தனித்து விடப்பட்ட சகுந்தலை கறுப்பு உடையுடன் காணப்படுகிறாள். கூந்தல் வாரி விடப்படாமல் கிடக்கிறது. தேகம் முழுதும் சோகச் சாயலுடன் விளங்கினாலும் — அந்த முகம் — நான் எப்படி வர்ணிக்கட்டும்? 'தேவதை' என்றுதான் சொல்லவேண்டும். முடிவில் துஷ்யந்தன் தேடிக்கொண்டு வருகிறான். சகுந்தலைக்குப் பலவித உணர்ச்சிகள் கொப்புளித்துக் கொண்டு வருகின்றன. கோபம், துக்கம் எல்லா உணர்ச்சிகளுமே அற்புதமாக நடிப்பில் வந்து விட்டன. முடிவில், ஆறுதல் உண்டாகிறது. இப்படி ஆறுதலுடன் சாந்தமடைவது பெண்களுக்குத் தான் முடியும். இந்தத் தத்துவங்களுக்கு இலக்கியமாக, உன்னதமாக நடித்த எம். எஸ். சுப்புலக்ஷ்மியை எவ்வளவு தூரம் புகழ்ந்தாலும் தகும். திருப்புகழ்மணியோடு சகுந்தலை பொன் விழாவிலிருந்து திரும்புகையில், அவர், 'படத்தை இன்னும் பார்க்கவேண்டு'மென்று சொன்னார். எனக்கும் போகவேண்டுமென்றிருக்கிறது. போகும்போது உன்னையும் கூட்டிக்கொண்டு போகிறேன்."

சிரித்துக்கொண்டே, "சரி" என்றேன். இன்னொரு விஷயத்தையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை: "தமிழ்ப் படங்களைப் பார்ப்பதிலே ஒரு ஆவலைத் தூண்டிவிட்ட எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கு வெகுமதி அளிக்கவேண்டாமா?" என்றேன். டி. கே. ஷி. புன்னகையுடன், "ஆம், வேண்டியதுதான்" என்று சொன்னார்—**'ரதி'**

* *

**குழந்தை நடன ராணி:** 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்று சொல்லும் பழமொழி ரொம்ப உண்மையானதுதான். ஆரம்பத்தில் எந்தக் காரியத்துக்கும் அறிகுறிகள் தோன்றுவது இயல்பு. **காரைக்காலம்மையாரைப்** பற்றியும் இந்தக் குறிப்பை வைத்துச் சொல்லிவிடலாம். அந்தப் படத்தில் நல்ல நடிக கோஷ்டி சேர்ந்திருக்கிறது. கதை அமைப்பு, சம்பாஷணை எல்லாம் மிகவும் அற்புதம். இன்னொரு விசேஷம் என்னவென்றால், பால் மணம் மாறாத ஒரு பாலிகை தன் நாட்டியத்தின் மூலம் நம்மைக் களிப்படையச் செய்யப் போகிறாள். இந்தக் குழந்தையின் பெயர் வல்லபாய். பிரபல



**ஏ. சகுந்தலா**
'பிருதிவிராஜ்' சரித்திரப் படத்தில் சம்யுக்தையாகத் தோன்றி மக்கள் மனதை மகிழ்விக்கப் போகிறார்.

நாடக நடிகையான டி. எம். கமல வேணியின் குமாரி இந்தக் குழந்தை. எட்டு வயதுக் குழந்தையாக இருந்தாலும், நாட்டியத்தில் ஒரு 'நடனராணி'யாகக் காட்சி அளிக்கிறாள். முக பாவமும் கைச்

சாதுர்யமும் வளைவு நெளிவும் பிற கலா அம்சங்கள் அனைத்தும் இக் குழந்தைக்குப் பரிபூரணமாக அமைந்திருக்கின்றன. சமீபத்தில் ரஸிகர்கள் நிறைந்ததொரு சபையில், வல்லபாயின் நடனக் கச்சேரி இனிது நடைபெற்றது. இந்தப்



காரைக்காலம்மையாரில் நடிக்கும் செல்வி வல்லபாய்.

பாலிகையைப் பாராட்டாதவரே கிடையாது. எல்லோரும் மனதார வாழ்த்தினர்கள்.

* *

பேமஸ் டாக்கி ரிலீஸான என் மனைவி, காண்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம். மனதை வசீகரிக்கும் உன்னதமான கட்டங்களும், பாட்டும் நடிப்பும் நம்மைப் பரவசப் படுத்தும். கே. சாரங்கபாணி, கே. மகாதேவன், கே. ஆர். செல்லம், எம். கே. மீனலோசனை மற்றும் பலரும் அற்புதமாக நடித்துள்ளார்கள். ப்ரகதி ஸ்டூடியோவில் தயாரான படம்.

* *

**கிருஷ்ண பிக்சர்ஸ் பிரபாவதியில்** எஸ். பி. எல். தனலட்சுமி, டி. ஆர். ராஜகுமாரி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் முதலியவர்கள் தோன்றுகிறார்கள் என்றால், ரஸிகர்களின் மகிழ்ச்சியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

* *

**அல்லி விஜயம்** தலைசிறந்த தமிழ்ப் படமாக விளங்கும் என்று அன்பர்கள் எதிர்பார்ப்பது சகஜம். ஏனென்றால், பாய் சகோதரிகள் இதில் நடிக்கிறார்கள். பாய் சகோதிரிகளின் நடிப்பைப்பற்றி அதிகமாகக் கூற வேண்டியதில்லை. ஆயிரக் கணக்கான மக்களைத் தங்கள் நடிப்பின் மூலம் அவர்கள் கவர்ந்திருக்கிறார்கள். அதோடு மற்ற நட்சத்திரங்களும் தங்கள் தங்கள் முழுத் திறமையையும் காட்டி இருக்கிறார்கள். எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, காளி என். ரத்னம், அங்கமுத்து, டி. எஸ். துரைராஜ் ஆகியவரும் சிறப்பாக நடித்துள்ளார்கள். செல்லம் டாக்கீஸின் இந்தப் படத்தில் பல ரஸங்களையும் ரஸிகர்கள் அனுபவிக்கலாம்.

* *

**ரஸிகர் முதலாளியாகிறார்:** கலை உலகத் தொழிலில் ஈடுபடுகிறவர், கலா நிபுணராய் இருந்து விட்டால், அது ரஸிகர்களுக்கு ஒரு பாக்கியம் என்பதில் சந்தேகமில்லை. அந்தப் பாக்கியத்தை அளிப்பவர் ஸ்ரீ வி. எஸ். எம். கோபால கிருஷ்ண ஐயர். இவருடைய தந்தை வி. எஸ். கே. முத்துராம ஐயர் (மதுரை முனிசிபல் மாஜி சேர்மன்) அவர்களைப் போலவே, தமிழ் இலக்கியத்தில் புதல்வருக்கும் அபாரமான பாண்டித்யம் அமைந்திருப்பதோடு, சமூகச் சீர்திருத்த வாதியாகவும் இவர் விளங்குகிறார். பிடில், மிருதங்கம், வாய்ப்பாட்டு முதலியவைகளையும் முறையாகக் கற்றிருக்கிறார். குடும்ப சகிதம் இந்தியா முழுவதும் பிரயாணம் செய்து அனுபவ அறிவும் பெற்றிருக்கிறார். சினிமாக் கலைக்குப் புத்துயிரளிக்க வேண்டி 'ஹரன் டாக்கீஸ்' என்னும் கம்பெனியை ஸ்தாபித்ததோடு, 'பிருதிவிராஜ்' என்ற மகோன்னதமான சரித்திர படத்தையும் இப்போது இவர் தயாரித்திருக்கிறார்.

* *

கே. எஸ். எஸ். பிக்சர்ஸ் அண்டு சுந்தரம் ஸ்டூடியோஸ் தயாரிப்பான கங்காவதாரில் வஸந்தகோகிலத்தின் கான வெள்ளத்தோடு, காளி என். ரத்னம், டி. எஸ். துரைராஜ், நாகர்கோயில் மகாதேவன், பி. ஜி. வெங்கடேசன், எம். ஆர். சுவாமிநாதன் முதலியோரின் நடிப்பும், பாட்டும் கலந்து சோபிக்கச் செய்கின்றன. சி. கே. ஸாச்சி மிக நன்றாக டைரக்ட் செய்திருக்கிறார். விநியோகிகள் கே. எஸ். எஸ். பிக்சர்ஸ். வெளியூர்களில் இதற்குண்டாகும் விமரிசையைப் பார்த்தால், உன்னதப் பட வரிசையில் கங்காவதாரும் சேர்ந்துவிடும் என்று எண்ண இடமேற்படுகிறது.

**புது நட்சத்திர உதயம்:** டைரக்டர் கே. சுப்ரமண்யம் ஒவ்வொரு படத்திலும் ஒரு புது நட்சத்திரத்தைச் சிருஷ்டிப்பது வழக்கம். அனந்த சயனத்திலும் அம்மாதிரி வி. என். ஜானகி என்னும் ஒரு புது நட்சத்திரத்தைச் சிருஷ்டித்திருக்கிறார். இதில் இன்னொரு விசேஷமென்னவென்றால், ஸ்ரீ கே. சுப்ரமண்யம் இந்தப் படத்தில் தாமும் தோன்றி அற்புதமாக நடித்திருக்கிறார். சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல், டைரக்டரோடு எஸ். டி. சுப்புலக்ஷ்மியும் தோன்றிப் பார்ப்போரைப் பரவசப் படுத்துகிறார். பட்டு ஐயர் (அம்மாஞ்சி), எம். வி. ராஜம்மா முதலியவர்களும் நம்மைக் களிப்பில் ஆழ்த்துகிறார்கள்.

* *

**உமா பிக்சர்ஸ் தமிழறியும் பெருமாள்** தமிழ் மக்களிடையில் பெருங் கீர்த்தி பெற்றுவிடும் என்று தெரிகிறது. பாட்டும் நடிப்பும் காட்சிகளும் கதைப்போக்கும் அற்புதமாக அமைந்திருக்கின்றனவாம். எல்லா ரஸங்களும் இதில் இசைந்திருக்கின்றன. எம். ஆர். சந்தான லக்ஷ்மி, எம். எஸ். தேவசேனா, வி. ஏ. செல்லப்பா, ஆர். பாலசுப்ரமண்யம், டி. எஸ். துரைராஜ், காளி என். ரத்னம் முதலியோர் சிறப்புடன் நடித்திருக்கிறார்கள். நியூடோனில் தயாரான இந்தப் படத்தை உயர்ந்த முறையில் டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்திருக்கிறார்.



'அனந்த சயன'த்தில் டைரக்டர் ஸ்ரீ கே. சுப்பிரமணியம் நடிகராகவும் தோன்றுகிறார்.

Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited (Shanti Press), 46, Muthumari Chetti Street, G.T., Madras. Joint Editor: T. J. Ranganathan.

# ஸி. ஏ. க்யூ.

## உங்களுக்கு எப்போதும் பாதுகாப்பளிக்க

நோய்கள் நம்மை அணுகாமல் தடுப்பதில் ஸி. ஏ. க்யூ. எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைச் சென்ற 30 வருஷங்களுக்கு மேலாக இதற்கு இருந்துவரும் பிராபல்யம் நிரூபிக்கிறது. இன்ப்ளுயன்ஸா, டிங்கி ஜுரம், ஜலதோஷம், மார்சளி முதலிய உபாதைகளைக் குணமாக்குவதில் இன்று ஸி. ஏ. க்யூ. தலை சிறந்து விளங்குகிறது. இதில் ஒரு டோஸ் சாப்பிட்டதுமே குணமேற்படுகிறது. டாக்டர்கள் எல்லோரும் க்ஷேமமான, நிச்சய குணமளிக்கும் மருந்தென்று இதை சிபார்சு செய்கிறார்கள். ஜலதோஷம், மார்சளி, இன்ப்ளுயன்ஸா முதலியவைகளைத் தடுப்பதில் ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஸி. ஏ. க்யூ. நிகரற்றது.

ஒரு புட்டி விலை ரூ. 1
மாத்திரைகள் ஒரு டப்பா அணா 14

**ஸ்பென்ஸர் & கோ., லிமிடெட்,**

சென்னை

மருந்து தயாரிப்பவர்கள்




" ஸி. ஏ. க்யூ." இது ஒன்றேதான். அதைத் தயாரிப்பது ஸ்பென்ஸர் கம்பெனியார்தான்.

---

அனங்கன் எய்யும் அம்பு ஓர் புறம்
அணங்கு எய்யும் அம்பு ஓர் புறம்
அனல் இருபுறம் — ஆபத்பாந்தவா!
அனந்தா! காப்பது உன் பாரம்

} அர்ஜுனன் காதல் நாடகம்

★

பாய் சகோதரிகள்
M. R. கிருஷ்ணமூர்த்தி
காளி N. ரத்தினம்
அங்கமுத்து
துரைராஜ்

★




இவ்வருஷத்தின் உன்னதப் படத் தயாரிப்பு
சீக்கிரம் முக்கிய இடங்களில் திரையிலிடப்படும்

## செல்லம் டாக்கீஸ்

ஜயா மான்ஷன்ஸ்
பி.டி., மதராஸ்

மில்ரோடு
கோயமுத்தூர்

# எங்களிடம் கிடைக்கும்

## புத்தகங்கள்

134795

**தாமரைக் குளம் முதலிய கதைகள் 1-12-0**

சுவாமி சுத்தானந்த பாரதியாரால் எழுதப்பட்ட இப்புத்தகத்தில் அடங்கியுள்ள அத்தனை கதைகளும் தமிழரைப் பற்றியது, தமிழருக்கே உரியது. தமிழரின் பெருமையை நிலை நாட்டுவது. தேசப் பற்றுதலும், வீர சௌந்தரியமும், சுதந்திர தாகமும் ஊட்டக்கூடியவை,

**திருக் காட்சி 0-4-0**

சுவாமி சுத்தானந்த பாரதியார் கன்யா குமரிக்குச் சென்றிருக்கையில் அவரது கனவில் உதித்த பாரததேவியின் திருக் காட்சியைப் பாடியிருக்கிறார்.

**கதைக் கோவை 4-0-0**

50-பிரபல ஆசிரியர்களுடைய கதைகள் அடங்கியது.

**வள்ளுவர் குலமும் அவர் வாய் மொழியும் 1-0-0**

இனிய செந்தமிழ் நடையில் மிக அழகாக எழுதப் பெற்றுள்ளது. அரிய ஆராய்ச்சியும் கருத்து வளமும் கொண்டது. வள்ளுவரைப் பற்றி அறிந்து கொள்ள தமிழன்பர்களுக்கு இது அரிய சந்தர்ப்பம்.

**வேத மதமும் மனஸ் தத்துவமும் 2-0-0**

இந்நூல் இந்து மதத்தைப் பற்றி குற்றம் கூறுவோர்களின் அவிவேகத்தை நீக்கி, அவர்களுக்கு இம்மதத்தில் திடமாகிய நம்பிக்கையை உண்டாக்கும் அரிய தன்மையை யுடையது.

**ப்ரம்ஹ வித்யா ரஹஸ்யம் 1-6-0**

அஞ்ஞான இருளைப் போக்கி பரம் பொருளின் உண்மைத் தத்துவத்தை உலகினருக்கு எடுத்துக் காட்டும் சிறந்த நூல்.






ஒவ்வொரு தடவை பல் துலக்கும்போதும் உங்கள் தேகம் பூராவுமே நன்மை பெறுகிறது. கமகமவென்று வாசனை வீசி ஆனந்தமாய் நுரை கொடுக்கும் பற்பசை இதோ இருக்கிறது. பற்களின் சிறு இடுக்குகளிலெல்லாம் புகுந்து, பல்லை அது பாலிஷ் செய்கிறது. மேலும், அயோடின் சத்து அதில் இருப்பதால், அதை ஈறுகளும் வியர்வை உறுப்புகளும் கிரகித்துக்கொண்டு நன்மை செய்கின்றன.

'அயோடின்' பல் வியாதிகளைப் போக்கடிக்கும் சக்தி யுடையது. ஆகையால் 'ஐடோகால்' பற் பசை, பையோரியா, ஸ்கார்புலா, கேடாராக், காய்டர் முதலிய வியாதிக்காரர்களுக்கு அனுகூலம் செய்கிறது.

ஐடோகாலில் நமது முக்கிய அம்சங்களான (1) தைராய்ட் (2) அயோர்டா (3) லிவர் (4) வயிறு (5) முகஸ் மெம்ரேன் முதலியவைகளுக்கு அவசியமான அளவு அயோடின் சேர்ந்திருக்கிறது.

**Idocol**

AVAILABLE EVERYWHERE

*Trade Enquiries to:*—**EZRA BROS.**, Mustafa Bldg, Sir P. Mehta Road, Bombay 1.

**FAMOUS IN INDIA AND ON THE CONTINENT**

Madras Stockists :—LOANE SQUARE PHARMACY
160, BROADWAY, MADRAS

**சக்தி காரியாலயம்**

ஜார்ஜ் டௌன், சென்னை

கிளை ஆபீஸ் :

வடக்கு வெளி வீதி, மதுரை

திக் விஜயம் கிளம்பி விட்டது!





நாள் முழுதும் மணம் கமழு

# மைசூர்

சந்தண சோப்

மைசூர் சந்தண சோப்பின் ரம்யமான மணம் அதற்குப் பிரத்யேகமானது. ஸ்நானத்திற்கே ஒரு தனி சுகத்தையும் ஒரு அலாதி கௌரவத்தையும் தருகிறது. அழகுதானே கலை! அதைத்தான் மைசூர் சந்தண சோப் உங்களுக்கு அளிக்கிறது. நின்று மணக்கும் அதன் துல்லிய மணமும் மேனியை அழகு படுத்திக் காப்பாற்றும் அதன் குணமும் ஒப்பு உயர்வற்றவை. பண்டைக் காலம் தொட்டு, சந்தணம் ஒரு இன்றியமையாத வாசனைத் திரவியமாகக் கருதப்பட்டு வருகிறது. இன்றே சந்தணத்தின் கந்தமும் மங்கள குணங்களும் மைசூர் சந்தண சோப்பிலேயே அமைந்திருக்கிறது.




எப்பொழுதும் எங்கும் கிடைக்கும்

தென் இந்தியாவுக்கு ஸோல் ஏஜண்டுகள்

பெஸ்ட் & கம்பெனி லிமிடெட், சென்னை